
மாலா
ஜூன்-1960
25 காசு

# கேச பராமரிப்பு- ஒரு கலை

அடர்ந்து வளர்ந்த கேசம் தோற்றத்திற்கு என்றுமே தனி அழகை அளிக்கிறது. கேச அழகு தானாக ஏற்படுவதில்லை. மிகுந்த கவனத்துடன் சிறந்த சாதனமான **கேசவர்த்தினியை** விடாது உபயோகிப்பதால் அது மிளிர்ந்து வளருகிறது.

**கேசவர்த்தினியை** நீடித்து உபயோகியுங்கள். உங்களுடைய கூந்தல் அடர்ந்த கருமையோடு வளருவதுடன், தனி சோபையும், மென்மையும் பெறும்.

நிறைந்த கூந்தல் வளர்ச்சிக்கு
நிகரற்றது கேசவர்த்தினி

# கேசவர்த்தினி

ஹேர் ஆயில், ஷாம்பூ, கண் மை

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூ

769




நடம்புரியும் பாரதச் சிலம்பொலியோ

# வடிவழகி நீயென்ற வாழ்த்தொலியோ!

ஒலிதனிலே இசைவளர்த்த அழகைப் போலே உடல்தனிலே எழில் வளர்த்த பாரதப் பெண்ணே! பொலிவழகால் புகழ்வளர்த்த பெருமை கொண்டாய்; பொன்னுடலைப் போற்றினையோ, பாரதப் பெண்ணே! நேர்த்தியான மேனியழகு இல்லையேல், பூர்த்திபெற்ற அழகில்லை என்பதை உணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய ராகினி கூறுகிறார்: 'அதனால்தான், மென்மைகுலவும் லக்ஸ் சோப்பின்மீது எனக்கு நம்பிக்கை. மணங்கமழும் அதன் நுரை எனது மேனியை மிளிரச் செய்கிறது.'

சினிமா நட்சத்திரங்களின் **LUX** TOILET SOAP தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 54-X29 TM

# Nutrine மிட்டாய்கள்

## சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும்
நியூட்ரைன் டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.
காரணம், டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப் படுகின்றன.
அறைகுறயாக நிரப்பப்படுவதில்லை.

**நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்.,**
**சித்தூர், ஆந்திர பிரதேசம்**

# சிறுதாளும் பெருஞ்செல்வம்



ஆயுள் இன்ஷ்யூரன்சு பெறுகின்றபோது நீங்கள் அடைவது ஒரு சிறுதாளே! சில காசுகள் கூடப் பெறுமோ. என்னவோ என்று எண்ணத்தக்க ஒரு சிறு தாளே! ஆனால் அதன் மதிப்போ ஈடற்றது; இணையற்றது. காரணம் உங்கள் குடும்பத்தின் வருங்காலப் பாதுகாப்பிற்குத் துணை நிற்கும் ஆயுள் இன்ஷ்யூரன்சுப் பாலிசி அது!

வாரத்திற்கு ஒரு ரூபாயாவது சேமியுங்கள். சிறு துளியும் பெரு வெள்ளம் ஆகுமன்றோ! முதுமைக் காலத்திற்கோ, முன்னேற்பாட்டோடு திட்டம் வகுத்து இருந்தால் உங்கள் அன்புத்திருமகளின் திருமணத்திற்கோ, செல்வக் குழந்தையின் கல்விக்கோ, பெரிதும் தேவையானபோது உங்களுக்கோ, உங்கள் குடும்பத்திற்கோ உதவப் பணம் கிடைக்கும்.

*இந்திய அரசினரின் உத்திரவாதமும் உறுதியும் கொண்டது. எனவே அது ஒரு அருமையான. அளவற்ற மதிப்பு வாய்ந்த பத்திரம் ஆகும்.*

## ஆயுள் இன்ஷ்யூரன்சு

—நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே
நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்.

EP/LIC/SZ/11

*pride of place*
*for*
*durability*



There is nothing to beat Mettur Mulls and Long Cloth for sheer durability. Naturally, those who want white cloth which wears longest, prefer Mettur Mulls and Long Cloth. Look for the METTUR sign, mark your dealer and buy with confidence at fixed and economical prices.

# Mettur Mulls & Long Cloth

*Manufactured by:*
**METTUR INDUSTRIES LTD.**
Mettur Dam R.S.—Salem District.

*Managing Agents:*
**W. A. BEARDSELL & CO. (PRIVATE) LTD.,**
**MADRAS-1.**

EP

தந்தி : நாட்டியமாலா  போன் : 71669

# மாலா

தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை

போஷகர்:

**வைஜயந்திமாலா**

நிர்வாக ஆசிரியர் :

எம். டி. ராமன்

ஆசிரியர் :

எஸ். எஸ். சர்மா

துணை ஆசிரியர் : த. ரா. ரா.

★

**தனிப் பிரதி 25 காசுகள்**

**(அணா 4)**

**வருட சந்தா ரூ. 3/-**

பிரதி மாதம் 10ம் தேதி மாலா எங்கும் விற்பனைக்குக்கிடைக்கும்

பர்மா, மலேயா நாடுகளுக்கு மட்டும்

**தனிப் பிரதி அணா 6**

அந்தந்த ஊர் ஏஜண்டுகளிடம் மாலாவை மாதந்தோறும் வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ''ஹிக்கின்பாதம்ஸ்'' "சுதேசமித்திரன்'' ரயில்வே புஸ்தக ஸ்டால்களில் எமது மாலா விற்பனைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

★

தபால் மூலம் மாலாவை வரவழைத்துக் கொள்ள கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விபரம் : **மாலா**

சதர்ன் அவின்யூ.

ஆழ்வார்பேட்டை,

தபால்-பெட்டி நெ. 1452

மதருஸ்–18.

# மாலா

மாலா 10 | ஜூன் 1960 | மலர் 8

## பொருளடக்கம்

★

உலகம் உய்ய —தலையங்கம்

கட்டுரை

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் —எல்லார்வி

கதைகள் ;

மிஸ். பீஷ்மாச்சாரிணி—கிருஷ்ணா

அப்பாவின் கடிதம் — எஸ். வைத்தியநாதன்

நீறு விலகினால் — ஸரோஜா ராமமூர்த்தி

நாடகம்

கைக்கு எட்டியது —ஏ. வி. ஸ்ரீநிவாஸன்

தொடர் கதை

திருவிளக்கு --விக்கிரமன்

ஜோதிடப் பகுதி :

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம்

மற்றும் இதர அம்சங்கள்,

குறிப்பு—மாலாவில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.




போஷகர் : வைஜயந்திமாலா

மாலா 10 | ஜூன் 1960 | மலர் 3

சென்னை 600 008

# உலகம் உய்ய

உலகம் உய்ய வழி உண்டு என்ற நம்பிக்கை சிறிது காலத்திற்கு முன் ஏற்பட்டிருந்தது. அமெரிக்க, ரஷ்ய நாட்டு அதிபதிகளிடையே நேசம் ஏற்பட்டு உலக நெருக்கடி தீர்க்கப்படலாம் என்று உலக மக்கள் எண்ண சந்தர்ப்பங்களும் கிடைத்தன. அந்த சூழ்நிலையிலேயே பெருந்தலைவர்கள் மகாநாடுகூடப் போகும் அரிய சந்தர்ப்பத்தையும் உலகமக்கள் ஆவலோடு எதிர்பார்த்து நின்றனர். ஆனால்...... ஆம் பெரிய ஆனால்தான். மகாநாடு கூடுவதற்குமுன் நிலைமை மாற வாரம்பித்தது துரதிஷ்டவசமதான். திடீரென்று அமெரிக்க விமானம் ரஷ்யாவில் வேவு பார்க்க வந்த விஷயம் கிளம்பிற்று. இதன் பின்னர் நிலைமை மாற்றமாயினும் பெருந்தலைவர்கள் மகாநாட்டிற்காக பாரிஸில் தலைவர்கள் வந்தனர். ஆனால் ரஷ்ய பிரதமர் குருஷேவ் ஒரு பிரச்னை பூதத்தை ஏவி விட்டார். அதனாலோ மற்று எவரது திருப்பணியின் காரணமோ இம்மகாநாடு கூடாமலே கலைந்து செல்லும் நிலை ஏற்பட்டது. இம்மகாநாடு கூடாமலே முறிந்ததற்கு ஒருவரை யொருவர் குற்றம் சாட்டுவதிலே இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே உண்மையிலேயே சமாதானத்திற்காக காரியத்தில் இறங்குகிறார்களா வல்லரசுத் தலைவர்கள் என்ற ஐயம் பிறக்கிறது. இவர்களுக்கு உண்மையில் மனமாற்றம் ஏற்பட்டு தூய உள்ளத்துடன் சமாதானப் பணியில் இவர்கள் இறங்காவிடின் உலகத்தைக் கடவுள்தான் காக்கவேண்டும். அந்தக் கடவுள்தான் இவர்களுக்குப் போதிய விவேகத்தை அளித்து நல்வழிக்குக் கொணர வேண்டும். அதோகதி வழியான போர் மார்க்கத்தை கையாண்டு மானிடவர்க்கத்தின் நாசத்திற்குப் பாடுபட முனைவதில் ஒரு நாட்டிற்கும் பலனில்லை. சர்வ நாசத்தைத் தவிர்க்க இனியாவது உள்ளத்திலே தெளிவு, உண்மை, சமாதானத்தை நிலை நிறுத்த உறுதி இவைகளுடன் பிரச்னைகளை அணுகுவார்களாக!



# இறை அமர் கலைக் கோயில்

**சோழ** அரசன் ஒருவனால் கட்டப்பட்டு பெருமையுடன் விளங்கி வந்து சிதலம் அடைந்து நின்றாலும் கவின் குன்றாது விளங்கி வருகிறது தாராசுரத்திலிலுள்ள ஐராவதேஸ்வரர் கோயில். கோயிலுள்ளே எங்கு திரும்பினும் சிற்பிகளது கைவண்ணத் திறனைத்தான் காண்கிறோம். சிறிய உருவங்களாயினும் சரி பெரிய சிலைகளாயினும் சரி அழகுமயமாய்த்தான் விளங்குகின்றன சிற்பங்கள். காலன், சாபம் தீர ஈஸ்வரனை பூஜித்த க்ஷேத்திரம் இது.



கோயிலின் பிரதான மண்டபத்திலே தூண்களிலே காணப்படும் நடன நிலைச் சிற்பங்கள், மீனாக்ஷி கல்யாணம், சிறு விக்கேனஸ்வரர் நம்மை பிரமிக்க வைக்கின்றன. அன்னபூரணி சிலையிலே கைகளில் ஓடும் நரம்புகள் நகங்கள் முதல் காண்பித்துள்ளார் சிற்பி. இறைவன் திருக்கோயில் பெரிய கலைக்கோயிலுமாகும்.



மேலே கோயிலின் கர்ப்பகிரகத்தின் கோபுரம், நடுவிலே பிரதான மண்டபம்; கீழே யானைத் தலையும் மாட்டின் தலையும் ஒருங்கே அமைக்கப்பட்ட சிற்பம் ஆகியவற்றைக்காணலாம்.

புகைப்படங்கள்
—டி. ஆர். ஆர்.

## மகாவித்துவான்

# திருக்கோடிகாவல் கிருஷ்ணயர்

— எல்லார்வி —

### முன்னுரை

அன்பர் ஒருவர் என்னிடம் வந்தார். "நீங்கள் செய்து வருகிற பணி காலத்தைக் கடந்து நிற்கக்கூடியது. இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை முழு உருவத்திலும், பல கலைஞர்களின் வாழ்க்கையிலே நிகழ்ந்த ருசிகரமான சம்பவங்களைத் தொகுத்தும் நூல் உருவத்திலே வெளியிட்டு வருவது மிகவும் பாராட்டுதலுக்கு உரிய செயல்.

"பாமரர் முதல் பண்டிதர் வரையில் எல்லாருமே இசையை நன்ருக ரஸிக்கிருர்கள். வசதி உள்ளவர்கள் சங்கீத சபைகளிலே கட்டணம் செலுத்திக் கலையை ரஸிக்கிருர்கள். வசதி உள்ளவர்கள் வசதி இல்லாதவர்கள் எல்லாருக்குமே ஆலயம் போன்ற பொது இடங்களில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகள் ஒரு நல்ல வாய்ப்பு. ஆனுல் எல்லாருமே கலையை ரஸிக்கிருர்களே தவிர, கலைஞர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிவதில்லை; அறிய வேண்டும் என்ற ஆர்வமும் பொரும்பாலருக்கு இருப்பதில்லை; அறியத்தக்க வாய்ப்பும் எதுவும் இல்லை. 'குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நீங்கள் கலை நிகழ்ச்சி புரிய வேண்டும்' என்று கேட்கிருர்கள். கலைஞர்கள் ஒப்புக் கொள்கிருர்கள். முன் பணம் அளிக்கப் பெருகிறது கலைஞர்கள் வந்து கலை நிகழ்ச்சி புரிகிருர்கள் மாலை மரியாதை நடைபெறுகிறது. எல்லாரும் ரஸித்து இன்புறுகிருர்கள். நிகழ்ச்சி முடிந்ததும் கலைஞர்கள் சம்மானம் பெற்று இருப்பிடம் செல்கிருர்கள். கலைஞர்களுக்கும் ரஸிகர்களுக்கும் இடையே உள்ள உறவு அவ்வளவு தான்.

"அந்தக் கலைஞர் யார்? எந்த ஊர்? எத்தகைய பரம்பரை? எங்கே பிறந்தார்? எங்கே வளர்ந்தார்? யாரிடம் குருகுல வாசம் செய்தார்? குரு ஒருவரா, பலரா? எத்தனை காலம் குருகுல வாசத்தில் ஈடுபட்டிருந்தார்? அந்தக் காலத்தில் அவருடைய இன்ப துன்ப அனுபவங்கள் என்ன? பொருள் வசதி உள்ள பரம்பரையிலே வந்தவரா? வறுமைப் பிடியில் சிக்கித் திணறும் குடும்பத்திலே பிறந்தவரா? மணம் ஆனவரா? ஆகாதவரா? மக்கள் செல்வம் உண்டா? தற்போதைய பொருளாதார நிலை எப்படி? மற்றவர்களின் கலை ஆற்றலும் இவருடைய கலை ஆற்றலும் ஒரே மாதிரிதானு? தனிச்சிறப்பு ஏதேனும் உண்டா? தனிச் சிறப்புக்காகக் கலைஞர் என்ன பாடுபட்டார்? மாணவப் பரம்பரை வளர்ந்து வருகிறதா? அவர்கள் நிலை என்ன? — ஆகியவைப் பற்றி அறிய ஆவல் உள்ளவர்கள் எத்தனை பேர்?

"பலர் இருக்கிருர்கள் என்றே வைத்துக்கொள்வோம். அறிய வாய்ப்பு என்ன? கர்ண பரம்பரையில் கலைப்பெரியோர்களைப் பற்றி வழி வழியாக வந்து கொண்டிருக்கும் செய்திகளைத் தவிர வேறு ஆதாரம் இல்லை. பலரைப் பற்றிய உண்மையான செய்திகள் மறைந்தே போய்விட்டன. சிலரைப் பற்றிய தகவல்கள் மட்டுமே பெரியோர்களின் வாய்

வழியாக உலவிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலும் இடைச்செருகல் பல. இப்படியே போய்க்கொண்டிருந்தால் கூடிய சீக்கிரத்தில் எல்லாச் செய்திகளுமே அடியோடு மறைந்து போய்விடும்; அல்லது இல்லாத செய்திகள் தோன்றி வளரும். அந்த நிலையைத் தவிர்க்க நீங்கள் செய்து வரும் முயற்சி போற்றத்தக்கது.

'இன்னும் பல காலத்திற்கு முன்பே இம்மாதிரி முயற்சி தோன்றியிருந்தால் இன்னும் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். அதை எண்ணி வருந்துவதில் பயன் இல்லை. இம்மட்டும் நீங்களாவது ஏதோ செய்கிறீர்களே என்று எண்ணி மகிழ்ச்சி பெறவேண்டியதுதான். ஆனால், உங்களுக்கு ஒன்று சொல்லவேண்டும்என்று எனக்கு வெகு நாட்களாக எண்ணம். சொல்லலாமா? தவறாக எண்ணிக் கொள்ள மாட்டீர்களே?'' என்றார்.

நான் சிரித்துக்கொண்டே சொன்னேன். "நீங்கள் பேசிக்கொண்டே வந்த முறையைப் பார்த்தால் இடையில் மூச்சே விடாமல், சுமார் ஒரு மணி நேரம் நீங்களே பேசிக்கொண்டிருந்துவிட்டுப்போய் விடுவீர்கள் என்று நினைத்தேன். நடுவிலே நிறுத்தி ஒரு கேள்வியும் கேட்டீர்களே! அம்மட்டும் சந்தோஷம். என்ன சொல்ல நினைத்தீர்களோ சொல்லுங்கள். நல்லதைத்தான் சொல்லுவீர்கள். அல்லாததைச் சொன்னாலும் எனக்கு ஆயாசம் ஏற்படாது'' என்றேன்.

'தற்போது புகழ் வானில் திகழ்ந்து கொண்டிருக்கிற வித்துவான்களைப்பற்றி எழுதி வருகிறீர்கள்; மகிழ்ச்சி, அத்துடன், மறைந்துபோன மாணிக்கங்களைப் பற்றியும் எழுதவேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை. வாய்ப்பாட்டு, காலக்ஷேபம், வீணை, ஜலதரங்கம் கோட்டுவாத்தியம், புல்லாங்குழல், மிருதங்கம், பரதசாஸ்திரம், கடம், கஞ்சிரா, கொன்னக்கோல், நாடகம், நாகஸ்வரம், தவில், விகடம் முதலிய பல்வேறு துறைகளில் ஆண்களிலும் பெண்களிலுமாக பல மேதைகள் நம் நாட்டிலே வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் அல்லவா? அவர்களை எல்லாம் பற்றி எழுதிவிட்டுப் பிறகு இப்போது உள்ளவர்களைப் பற்றி எழுதலாமே?''

"நீங்கள் சொல்வது நியாயமானது. ஆனால் அதிலே இருக்கிற கஷ்டம் எவ்வளவு தெரியுமா? தற்போது உள்ள கலைஞர்களைப் பற்றிய விவரங்களைச் சரியாக அறிந்து தொகுப்பதே மிகவும் சிரமமாக இருக்கிறது. அவரவர்களைப் பற்றியச் செய்திகள் அவரவர்களுக்கே நினைவில் இல்லை. மற்றவர்களிடமிருந்தும் சரியாக அறியமுடியவில்லை. புதைப் பொருள் ஆராய்ச்சியைப் போல இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டி இருக்கிறது. நிகழ்ச்சிகளிலோ, அவை நிகழ்ந்த இடங்களிலோ, காலங்களிலோ, சம்பந்தப்பட்ட மனிதர்களிலோ மாறுபாடு இல்லாமல் செய்திகளை அறிவதும், யாருடைய மனசும் ஆயாசமுறாத வகையில் அவற்றை அமைத்துத் தொகுப்பதும் பிரயாசை நிறைந்த செயல்களாக இருக்கின்றன. அலைச்சல் மிகுதி; பொருள், நேரம், உழைப்பு, முதலியன நிரம்பச் செலவாகின்றன. இப்படி இருக்கிறபோது மறைந்துபோனவர்களைப் பற்றி விவரம் அறிவது எங்கிருந்து? மணிக்கணக்காகக் கலைப் பெரியோர்களைப் பற்றிப் பேசுகிற கலைஞர்களிலும் ரஸிகர்களிலும் ஒரு சிலர், 'செய்திகளைச் சொல்லுங்கள்' என்று அணுகுகிற போது கூட்டுக்குள் உடம்பைச் சுருக்கிக்கொள்ளுகிற நத்தை

யைப் போலத் தங்களை ஒளித்துக்கொண்டு விடுகிறார்கள். தாங்கள் சொல்வது அச்சேறிவிடும் என்ற ஓர் அச்சமே அவர்கள் அப்படிப் பின்வாங்கக் காரணம். 'பொறுப்பற்ற தன்மையில் வாய் தவறியோ, மறந்தோ எதையாவது சொல்லிவிடக் கூடாதே' என்ற பயம்".

"உண்மைதான். ஆனால் எப்படுபட்டாவது மிகச்சுருக்கமான முறையிலேனும் பெரியோர்களைப் பற்றி நீங்கள் எழுதத்தான் வேண்டும். இப்பொழுதாவது நீங்கள் அதைச் செய்யவில்லையென்றால் இன்னும் அரை நூற்றாண்டுக்குப் பின் அவர்களைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாமலே போய்விடும்.

"முயன்று பார்க்கிறேன்."—அந்த அளவில் அன்பர் சென்றார்.

அவர் சொன்னதில் இம்மியும் தவறு இல்லை. அவர் மட்டுமே இப்படிச் சொல்லவும் இல்லை. எனக்கும் இது தெரியாததில்லை. ஆனால் வகை தெரியாமல் தான் விழித்துக் கொண்டிருக்கிறேன். இறந்த காலத்தை எண்ணிப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறது. எங்கிருந்து ஆரம்பிப்பது? யாரைப்பற்றி முதலில் எழுதுவது? பலநாள் யோசித்தேன். பல அன்பர்களைக் கண்டு பேசினேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மேதையைப் பற்றி ஒரு சில செய்திகளைச் சொல்கிறார்கள். தொடர்பற்ற செய்திகள். விவரம் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள். அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்வது? கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். கிடைக்கிற நிகழ்ச்சிகளையும் அவர்களின் கலைத்திறனையும் பிறப்பு வளர்ப்பு முதலிய குறிப்புக்களையும் ஒன்று படுத்திச் சின்ன அளவிலாவது உருவம் கொடுப்பது என்று துணிந்தேன்.

என்னுடைய தீர்மானத்தை உறுதிப்படுத்துகிற முறையில் அமைந்தது ஒரு நிகழ்ச்சி. வயலின் வித்துவான், சங்கீதரத்ன, சங்கீத கலாநிதி மைசூர் டி. சௌடையா அவர்களைச் சந்தித்து அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்புவதாகச் சொன்னேன. "என் குருநாதரைப் பற்றி முதலில் எழுதுங்கள், என்னைப்பற்றி இப்பொழுது என்ன?" என்றார். அப்படிச் சொன்னதோடு நில்லாமல் அவருடைய குரு பிடாரம் கிருஷ்ணப்பா அவர்களைப் பற்றிய செய்திகளை எல்லாம் வரிசையாக, விவரமாகச் சொன்னார்.

வாழ்க்கை வரலாறு என்றால் என்ன, அதற்குச் செய்திகளை எவ்வாறு கோவைப்படுத்திச் சொல்லவேண்டும் என்பவற்றை அவர் வெகு நன்றாக அறிந்திருந்தார். அதற்குமுன் எத்தனையோ கலைஞர்களிடமும் ரஸிகர்களிடமும் பலபேரைப் பற்றின பலவகையான செய்திகளைக் கேட்டு அறிந்து பயன்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் எழுதும் முறைக்கு எளிதாகச் செய்தி சொன்னவர்களில் சௌடையா அவர்கள்தான் முதல்வர்.

மற்றவர்களிடமிருந்து விவரங்களைக் கேட்டு அறியும்போது ஊர், பேர், இடம், காலம் முதலிய முக்கியமான அம்சங்களை மட்டுமே குறித்துக்கொள்வேன். மற்ற விஷயங்களை மனத்திலே பதித்துக் கொள்வேன். சூடு ஆறுத நிலையில், விஷயங்கள் மறந்துவிடாத நிலையில் உடனடியாகவே உட்கார்ந்து அனைத்தையும் எழுதத் தொடங்குவேன். இடையே ஏதாவது மறந்து விட்டாலோ, சந்தேகம் வந்தாலோ செய்தி சொன்னவர்களை மீண்டும் சந்தித்து சரி செய்து கொள்வேன். சௌடையா அவர்கள் சொன்ன முறையில் எனக்கு மறதியோ சந்தேகமோ ஏற்பட

வில்லை. என்றாலும் மீண்டும் ஒரு முறை சில மாதங்களுக்குப் பின் அவரைச் சந்தித்தேன். முக்கிய மான இரண்டொரு நிகழ்ச்சி களைப் பற்றி வினவினேன்.

அவர் என்ன செய்தார் தெரியுமா? 'அடியைப் பிடியடா பாரத பட்டா' என்ற வசனத்திற் கிணங்க, தம் குருநாதரைப்பற்றி முன்பு சொன்ன எல்லாச் செய்தி களையும் ஆரம்ப முதல் இறுதி வரையில் பளிச், பளிச்சென்று சொல்லிக்கொண்டே போனார். எந்த இடத்திலாவது முன்னுக் குப் பின் முரண்பாடு இருக்குமோ என்று பார்த்தேன். இம்மியள வும் மாறுபாடு இல்லை. ஆஹா! இவரல்லவா வரலாறுஉருவாக்க உதவவல்லவர்! எல்லாருமே இவரைப்போல் இருந்தால் மாதம் ஒன்று வீதம் மளமள வென்று வரலாறுகளை எழுதிக் குவிக்கலாமே' என்று நான் எண் ணினேன். எண்ணுகிறபடியே எல்லாம் நடந்துவிட்டால் மனி தன் பிடிபடுவானு?

பிடாரம் கிருஷ்ணப்பா வரலாறு மாலாவில் தொடராக வெளிவந் தது. அது உருவான சூட்டோடு வயலின் வாத்திய மேதை திருக் கோடிகாவல் கிருஷ்ணையர் வர லாற்றை உருப்படுத்த எண்ணி னேன். அதற்கு ஏற்ப அவரைப் பற்றின நிகழ்ச்சிகள் சிலவும் என்னிடம் சேர்ந்திருந்தன. அவற்றில் பெரும்பாலானவற் றைச் சங்கீத வித்துவான் உமை யாள்புரம் கல்யாணராமையர் அறிவித்திருந்தார். மற்றும் சில அன்பர்களும் சில நிகழ்ச்சிகளைச் சொல்லியிருந்தார்கள். ஆகவே அவருடைய வரலாற்றை எளி தாக உருவாக்கி விடலாம் என்ற நம்பிக்கையுடன் முயன்றேன். அதைப்பற்றிச் சிலரிடம் பிரஸ் தாபித்தபோது, திருக்கோடி காவல் கிருஷ்ணையர் அவர்களின் இளைய குமாரர் ஸ்ரீநிவாசையர் கிராமத்தில் இருக்கிறாரே; அவ ரிடம் சென்றால் எல்லா விவரங் களையும் நன்கு அறிந்து வர லாமே' என்றார்கள்.

பிழைப்பைக்கருதிச்சென்னையில் வாழ்ந்துவருபவர் நினைத்தவுடன் வெளியூருக்குப் போய் வருவது என்பது எளிதான செயல் அல் லவே? தகுந்த வாய்ப்பை எதிர் பார்த்திருந்தேன். 1956 ஜூனில் அந்த வாய்ப்புக் கிட்டிற்று. திரு மணம் ஒன்றை நிச்சயிக்கும் பொருட்டு மாயூரம் சென்றிருந் தேன். அந்த அலுவல் நிறை வேறிய மறுநாள் பிற்பகலில் மாயூரத்திலிருந்து பஸ்ஸில் திருக்கோடி காவலை நோக்கிப் பயணப்பட்டேன்.

'உலகம் கொண்டாடும் ஒரு பெரிய இசைமேதை வாழ்ந்த ஊருக்குப் போகிறோம்' என்ற நினைவு என் உள்ளத்திலே பல விதமான உணர்ச்சி அலைகளை எழுப்பிவிட்டது.

மேதைகள் தோன்றிய இடம், வாழ்ந்த இடம் செயல் புரிந்த இடம் முதலியன புனிதமாகக் கருதத் தக்கவை. அவர்கள் ஆண்ட பொருள்களும் அப் படியே சிறப்புடையன. அவர் களோடு தொடர்புகொண்டிருந்த எல்லாருமே கொண்டாடத் தக்க வர்கள். ஆகவே, 'மேதை வாழ்ந்த இடத்திற்குச் செல்கி றோம். அவருடைய வீட்டைக் காணப்போகிறோம்; சந்ததியார் களைப் பார்க்கப் போகிறோம்; அவர்களோடு அளவளாவப் போகிறோம்' என்கிற நினைவு களில் நான் திளைத்துக் கொண் டிருந்தேன்.

'புழக்கடைப் பச்சிலை' என்ற சொல் எவ்வளவு கருத்தை உடையது! பிரபலமான க்ஷேத் திரம், புனிதமான நதி தீரம் முதலியவற்றில் பலகாலமாக வாழ்ந்து வருகிறவர்கள் அனை வருமே அந்தப் புண்ணிய நதி யில் நீராடி புனித மூர்த்தியைத் தரிசித்துப் புண்ணியம் சேர்ப்பார் கள் என்று உறுதி சொல்ல

முடியாது. நூற்றுக் கணக்கான மைல்களுக்கும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கும் அப்பாலிருந்தெல்லாம் அந்த க்ஷேத்திரங்களுக்கு மக்கள் பலரும் வருவார்கள், நதியில் மூழ்குவார்கள்; கடவுளை வணங்குவார்கள்; தானம் தருமம் முதலிய நற்செயல்களைப் புரிவார்கள், அதே சமயத்தில் உள்ளூர் வாசிகளில் ஒரு சிலர் ஏதாவது அலுவலை முன்னிட்டு வெளியூர்களுக்குச் சென்றிருப்பார்கள். வேறு சிலர் ஊரிலே இருந்தாலும் நீராடச் செல்லமாட்டார்கள்; ஆலயத்திற்குப் போகமாட்டார்கள். இன்னும் சிலர் மற்றவர்களுக்கு ஒப்பிக்கும் முறையில் அந்தச் செயல்களை இயந்திரங்களைப் போலப் புரிவார்கள்.

ஆனால் அப்படிப்பட்டவர்களே பின் ஒரு காலத்தில் அந்த ஊர்களைவிட்டு வெளியேறி வேற்றூர்களில் சென்று வசிக்கநேர்ந்தால் அப்போது தாங்கள் அதுவரை இருந்த க்ஷேத்திரத்தின் மகிமையையும் தீர்த்தத்தின் சிறப்பையும் உணர்வார்கள். அதைப் பற்றிப் பேசுவார்கள். 'நற்செயல்களில் ஈடுபட ஒரு சந்தர்ப்பம் வாய்க்காதா' என்று ஏங்குவார்கள்.

அவ்வளவு ஏன்? தாங்கள் ஈன்றெடுத்த செல்வங்களின் அழகு, அறிவு, சூடிக்கையான விளையாட்டுக்கள், சாதுரியப் பேச்சுக்கள் முதலியவை சில பெற்றோர்களின் கண்ணிலும் கருத்திலும் பதிவதே இல்லை. வேலைத் தொந்தரவு, குடும்பத்தில் நோய், வறுமை, முதலிய இன்னல்கள், மற்றும் பலவிதமான கவலைகள் எல்லாம் ஒன்று கூடி அவர்களின் நல்லுணர்ச்சியை மரக்கடித்து, அவர்களை உணர்ச்சியற்ற இயந்திரங்களாக ஆக்கியிருப்பதே அதற்குக் காரணம். எப்போதோ அபூர்வமாக வீடு தேடி வருகிற நண்பர்களும் உறவினர்களும் கொண்டாடுகிற போதுதான் மேற்குறித்த நிலையில் உள்ள பெற்றோர்களுக்குத் தங்கள் மக்களின் சிறப்புக்கள் கண்ணிலும் கருத்திலும் இடம் பெறும்.

என்னுடைய பிறப்பிடம் தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூகாவைச் சார்ந்த கீரனூர் கிராமம் தான். அந்த ஜில்லாவிலே எத்தனையோ புண்ணியத் தலங்கள்; எவ்வளவோ நதிதீரங்கள். கலைமேதைகள் தோன்றி வாழ்ந்து செயலாற்றிய ஊர்கள் எத்தனை எத்தனையோ! வாய்ப்பாட்டு மேதைகளும், நாகஸ்வரம் முதலிய வாத்திய மேதைகளும், காலக்ஷேபம், பரத சாஸ்திரம், தாளவாத்தியங்கள் முதலிய பல்வேறு துறைகளில் மேன்மை பெற்றுப் பிரகாசித்த கலைஞர்கள் வாழ்ந்த ஊர்கள் ஒன்று, இரண்டா? ஏன்? சங்கீத மும்மூர்த்திகள் அவதாரம் செய்ததே அந்த மாவட்டத்திலே தானே!

ஆனால் அந்தச் சிறப்புக்கள் கீரனூரிலும், மாயூரத்திலும் வாழ்ந்த நாட்களில் எல்லாம் என் உள்ளத்திலே தோன்றி என்னை ஆட்கொள்ளவில்லையே! பிழைப்பை நாடிப் பட்டணம் சேர்ந்து, இயந்திர வாழ்க்கையில் ஈடுபட்டு, அதிலே மூழ்கிப் போன பிறகுதானே உள்ளத்திலே ஞானக்கண் திறக்கிறது!

கீரனூருக்கும் திருக்கோடிகாவலுக்கும் பதினாறே மைல்கள் தான். நினைத்த மாத்திரத்தில் போய் வரக்கூடிய இடம். திருவாவடுதுறை முதலிய ஊர்களுக்குப் பல்வேறு அலுவல்களை முன்னிட்டு எத்தனையோ முறை போய் வந்திருக்கிறேன். ஆனால், 'திருக்கோடிகாவல் அருகேதான் இருக்கிறது' என்கிற ஒரு சிறு எண்ணம்கூட மனத்திலே எழவில்லை.

ஆனால் அந்நிலைக்குரிய முழுக் குற்றமும் என்னுடையது என்று சொல்வதற்கில்லை. அன்று நான்

வெறும் ரசிகனாகமட்டும் இருந்தேன். இன்று இசைக் கலைஞர்களின் வரலாறுகளை எழுதும் பெரும்பேறு கிட்டியிருக்கிறது. ஒரு வேளை இப்பணியில் அப்பொழுதே நான் ஈடுபட்டிருந்தேனானால் தஞ்சை மாவட்டத்தையே ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்து அநேகம் செய்திகளை அறிந்திருப்பேனோ என்னவோ? அப்பொழுதெல்லாம் அவகாசம் நிரம்ப இருந்தது. இப்பொழுதோ நேர எதிரிடை. தண்ணீரும் காற்றுங்கூடக் காசு செலவழித்துப் பெறுகிற நிலையில் உள்ள பட்டணத்திலே வாழ்பவர்களுக்குப் பொழுது என்பது பொன்னைவிடச் சிறந்ததாக இருக்கிறது என்றாலும் கிடைத்த சந்தர்ப்பத்தில் எதையும் காண வேண்டும் அறியவேண்டும் என்ற பரபரப்பு இப்போது எல்லையை மீறுகிறது. அந்தப் பரபரப்பு உள்ளத்தில் நிறைந்து உடம்பெங்கும் பரவுகிறபோது உணர்ச்சி நம்மை ஆட்கொண்டு விடுகிறது அத்தகைய உணர்ச்சியோடு தான் திருக்கோடிகாவலை நோக்கிப் பஸ்ஸிலே போய்க் கொண்டிருந்தேன்.

காவிரியில் நீர் இல்லை எளிதாக அதைக் கடந்து கிராமத்திற்குள் புகுந்தேன். தோப்பு, துரவுகளைத் தாண்டி அக்கிரகாரத்தை அடைந்தேன். ஒரே தெரு. இரு சாரிகளிலும் வீடுகள்.

“கிராம மணியகாரர் வீடு எது?” என்று எதிர்ப்பட்ட ஓர் அன்பரிடம் விசாரித்தேன். கிருஷ்ணையர் பெரும் கலைஞராகவாழ்ந்ததோடு கிராம மணியம் உத்தியோகமும் பார்த்து வந்தார் என்று அறிந்திருந்தேன். முன்பெல்லாம் மணியம் கர்ணம் முதலிய உத்தியோகங்கள் பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்தில் தொடர்ந்து வருவது உண்டு. அந்த முறைப்படி கிருஷ்ணையர் அவர்களின் புதல்வர் அந்த உத்தியோகத்தை வகித்து வருவார் என்ற நம்பிக்கையிலேதான் அப்படி விசாரித்தேன்.

அன்பர் குறிப்பிட்ட வீட்டுவாயிலில் போய் நின்றேன். அங்கே இருந்தவரிடம், ‘இதுதானே மணியகாரர் வீடு?’ என்று கேட்டேன்.

அவர், “ஆமாம். வாருங்கள்; உட்காருங்கள். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று அன்போடு வினவினர்.

‘ஸ்ரீநிவாசையர் என்பவர் நீங்கள்தானே?’ என்று நான் கேட்டதும, அவர், “ஸ்ரீநிவாசய்யரா?” என்றபடி புருவங்களைச் சுருக்கினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

“நான் சென்னையிலிருந்து வருகிறேன். வயலின் வித்துவான் கிருஷ்ணையர் அவர்களின் இளைய குமாரர் ஸ்ரீநிவாசய்யரைப்பார்க்க வேண்டும். இன்று வருவதாகக் கடிதம்கூட எழுதியிருந்தேன்...”

இப்படி நான் விவரமாகச் சொன்னபிறகுதான் அந்த அன்பர் ஒருவாறு ஊகித்துக் கொண்டார். பிறகு லேசாகச் சிரித்துக் கொண்டே, ‘அதோ அந்த வீடு’ என்று எதிர்ச்சாரியில் உள்ள ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டினார்.

‘பட்டாமணியகாரர் வீடு இது தான் என்று ஒருவர் சொன்னாரே?” என்று கேட்டேன்.

“உண்மை தான். கிருஷ்ணையர் குமாரர் ஸ்ரீநிவாசையர்தான் அந்த உத்தியோகத்தின் பரம்பரை வாரிசுதார். ஆனால் சில காலமாக நான் பார்த்து வருகிறேன். அதனால்தான் உங்களுக்கு இந்த வீட்டைக் காட்டியிருக்கிறார்கள்.”

‘நன்றி,’ என்று கூறிவிட்டு அங்கிருந்து நடந்தேன். எதிர் வாடையில், தெருவின் நடுவே

அவர் சுட்டிக்காட்டிய வீட்டை அடைந்தேன்.

வாசலில் பந்தல் போட்டிருந்தது. சின்னத் திண்ணையில் ஒருவர் சாய்ந்து கொண்டிருந்தார். ஏறக்குறைய ஐம்பது ஐம்பத்தைந்து பிராயம் இருக்கும். சிவந்தமேனி, கிருஷ்ணயர் அவர்களின் சாயல். 'இவர்தாம் ஸ்ரீவாசையராக இருக்கவேண்டும்' என்று எண்ணிக்கொண்டேன். ஆளோடியில் நின்றபடி அவரை நோக்கி, 'நமஸ்காரம்' என்று கரம் கூப்பினேன்.

'யார்?' என்று ஒரே ஒரு வார்த்தையை அவர் கேட்டார்.

'சென்னையிலிருந்து வருகிறேன். இன்று வருவதாக உங்களுக்குக் கடிதம்கூட எழுதியிருந்தேனே? கிடைத்திருக்குமே? என்று பவ்யமாகக் கேட்டேன்.

'ஆமாம், வந்தது' என்று ரத்தினச் சுருக்கமாக அவர் பதில் சொன்னாரே தவிர, என்னை உட்காரும்படிகூடச் சொல்லவில்லை. அது எனக்கு என்னவோபோல் இருந்தது. ஆனாலும் காரியமே முக்கியம் என்ற கருத்தில் மனசை அடக்கிக் கொண்டேன்.

'பெரிய மகான் ஒருவரின் வரலாற்றை உருவாக்கும் பணியில் இம்மாதிரி உபசரணைகளும் சம்பிரதாயங்களும் ஒரு பொருட்டா? என்று எண்ணினேன். 'சரித்திரத்தைப் புரட்டினால் ஒவ்வொரு சாதனையை முன்னிட்டு ஒவ்வொருவர் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்திருப்பது தெரியவரும். இந்த அனுபவம் ஒரு பெரிதா?' என்றும் சமாதானம் செய்துகொண்டேன். ஆனால் வெயில் வேளையில் பிரயாணம் செய்தது அளவு கடந்ததாக உணர்ச்சியை உண்டுபண்ணிற்று. அதே சமயத்தில் ஸ்ரீநிவாசையரும், 'என்ன வேண்டும்?' என்று கேட்டார். 'குடிப்பதற்குக் கொஞ்சம் ஜலம் வேண்டும்' என்றேன்.

பந்தர்க்காலை ஒட்டினாற்போல நின்றிருந்த இளைஞர் அதுவரை நிகழ்ந்தவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தார். நான் தண்ணீர் கேட்டதும் அவர் கொண்டுவரக் கிளம்பினார். ஸ்ரீநிவாசையரும் அவரை நோக்கி, 'ஜலம் கொண்டுவந்து கொடடா' என்று கூறிவிட்டு என்னை நோக்கி, 'இப்படி வந்து உட்காருங்கள்' என்றார்.

'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டபடி பெரிய திண்ணையிலே போய் உட்கார்ந்துகொண்டேன். இளைஞர் கொண்டுவந்து கொடுத்த ஜில்லென்ற நீரைப் பருகிக் களைப்பைப் போக்கிக் கொண்டேன்.

'உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் சார்?'— அவர் கேட்டார்.

'கர்நாடக சங்கீத உலகில் வயலின் வாத்தியத் துறையில் உங்கள் தகப்பனாருக்கு நிகரானவர் யாரும் இல்லை'—

'அதையெல்லாம் யார் சார் நினைக்கிறார்கள்?'

'ஏன்? நினைக்காமல் என்ன? உலகமே கொண்டாடுகிறதே!'

'கொண்டாடினால் போதுமா?'

'பின்னே என்ன செய்யவேண்டும்? இவர் என்ன சொல்கிறார்? —எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

'ஏன்சார் பேசாமல் இருக்கிறீர்கள்? சொல்லுங்களேன்?'

'என்ன சொல்ல வேண்டும்?'

'என்னவா? அவ்வளவுதான் உங்களுக்குத் தெரிந்தது! நன்றி கெட்ட உலகம் சார் இது! கொஞ்சம்கூட 'இது'வே இல்லை.'

'உலகத்தைத் தள்ளுங்கள். நாம் சரியாக நடந்துகொண்டால் எல்லாம் தன்னாலே சரியாகிவிடுகிறது'-அவர் பேசுகிற போக்கை எண்ணி நானும் ஒரு மாதிரியா

கப்பேசி அவரை அரவணைத்துக் கொண்டு போய் விஷயங்களைக் கறக்க முயன்றேன். ஆனால் அவரோ?

'தள்ளுகிறதாவது சார்? அது எப்படித் தள்ள முடியும்?' என்று வார்த்தைகளை விட்டெறிந்தார். தொடர்ந்து, 'அவரைப்பற்றி நீங்கள் புத்தகம் எழுதுவது இருக்கட்டும். முதலில் நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்' என்றார்.

நிமிர்ந்து உட்கார்ந்தவர் பிறகு திண்ணையைவிட்டு இறங்கினார். 'இப்படிச் சொன்னால் உங்களுக்குப் புரியாது. இருங்கள் வருகிறேன்' என்று வீட்டிற்குள் சென்றார்.

என் மனத்தில் கவலைமூண்டது. ஏதேதோ எண்ணமிட்டவாறு உட்கார்ந்து கிடந்தேன்.

அவர் வந்தார். தடித்தபுத்தகங்களில் நாலைந்து, பல கடிதங்கள். குறிப்புக்கள் அடங்கிய ஒரு கட்டு இவற்றைக் கொண்டுவந்து என் எதிரே போட்டார். அவற்றிலிருந்து தூசு பறந்தது. அவர் பெரிய திண்ணையில் என் அருகே அமர்ந்து கொண்டார். பெரிய கட்டைப் பிரித்தார் அதிலிருந்து பல கடிதங்களை எடுத்து ஆராயத் தொடங்கினார்.

நான் அந்தப் புத்தகங்களை மெல்ல எடுத்து ஒவ்வொன்றாகப் பார்த்தேன். எல்லாம் வைத்தியப் புத்தகங்கள். மருந்து செய்கிற பலமுறைகளைப் பற்றிய விளக்க நூல்கள். இவற்றுக்கும் இவருக்கும் என்ன தொடர்பு? நாம் நாடி வந்த விஷயத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? என்றெல்லாம் எனக்குள் கேள்விகளை எழுப்பிக்கொண்டேன். பதில் கிடைக்காமல் பெருமூச்சு விட்ட வண்ணம் உட்கார்ந்து கிடந்தேன்.

திண்ணைப்புறத்தில் வர வர வெளிச்சம் மங்கவே கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். நான் எவ்வளவோ லாகவமாக அதைச் செய்தும் அவர் கண்டு கொண்டு விட்டார். 'எதற்காகக் கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள்? நீங்கள் இப்போது போக முடியாது. நான் அனுமதிக்கமாட்டேன். சாவகாசமாக எல்லாம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, இரவு இங்கே சாப்பிட்டுவிட்டுத்தான் நீங்கள் போகவேண்டும்'' என்று என்னிடம் கூறியவர், ஆளோடியில் நின்றிருந்த இளைஞரிடம், 'சார் ராத்திரி இங்கே சாப்பிடப் போகிறாரடா: உள்ளே போய்ச் சொல்' என்று உத்தரவு போட்டார்.

'இல்லை, எனக்குக் கொஞ்சம் அவசர அலுவல் இருக்கிறது' என்று தழுதழுத்த குரலில் நயமாக நான் சொல்லிக்கொண்டிருக்கிறபோதே அந்த இளைஞர் புன்னகை புரிந்த வண்ணம் உட்புறம் போய்விட்டார். பெரியவரும் என்னுடைய மறுப்புரையைக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எடுத்து முணு முணுப்பாகப் படிக்கத் தொடங்கினார்.

நான் மனசுக்குள் எண்ணிக் கொண்டேன். 'நாடி வந்த காரியம் மிகப் பெரிது. நேரத்தை அளவிட்டுக் கொண்டிருந்தால் முடியுமா? சாப்பிட முடியாது என்று மறுப்பது சரியா? வந்த போது வா என்று அழைக்காதவர், உட்காரும்படி சொல்லாதவர் நிற்கவைத்தே பேசியவர், இத்தனை தூரம் மனம் மாறி அன்புக் கட்டளை இடுகிறபோது அதை மறுத்துக் காரியத்தைக் கெடுத்துக் கொள்வது புத்திசாலித்தனம் அல்ல.

இப்படி நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் அவர் ஒரு கடிதத்தைப் பிரித்து என் முன்னே போட்டார். 'அதைப் பாருங்கள்' என்றார்.

நான் அதைப்படித்துக்கொண்டிருக்கிறபோதே இன்னொரு கடி

தத்தை எடுத்துப்போட்டு, 'இதைப் படியுங்கள்' என்றார்.

அதைக் கையில் எடுத்துக் கொண்டேன். மூன்றாவது கடிதம் என்னை நோக்கி வந்தது. இப்படியே அவர் மேலும் மேலும் கடிதங்களையும் குறிப்புக்களையும் என்முன் போட்டுக் கொண்டே இருந்தார். சற்று நேரத்தில் என் எதிரே கடிதங்கள் குவிந்து விட்டன. அவற்றில் ஒன்றைக்கூட நான் படிக்கவில்லை; அவர் படிக்க விடவில்லை.

கடிதங்களைப் போட்டு முடித்ததும் பேச ஆரம்பித்து விட்டார். குரல் வரவர ஓங்கி ஒலித்தது. பேச்சிலே காரம் இருந்தது. சொற்களில் சூடு பறந்தது. சென்னையிலே உள்ள யார் யாரிடமோ அவர் செய்த கடிதப் போக்குவரத்து அது. என்றால் எதையுமே புரிந்துகொள்ள முடியவில்லை.

அஸ்தமித்துவிட்டது. இரண்டு மூன்று நாட்களாகப் பகலெல்லாம் வெயிலும், அந்தியில் மழையும். இருட்டினதும் காற்றில் அடைசல் தென்பட்டது. மழை வரக் கூடிய அறிகுறிகள் தோற்றின. பஸ் ஓடும் சாலைக்கும் கிராமத்திற்கும் உள்ள இடைவெளி, புதிய அனுபவத்தில் எனக்கு மட்டுப் படவில்லை. வழியும் திட்டமாக மனத்திலே பதிந்திருக்கவில்லை. இருட்டும் மழையும் பரிசயமில்லாத வழியும் நினைவில் தோன்றிக் கவலையை உண்டு பண்ணின.

(தொடரும்)

---

★★★★★★★★★★★★★★:★★★★★★★★★★★★★★★★★

# நாட்டியாலயா

[பரத நாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்கு மட்டும்

போஷகர் : **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு :

**நாட்டியாலயா,**

C/o 'மாலா' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

★★★★★★★★★★★★★★★:★★★★★★★★★★★★★★★★★

# மிஸ் பீஷ்மாச்சாரினி

திங்கள் சுடவும், பனி அன்றில் சுடவும், வீசும் தென்றல் சுடவும் வெந்து போகவில்லை அவள். காரணம்?... அவள் யாரையும் காதலிக்காதது தான். அது மட்டுமல்ல. காதலிப்பவர்களையும் ஏளனம் செய்தாள். குறும்புத்தனமாக விதம் விதமான பெயரையும் சூட்டினாள்.

ஆண் வர்க்கம் பின்னால் வலை வீசி, பல்லாண்டு பாடி வர முன்னால் வெற்றிக்கொடி ஏந்தி பீடு நடைபோட்டாள் அவள். அவள் பெயர் என்னவோ நித்யா தான். ஆனால் மற்றவர்கள் அவளுக்குச் சூட்டியிருந்த காரணப் பெயரோ விசித்திரமானது.

மிஸ் பீஷ்மாச்சாரிணி என்பதே அது.

கல்லூரியில் நடந்த சந்தனு மகாராசன் கதையில் நித்யா பீஷ்மர் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு திறம்பட நடித்ததோடன்றி வாழ்க்கையிலும் தான் அவ்வாறே இருக்கப்போவதாக சவாலும் விட்டாள். கேட்க வேண்டுமா? ஏற்கெனவே குறும்புக் கடல்களான கல்யாணி—சிவராமன் கோஷ்டியார் அவளுக்கு மிஸ் பீஷ்மாச்சாரிணி என்ற பட்டத்தையும் சூட்டி விட்டார்கள்.

எப்படியோ நிலைத்த பெயராகிவிட்டது அது. நித்யாவும் அந்தப் பெயருக் கேற்றபடியே நடந்து கொண்டாள். ஆகவே கல்லூரி ரோமியோக்களுக்கு அவள் கனலாக காட்சியளித்தாள். கிட்ட நெருங்கினாலே உருகி விடுவோமோ! என்று உள்ளூரக் குமுறியது மாணவர் குழாம்.

சற்று துணிச்சல்க்காரப் பேர்வழி என்று பெயர் வாங்கியவன் சங்கரன். அவனுடைய குறும்புத்தனம் கூட அவளிடம் பலிக்கவில்லை.

ஒரு முறை சற்று எசகு பிசகாய் கடிதம் என்று ஒன்று எழுதப்போக விஷயம் நேராக பிரின்ஸிபால்வரையிலும் சென்றுசங்கரனுக்கு சரியான சூடும் கிடைத்தது. அதிலிருந்து சாதுவாகி விட்டான் அவன்.

"சங்கரனுக்கு!—என்று ஒருவன் ஆரம்பிக்க "வீழ்ச்சி!" ... என்று மற்றவர்கள் கோஷமிட்டு கிண்டல் செய்தனர், ஏனைய மாணவர்கள். வீழ்ச்சியுற்ற சங்கரனின் மறைமுகமான எதிர்ப்புக்களும் நித்யாவை அசைக்கவில்லை.

★

நித்யாவை பேரழகி என்று கூற முடியாவிட்டாலும், அழகி என்று கண்டிப்பாக ஒப்புக் கொள்ளத்

தான் வேண்டும். ஆயிரமாயிரம் கதைகள் கூறும் அந்த குறு குறு விழிகளை காலமெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமே !... வேறென்ன வேண்டும்...

★

"நீ இப்படியே இருந்தாயானல் ஒரு நாள் உன் இதயம் திடீரென்று வெடித்துத்தான் போகும்!" என்றுள் கல்யாணி. சுறு சுறுப்புடன் துடுக்காகப் பேசும் இயல்புமுடையவள் இவள். நித்யாவின் உண்மைத்தோழி.

நித்யா சிறிது நேரம் பதிலே பேசவில்லை ... ஹாஸ்டலின் எதிரில் நீலக்கோடு கிழித்தாற்போல விளங்கும் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். கனன்ற பெருமூச்சு ஒன்று அவளையறியாமலேயே வெளிப்பட்டது.

"போகட்டுமே கல்யாணி !..."

"ஏனே !... விடிய விடிய இருபத்திரண்டு வயதாகவில்லை. பருவம் மலர்ந்து மணம்வீசும், மலர் வண்டுகளை துரத்தியடிக்கும் விந்தையை உன்னிடம்தான் கண்டேன்."

"உஷ் கல்யாணி !..."

நித்யாவின் அந்த அதட்டலில் ஓர் உறுதி தென்பட்டது. 'கல்யாணி இந்த மாதிரியெல்லாம் என்னுடன் பேசாதே என்று எத்தனை தரம் தான் சொல்வது. நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லையென்று. எனக்குத்தான் பட்டம் கூட கொடுத்திருக்கிறீர்களே !

"அது விளையாட்டுக்கு"

"வினைக்காகவும் தான் இருக்கட்டுமே! அதுதான் எனக்குப்பிடிக்கிறது..." என்று எழுந்துவிட்டாள் நித்யா; மேற்கொண்டு பேசப் பிடிக்காதவள் போல.

கல்யாணிக்கு நித்யா இப்படி இருப்பது பிடிக்கவில்லை. அதற்கு தகுந்த காரணமும் இருந்தது. அது சங்கரன் தான். சங்கரன் கல்யாணியின் தமையன் ஆச்சே !... சங்கரனுக்கு எப்படியாவது நித்யாவை முடித்துவிட வேண்டுமென்பது கல்யாணியின் ஆவல். நித்யாவின் மனதைத் திருப்ப அவளால் ஆனமட்டும் முயன்றும், அது கல்லில் கனிரசம் பிழிவது போல் இருந்தது.

★

தேர்வு முடிந்தது.

எல்லோரும் உல்லாசப் பிரயாணம் புறப்பட்டனர்.

நித்யாமட்டும் ஏனே கூட வர மறுத்து விட்டாள். நித்யாவுக்காக கல்யாணியும் நின்று விட்டாள். அந்தரங்கமாகத் தோழியின் உள்ளத்தை அறிந்தே விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டாளோ என்னமோ ?

தண்ணிலவு பாலெனப்பொழிந்து கொண்டிருந்தது. மாடி வராந்தாவில் நித்யாவும் கல்யாணியும் உட்கார்ந்திருந்தனர். ஏதோ பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். கல்யாணி எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல் தயங்கிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று நித்யாவே சொன்னுள்.

"கல்யாணி ! நான் கல்யாணம் செய்து கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்.

"என்ன ?"— ஆச்சர்யத்துடன் கேட்டாள் கல்யாணி. அவளுக்குத் தன் காரியம் இவ்வளவு சுலபமாக நிறைவேறும் என்று தோன்றவேயில்லை. ஆணழகன் சங்கரனுடன் நித்யாவின் தோற்றமும் இணைந்து, மனக் கண் முன் மாலையும் கழுத்துமாகத் தெரிந்தது.

"அப்பா ! இப்பொழுதுதான் என் மனம் குளிர்ந்தது. நித்யா ! உனக்கு என் பாராட்டுதலை —என் மகிழ்ச்சியை எப்படித் தெரிவிப்ப

தென்பதே எனக்குத்தெரியவில்லை. என் அண்ணா இதைக் கேட்டதும் எவ்வளவு சந்தோஷப் படுவான் தெரியுமா ?'' என்று கூறிய கல்யாணி எழுந்து வந்து நித்யாவைக் கட்டிக்கொண்டாள்.

'' நான் கல்யாணம் செய்து கொண்டால் அதற்கு உன் அண்ணா எதற்காக சந்தோஷப்பட வேண்டும் ?''

பரமசாவதானத்துடன் கேட்டாள் நித்யா.

''பின் என்ன! அவன் எவ்வளவு நாளாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் தெரியுமா ? இந்த நற்செய்திக்காக.''

கல்யாணி கூத்தாடாதது ஒன்று தான் பாக்கி.

நித்யா சிரித்தாள். ''கல்யாணீ! தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய் நீ. நான் சங்கரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன் என்று சொல்லவில்லையே!''

மற்றுமொரு முறை திடுக்கிட்டாள் கல்யாணி.

"என்ன, என்ன சொல்கிறாய் ! உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. நித்யா ?...''

நித்யா பலமாக வாய் விட்டுச் சிரித்தாள்.

'கல்யாணி ! உனக்கு எல்லாவற்றையும் சொன்னால்தான் புரியும். இதோ பார். இன்று காலையில் வந்த கடிதத்தை ...''

தன் ரவிக்கையில் செருகியிருந்த கடிதத்தை எடுத்துப் போட்டாள் நித்யா. கலயாணி அதை எடுத்து படிக்கலானாள்.

சௌ. நித்யாவுக்கு,

அனேக ஆசீர்வாதம். சௌ. ஆனந்தாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. முன்பு நான் எழுதியிருந்தேனே அந்த வரன் தான். வேறு வழியே இல்லை. நீ உடனே புறப்பட்டு வந்துசேர். மற்றவை நேரில்.

இப்படிக்கு,
சாமிநாதன்.

''இதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்'' என்று கல்யாணி கடிதத்தை அலட்சியமாகப் போட்டாள்.

''சொல்கிறேன் கேள்... எனக்குத்தான் அப்பா அம்மா கிடையாதே. உனக்குத்தெரியுமல்லவா. என்னைச் சிறு வயதிலிருந்தே ஆளாக்கியது என் சிற்றப்பா தானே.'' என் சிற்றப்பா சாதாரண குமாஸ்தா தான். அவருக்கு மூன்று பிள்ளைகள் சித்தியின் காதில் வெள்ளிக் கம்மலைத் தவிர வேறு ஒன்றையும் நான் பார்த்ததேயில்லை...ஆனால் கல்யாணீ ! உலகம் முழுவதிலும்...புகுந்து தேடினாலும் என் சிற்றப்பாவைப் போல ஒரு நல்ல மனிதரைக் காணமுடியாது.

நித்யா ஒரு பெருமூச்சு விட்டு விட்டுப் பிறகு மீண்டும் ஆரம்பித்தாள்.

---




தரகர் :- நான் இப்போ பேசி வச்சிருக்கிற வரனுக்கு. பங்களா. நிலம், பாங்கியில் ரொக்கமாக ஒரு முப்பதாயிரம், ஒரு கார், இன்னம் அனேக வசதிகள்...!

பெண்ணின் தகப்பனார் :- பலே தேவலியே ! இவ்வளவு வசதிகள் இருக்கச்சே என்ன, உடனே அதை முடிச்சுடுங்கோ !

தரகர் :- அவசரப்படறீளே ! நான் சொல்லிண்டு வந்த வசதிகள் எல்லாம் மாமனார் வீட்டிலிருந்துன்னா எதிர்பார்க்கிறார்கள் !

"என் அப்பா எனக்கு வைத்த ஆஸ்தியிலிருந்து ஒரு துரும்பைக் கூட அவர் தனக்கென்று பயன் படுத்திக் கொண்டவரல்ல. என்னை படிக்க வைத்ததும், எனக்கு வேண் டிய பொழுது பணம் அனுப்பித் தருவதுமான இதே சிற்றப்பா தன் பெண் ஆனந்தாவை எட்டா வதுக்கு மேலே படிக்க வைக்கவு மில்லை ... இரண்டே சிற்றுடை களுக்குமேல் மூன்றாவதாக ஒன்று அவளுக்கு வாங்கிக் கொடுத்தது மில்லை..."

"அப்படி ஏன் இருக்க வேண் டும்?"

"அது அவருடைய சுபாவம். அவருடைய நேர்மை கத்தி முனை யைப் போன்றது."

"சரி; இருந்துவிட்டுப் போகட் டும். அதற்கும் உன் கல்யாணத் திற்கும் என்ன சம்பந்தம்?

"வருகிறேன் கல்யாணி, அவ சரப்படாதே. கையில் பணமில்லா ததினால் ஆனந்தாவை இரண்டாந் தாரமாகக் கொடுக்கப்போகிறார்..."

"நீ பணம் கொடுக்கலாமே!"

"என் பணத்தைக் கடனாக பெற் றுக்கொள்ளக் கூட அவர் மனம் ஒப்பாதே!...

"சரி; இப்பொழுது நீ என்ன செய்யப்போகிறாய்?..."

கல்யாணிக்கு நித்யா என்ன பேசுகிறாள் என்பதே புரியவில்லை.

"நானா? ஆனந்தாவுக்குப் பார்த் திருக்கும் கிழவரை நான் பண்ணிக் கொண்டு விடப்போகிறேன்..."

"அதற்கு மட்டும் சிற்றப்பா சம் மதிப்பாரா?—" கல்யாணி வெகுண்டு கேட்டாள்.

"கல்யாணம் என் சொந்த விஷ யம். அதில் சிற்றப்பாவின் பிடிவா தம் செல்லுபடியாகாது..."

கல்யாணி கத்தினாள்.

"நித்யா! நீ ஒரு அசடு வடி கட் டின பைத்தியம்! ... பைத்தியமே தான்..."

"இல்லவே இல்லை! நான் பைத்தியமே இல்லை, என் நிலையில் இருந்திருந்தால் எவரும் கண்டிப் பாக இப்படித்தான் செய்திருப்பார் கல்யாணீ! என் இதய அந்தரங் கத்தையும் கொஞ்சம் அகழ்ந்து பார். உண்மை உனக்கும் தெரிந்து விடும்...உம்...

எனக்காகவும் ஒருவர் இருந் தார்... பாஸ்கர்... பரஸ்பரம் ஒரு வரையொருவர் உணர்ந்து எதிர் கால வாழ்வெனும் பசுஞ்சோலையில் சிறகடித்து பறக்க எண்ணமிட்டிருந் தோம்... ஆனால்...

"ஆனால்?'......

"விதி அனுமதி தரவில்லை...... இன்று எல்லோரும் உல்லாசப் பிரயாணம் போயிருக்கிறார்களே, அதே கன்னியாகுமரிக் கடல்...... அவரை...... அவரை......

நித்யாவால் பேச முடியவில்லை... சற்று தத்தளித்து பின் சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்த போது அவள் கண்கள் இரண்டும் இரண்டு செங் கடல்களாக விளங்கின. கல்யாணி பிரமிப்புடன் பார்த்துக் கொண்டே யிருந்தாள்.

"கல்யாணீ!...... நான் செத்த வள்... அன்றே நானும் செத்து விட்டேன்... உண்மையில் நித்யா வின் ஸ்தூலம்தான் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறது. சூக்ஷமம் அவருடன் என்றோ கலந்து விட் டது... இனி நான் ஒருவரை மணந் தால் அவருக்கு என் காதலை—என் மனப்பூர்வமான உள்ளத்தை என் னால் கொடுக்க முடியாது... என் உடலால், அன்பினால் பவித்திர மான சேவைதான் செய்ய முடியும்... அந்த சேவையை, தாயன்புக்காக ஏங்கும் இளங் குழந்தையுடன் வாழும் ஒரு கிழவருக்கு அர்ப்பண மாக்குவதில்தான் என்னால் இன்பம் காண முடியும் கல்யாணீ!...

நித்யாவின் பேச்சில் மலையத்தனை உறுதி தெரிந்தது.

கல்யாணி அழுது விட்டாள். அவளால் தாங்க முடியவில்லை...

"நித்யா! ..உன்னை நாங்கள் எல்லோரும் தவறாகப் புரிந்து கொண்டு விட்டோம்..."

"இல்லை... அதுவும் உங்கள் தவறல்ல... என் தவறுதான்... என் துக்கத்தை மறைத்து என்னை ஏமாற்றிக் கொள்வதற்காக அளவுக்குமீறி உல்லாசமாயிருப்பது போல நடித்தேன்... நீங்கள் தப்புக் கணக்கு போட்டு விட்டீர்கள்...... பட்டப்பெயர்கூட கொடுத்து விட்டீர்கள்..."

"எங்களை மன்னித்துவிடு நித்யா!"

"முடியவே முடியாது! மன்னிப்பு எதற்கு... கல்யாணி!" ஆனந்தா என்னைப் போலத்தான் இருப்பாள். கையோடு உன்னையும் அவளுக்கு நாத்தனாராக்கிவிடலாம் என்று பார்க்கிறேன்... சங்கரன் சம்மதிப்பானா?...

"அவசியம் சம்மதிப்பான்"— என்றாள் கல்யாணி. அவள் கண்களுக்கு நித்யா புனிதமானதொரு தேவதை போல காட்சியளித்தாள்.

★

## இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்

1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.

**ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை**

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ருமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

# அப்பாவின் கடிதம்

★ எஸ். வைத்தியநாதன் ★

"கேட்டயா கதையை? என்று அண்ணுசாமி திடீரென்று ஆரம்பித்தார்.

"அது என்ன அப்பேர்ப்பட்ட அதிசயக் கதை!" என்ருள் நாராயணி.

"மூன்ருவது வீட்டில் ஒரு தறிதலே இருக்கிறதோல்லியோ?"

"தான் மன்மதனுக்குத் தம்பி என்று எண்ணிக் கொண்டு 'ஸ்டைல்' நடை போட்டுக் கொண்டு போகுமே, அது தானே!"

"அதுதான், சாட்சாத் அந்தக் காலியேதான்!"

தாழ்வாரத்தில் உட்கார்ந்த வாறு தலைவாரிக் கொண்டிருந்த நிர்மலா செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள்!

அண்ணுசாமி தொடர்ந்தார்:— "அந்தப் பயல் கன தைரியமாக என்னண்டை வந்து ஒன்று கேட்டான் பாரு. இன்னும் எனக்கு ஆறவே இல்லை."

"ஏதாவது கேவலமாகப் பேசி விட்டான என்ன!"

"நம்ப நிர்மலாவை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கணுமாம். எப்படி இருக்கு கதை!"

"பேஷாய்த்தான் இருக்கு!... நீங்கள் அவனுக்குப் பதில் என்ன சொன்னீர்கள்?"

"'தம்பி! நீ கொம்புத்தேனுக்கு ஆசைப்படுகிருய்! உனக்கு எட்டாது அது! எங்கள் நிர்மலா போயும் போயும் உன்னை மணக்க ஒரு நாளும் விரும்பமாட்டாள்!' என்று நாசூக்காகக் கூறினேன். அதற்கு அவன் 'நீங்கள் அவளைக் கேளுங்கள். அவள் என்னை விரும்பவில்லை என்று சொல்லி விட்டால் அவளை மறந்து விடுகிறேன்!' என்கிருன்."

"பெரிய கல்லுளிமங்கனுயிருப்பான் போலிருக்கே!... அவனிடம் வீண் பேச்செல்லாம் எதற்கு? 'எங்கள் பிள்ளை ஹரிக்குத்தான் அவளைப் பண்ணிக் கொள்ளப் போகிருேம்!' என்று வெட்டொன்று, துண்டு இரண்டாகச் சொல்லி விடுவதுதானே நீங்கள்?"

நிர்மலா துணுக்குற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் ஜடையலங்காரமும் பூர்த்தியாகி விட்டிருந்தது இதற்குள்.

"எப்படிச் சொன்னுல் என்ன? புத்திசாலியாயிருந்தால், நாமும் நிர்மலாவை அவனுக்குக் கொடுக்க மாட்டோம் அவளும் பண்ணிக் கொள்ளமாட்டாள் என்பதை அந்தக் காலி புரிந்து கொள்கிருன்......"

இனியும் வாய் மூடி மௌனியாயிருப்பது தவறு என்ற முடிவுக்கு வந்த நிர்மலா கூறினுள் :—

"அவரை காலி, காலி என்று அடிக்கொருதரம் எதற்காக மாமா அர்ச்சனை செய்கிறீர்கள்? அவர் தறிதலைத்தனமாக என்ன செய்து விட்டார் அப்படி?"

கணீரென்று ஒலித்த அந்தக் கேள்விகள் மாமா, மாமி அருகில் பேப்பர் படிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்த ஹரி ஆகிய மூவரையும் திகைக்கச் செய்தது. அண்ணுசாமியும் நாராயணியும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்!

மெல்ல சமாளித்துக் கொண்டு நாராயணி பேசினுள் :—"ஏண்டி நிர்மலா! அவரைவிட உனக்கு ரொம்பத் தெரிஞ்சு போச்சா?"

"நான் அவமரியாதையாக ஏதும் பேசவில்லையே மாமி! அகாரணமாக 'அவரை' இழி

வாகப் பேசும் தகாத காரியத்தை ஏன் செய்ய வேண்டும்?... உங்கள் இருவரின் நோக்கமும், விருப்பமும் எனக்குப் புரிகிறது... ஆனால் ஹரியை நான் மணந்து கொள்வது சாத்தியமல்ல மாமி! அவனை நான் அண்ணாவாகக் கருதுகிறேன்...''

ஒரு நிமிஷ நேரம் அங்கு மௌனம் நிலவியது! அவள் எப்படி அவர்களை மண்டையில் அடித்து விட்டாள்!

பின்னர் அண்ணாசாமி தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''பத்திரிகைகளில் வரும் கதைகளின் கதாநாயகி, கதாநாயகர்கள், சிலர் சொல்வதைப் போல் சொல்கிறாயே நிர்மலா! கதைகளைப் படிப்பதோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். அவற்றின் சம்பவங்களை வாழ்க்கையில் அமுலுக்குக் கொண்டுவர முயற்சிப்பது முட்டாள்தனம்; அசாத்தியமானதும் கூட! வாயினால் சொல்லிவிட்டதனால் ஹரி உன் அண்ணாவாகிவிடுவானா!''

''நீங்கள் என்ன சொன்னாலும் சரி! இத்தனை வருஷங்களாக ஹரியை நான் அண்ணாவாகவே நினைத்து, முழுக்க முழுக்க அவன் சகோதரியாகவே பழகியிருக்கிறேன். உள்ளத்தில் ஆழப்பதிந்துவிட்ட அந்த சகோதரத்வம் நினைத்தமாத்திரத்தில் மாற்றப்பட முடியாதது!''

''நிர்மலா, உன்னைச் சாது என்று நினைத்தேன்! நீயாடி இப்படியெல்லாம் பேசுகிறாய்!'' என்று நாராயணி அதிசயத்தை அபினயித்தாள்.

'இப்போ பொல்லாதவள் என்ற பட்டம் வாங்கும்படி என்ன சொல்லிவிட்டேன் மாமி!'

ஹரி 'அம்மா! நீ இதுக்கே இப்படி அதிசயப்படுகிறாயே! அவள் போகிற போக்கைப் பார்த்தால் 'அந்த மூன்றாவது வீட்டு மூர்த்தியைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று அவள் அடம்பிடிப்பாள் போலிருக்கிறதே!...' என்றான்.

'அந்தக் காலியையா! ஒரு நாளும் நடக்காது!' என்று அண்ணாசாமி கத்தினார்.

''நடக்கவிட்டு விடுவோமா! அவள்தான் சிறுபிள்ளைத்தனமாக அப்படிச் சொன்னாலும் அவன் கையில் அவளை நாம் ஒப்படைக்க முடியுமா?'' என்று ஒத்து ஊதினாள் நாராயணி.

'நம் பொறுப்பைக் கைகழுவி விட முடியுமா?'

'இத்தனை நாளாக அவளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தது அவளைப் பாழும் கிணற்றில் தள்ளுவதற்காகவா?'

'உலக அனுபவம் இல்லாத குழந்தை அவள்! நல்லது கெட்டதைச் சீர்தூக்கிப் பார்க்கக் கூடிய வயசா அவளுக்கு! அபாயம் நிறைந்த பாதையில் அசட்டுத் துணிச்சலுடன் அவள் இறங்க முயற்சித்தாலும் நாம்தான் தடுத்து நிறுத்தி அவளைக் காப்பாற்றவேணும்...'

'ஹரி என்றால் அவளோடு குழந்தைப்பிராயம் முதல் பழகியவன். அத்தை மகள் என்று அசாத்தியப் பாசம் உள்ளவன். அவளைக் கண்ணின் மணியாக வைத்துக்கொள்வான். நமக்கும் வளர்த்தபாசம்; அவள் முகம் சிணுங்கப் பார்க்க மாட்டோம். அவளைத் தரையில் நடக்க விடாமல் தாங்குவோம்!'

'அவள்தான் அசட்டுத்தனமாக விளைவுகளைச் சீர்தூக்கிப் பாராமல்—ஏதாவது சொன்னாலும், நாம் முன்பின் தெரியாத வெளியிடத்தில் அவளைக் கொடுத்து விடுவோமா என்ன!'

கணவனும் மனைவியும் மாறி மாறி மேற்கண்ட தோரணையில் சிறிது நேரம் பேசினார்கள்.

நிர்மலா திக்பிரமை அடைந்து உட்கார்ந்திருந்தாள். தான்

வரித்தவனைக் கைப்பிடிக்க முடியும், தன் இன்பக்கனவு நிறைவேறும் என்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டு வந்தது அவளுக்கு. அவர்கள் த்வஜம் கட்டிக் கொண்டு அவளுடைய மனோரதம் நிறைவேறாமலிருக்கச் செய்ய முயலும்போது அபலைப் பெண்ணான— சிறுபெண்ணாகிய— அவள் என்ன செய்ய இயலும்? கடைசி முயற்சியொன்று செய்து பார்க்கலாமென்று தீர்மானித்தவளாகக் கெஞ்சும் குரலில் அவர்களை நோக்கிக் கூறினாள்:— 'மாமி மாமா! நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம்! என்மேல் நீங்கள் கொண்டுள்ள பாசத்தை நான் அறியாதவளில்லை. இத்தனை வருஷங்களாக உங்கள் சொந்தப் பெண்ணைவிட ஒரு படி மேலாகவே கருதி என்னை வளர்த்திருக்கிறீர்கள். எனவே எனக்கு உங்களிடம் அசாத்தியமான பாசமும் நன்றியும் உண்டு. அது உங்களுக்கே தெரியும். நீங்கள் கிணற்றில் விழு என்று கட்டளையிட்டாலும் நான் நிறைவேற்றி விடுவேன். ஆனால் ஹரியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாத்திரம் நான் சம்மதிக்க முடியாது. காரணத்தை முன்பே சொல்லிவிட்டேன். தயவுசெய்து அவ்விஷயமாக என்னை வற்புறுத்தாதீர்கள்!...விவாக விஷயமாக என் மனப்போக்கு—என் மனம் யாரை நாடுகிறது என்பது— உங்களுக்குத் தெரியும். அந்த அபிலாஷையை நிறைவேற்றி வைத்தீர்களானால் என் மண வாழ்வு மகிழ்ச்சிகரமானதாயிருக்கும். நிர்ப்பந்தப் படுத்தி ஹரிக்கு என்னைப் பண்ணி வைத்தீர்களானால் யாருக்கும் சுகம் இல்லாது போய் விடும்!

இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவள் குரல் கம்மி, கண்களில் நீர் துளித்துவிட்டது!

'என்ன குண்டு தைரியம் இந்தப் பெண்ணுக்கு! தன் கல்யாண விஷயமாக எந்தப் பெண்ணாவது துளிக்கூடக் கூச்சமின்றி இப்படி அடித்துப் பேசுவாளா! ஹரியை எதிரில் வைத்துக்கொண்டேயல்லவா இப்படி வெட்டொன்றும் துண்டிரண்டுமாகப் பேசுகிறாள் இவள்!' என்று திகைத்து அண்ணாசாமியும் நாராயணியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஹரி கூறினான்:— 'அப்பா! ஒன்று செய்வோமே! நீங்கள் அவளை வளர்த்தீர்கள் என்றாலும் அவள் கல்யாண விஷயமாகத் தீர்மானிக்கவேண்டியவர் அவள் அப்பாவல்லவா? எல்லாவற்றையும் விவரமாக அவருக்கு எழுதிவிடுங்கள்! அவர் நம் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்தால் சரி. இல்லையென்றால் நிர்மலா அத்தக் காவியையே கட்டிக்கொண்டு அவஸ்தைப் படட்டும்!...ஆனால் அவர் நம் அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்காமல் போய் விடுவாரா? அதையுந்தான் பார்த்து விடுவோமே! அவர் கருத்து நமக்குச் சாதகமாக அமைந்து விட்டால் அப்புறம் நிர்மலாவும் ஆட்சேபிக்க முடியாது! வக்கணை பேச மாட்டாள்!'

அண்ணாசாமி யோசனை செய்தார். ஹரி சொன்னது சரியென்றே அவருக்குப் பட்டது. நிர்மலாவின் அப்பா அவளுடைய கல்யாண விஷயமாகப் பிரமாதமான சிரத்தை காட்டி விடுவார் என்று அவருக்குத் தோன்றவில்லை. தங்கள் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர் நடந்து கொள்ளமாட்டார். அப்படி அவர் நடக்க முயற்சித்தாலும் அவருடைய மனைவி—நிர்மலாவின் மாற்றாந்தாய்—அதற்கு இடம் கொடுக்கமாட்டாள் என்று உறுதியாகக் கருதினார் அவர். எனவே 'ஹரி! நீ சொல்வதும் சரிதான்! அவருக்கு எழுதிக்கேட்டு விடுவோம்!' என்று தட்சணமே லிகிதம் வரையத் தொடங்கினார்.

மே 6 உ முதல்
சென்னை மற்றும் தென்னகமெங்கும்

வைஜயந்திமாலா,
எம். ஜி. ராமச்சந்திரன்
நடிக்கும்

சதர்ன் மூவீஸ்

# பாக்தாத்திருடன்

டைரக்ஷன் : T. P. சுந்தரம்
ஸ்டூடியோ : கோல்டன்

நிர்மலாவுக்கு விவாகம் செய்வித்துவிட வேண்டியது அவசியம்; ஹரிக்கு அவளைப் பண்ணிக்கொண்டால் அதிகச் செலவும் ஆகாது. ஒன்றுக்குள் ஒன்றாகப் போய்விடும். பலவிதத்திலும் சௌகரியம்: ஆனால் நிர்மலா மூன்றுவது வீட்டிலிருக்கும் வாலிபன் ஒருவனைத்தான் பண்ணிக் கொள்வேன் என்று பிடிவாதம் செய்கிறாள். அந்த வாலிபன் அவ்வளவு சிலாக்கியமானவன் அல்ல என்பது எங்கள் எல்லாருடையவும் அபிப்பிராயம் என்று எழுதி நிர்மலாவின் தந்தையின் கருத்தைக்கேட்டார். நிர்மலாவின் நலனில் தாங்கள் எவ்வளவு சிரத்தையுள்ளவர்கள் என்பது அவருக்கே தெரியும் என்பதையும் குறிப்பிட மறக்கவில்லை அண்ணாசாமி! 'முடிந்தால் நேரில் புறப்பட்டு வாருங்கள்! இல்லையென்றால் தங்கள் முடிவை உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்' என்று கடிதத்தை முடித்திருந்தார். புறப்பட்டுவர மாட்டார் என்பதுபற்றி அண்ணாசாமிக்குச்சந்தேகமே கிடையாது.

கடிதத்தை வாங்கிக் கொண்ட ஹரி அதை நிர்மலாவிடம் கொடுத்துப் படிக்கச்சொன்னான். அவள் படித்து முடித்ததும் அதைப் பெற்றுக்கொண்டு 'திருப்திதானே நிர்மலா! உங்கப்பாவின் முடிவுக்கு நாங்கள் கட்டுப் படுகிறோம். நீயும் கட்டுப்பட வேண்டும்!' என்று கூறிவிட்டுக் கடிதத்தைத் தபாலில் சேர்க்கச் சென்றான். நிர்மலா பதிலே பேசவில்லை.

★

நிர்மலாவின் தந்தை அருணகிரி சென்னையில் ஒரு கம்பெனியின் மானேஜராகக் கொழுத்த சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார். ஒரே குழந்தையான நிர்மலா ராஜகுமாரியைப் போல் தான் பெற்றோரால் வளர்க்கப்பட்டாள்.

ஆனால் அவளுடைய ஐந்தாவது வயசிலேயே அவள் தாய் குறைப்பிரசவம் ஆகி அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமல் போய்விட்டாள். குழந்தையை உத்தேசித்து அருணகிரி மனைவியை இழந்த ஆறுவது மாசமே ரங்கம்மா என்ற பெண்மணியை இரண்டாந்தாரமாக மணந்தார்.

அன்றிலிருந்து குழந்தை நிர்மலாவுக்குச் சைத்தான் பிடித்தது. இயற்கையிலேயே துஷ்ட சுபாவம் வாய்ந்த ரங்கம்மா மூத்தாள் பெண்ணை எப்படி நடத்தியிருப்பாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அருணகிரி ரத்தக்கண்ணீர் வடித்தார். நிர்மலாவை அந்த ராட்சஸி கொன்றுவிடுவாளோ என்றுகூடப் பயந்தார். அந்தப் பேயை அடக்கவோ அவருக்குத் துணிவில்லை. பல நாட்கள் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்.

நிர்மலாவின் அம்மானான அண்ணாசாமி சென்னையிலேயே ஓர் சாதாரண உத்தியோகத்திலிருந்தார். அவர் வீட்டில் நிர்மலாவைக் கொண்டு ஒப்படைத்தார் அருணகிரி. பாங்கியில் பதினைந்தாயிரம் ரூபாயை ரங்கம்மாவுக்குத் தெரியாமல் கட்டினார். அந்தப் பணத்தின் வட்டியை அவ்வப்போது நிர்மலாவின் போஷணைச் செலவுக்காக அண்ணாசாமி வாங்கிக்கொள்வதென்றும், நிர்மலா பெரியவளாகிக் கல்யாணம் ஆனதும் அந்தப் பதினைந்தாயிரமும் அவளைச் சேரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்.

'நம்முடைய இன்ப வாழ்வுக்கு இடையூறாக அந்தப் பீடை எதற்கு என்றுதான் அதன் மாமன்வீட்டில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டேன்!' என்று மனைவியிடம் மேலுக்குச் சொன்னார். அவள் அவரை அணைத்துக் கொண்டு கொஞ்சி, தன்பாராட்டுதலைத் தெரிவித்தாள்.

இரண்டு வருஷங்கள் கழித்து அருணகிரிக்குக் கல்கத்தாவுக்கு

மாற்றலாகியது. அவர் கல்கத்தாவுக்குப்போன பிறகு பெண்ணைப்பார்க்க அடிக்கடி வரமுடியவில்லை. ரங்கம்மா அதற்கு இடம் கொடுப்பதில்லை. இரண்டு வருஷத்துக்கொரு முறை ஆபீஸ் காரியம் என்று மனைவியிடம் புளுகிவிட்டுச் சென்னைக்கு வந்து மகளைப் பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தார். வரவர அதுவும் குறைந்துவிட்டது.

இப்போது அவர் இந்தப் பக்கம் வந்து நாலுவருஷங்களுக்கு மேல் ஆகியிருந்தது. அவரிடமிருந்து கடிதமும் கிடையாது!

நிர்மலாவுக்கு இப்போது பத்தொன்பது வயசு நடந்துகொண்டிருந்தது.

மூன்றாவது வீட்டு மூர்த்தி ஏகாங்கி. உத்தமகுணசாலி. நல்ல உத்தியோகம் ஒன்றில் இருந்தான். அவன் ஒரு நாள் தெருவோடு போகும்போது, ஏதோ காரியமாக வாசற்புறம் வந்த நிர்மலாவைப் பார்க்க நேர்ந்தது. நங்கையும் அவனைப் பார்த்தாள்.

அப்புறம் தினந்தோறும் அவன் ஆபீஸுக்குப் போகும் வேளையிலும், திரும்பி வரும் வேளையிலும் நிர்மலாவுக்கு வாசல்புறம் தான் வாசஸ்தலம்!

அவர்கள் வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் நயனங்கள் ஆயிரமாயிரம் இன்பமொழிகள் பேசிக்கொண்டன! நிற்க.

அண்ணாசாமியின் புதல்வன் ஹரி ஒரு பிரபல வர்த்தக ஸ்தாபனத்தில் உத்தியோகத்திலிருந்தான். அவனிடம் விசேஷத் திறமை ஒன்று அமைந்திருந்தது. யாருடைய கையெழுத்தையும் ஒருதரம் ஊன்றிக் கவனித்தானானால் அடுத்த கணம் அதேமாதிரி அச்சாகக் கையெழுத்துப் போட்டுவிடுவான்! துளிக்கூட வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது! சின்ன வயசில் விளையாட்டாகப் பழகிய அந்தக் 'கலை' வினையைக் கொணர்ந்துவிட்டது!

போதாத காலத்தின் விளைவாகக் குதிரைப்பந்தயத்தில் அவன் நாட்டம் சென்றது. பந்தய மைதானத்தில் தோற்பதுக்குப் பணம் தேவைப்பட்டது. அவன் கம்பெனியின் வாடிக்



கைக் காரர்களிடமிருந்து—அவர்கள் மேற்படி கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிக்காக வந்த சில 'செக்'குகளை மானேஜரின் கையெழுத்தை அநாயாசமாகப் போட்டு, மாற்றிப் பணத்தை உபயோகித்துக் கொண்டுவிட்டான்!

சிலநாட்கள் கழித்துக் கணக்குகளில் இரண்டாயிரத்துச் சொச்சம் தொங்கல் விழவே தீவிர விசாரணை நடைபெற்றது. அவன் மோசடிகண்டு பிடிக்கப்பட்டது! விஷயம் கோர்ட்டுவரை போய்விட்டது.

அந்த வழக்கை விசாரித்த மாஜிஸ்டிரேட் அவன் இளம் வயதைக்கண்டு இரக்கங்கொண்டு, அவனுக்குக் 'கோர்ட்டுக் கலையும்வரை சிறை'த் தண்டனை விதித்துவிட்டுவிட்டார்.

ஹரி நல்லபிள்ளைதான். ஏதோ வினைப்பயனால்தான் அவன்புத்தி பிசகி அந்தக் காரியத்தைச் செய்துவிட்டான். கோர்ட்டில் போய் சந்தி சிரித்தபின் அவன் பரம யோக்கியனாகிவிட்டான். குதிரைப் பந்தயமைதானத்தைப் பற்றி ஸ்மரிப்பதுகூட இல்லை. எங்காவது ஜட்கா வண்டிக் குதிரை எதிர்ப்பட்டால்கூடக் கண்ணை மூடிக்கொண்டான்!

ஆயினும் அவன் யோக்கியனாகிவிட்டான் என்பதை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை! எந்த ஸ்தாபனத்திலும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. அவன் பெயருக்கு ஏற்பட்டுவிட்ட கறையைக்கண்டு எல்லாரும் மிரண்டார்கள்!

ஒரு வருஷம் இப்படியே ஓடிவிட்டது. அண்ணாசாமி மகனுடைய வருங்காலத்தைப் பற்றிக் கவலைகொண்டார். அவனுக்கு எங்கும் வேலையே கிடைக்காவிட்டால்? அவனுக்கு யாருமே பெண் கொடுக்க முன்வராவிட்டால்? வேதனையுடன் தீவிரமாகச் சிந்திக்கலானார்.

கடைசியில் நிர்மலாவை அவனுக்குப் பண்ணிவைக்கும் அற்புதத் திட்டம் அவருடைய மூளையில் உருவாயிற்று. நிர்மலா அவனுடையவளாக ஆகிவிட்டால் அவளுடைய பதினையாயிரம் ரூபாயும்அவனுடையதாகிவிடும். அதை முதலாக வைத்துக் கொண்டு ஏதாவது தொழிலிலாவது அவன் இறங்கலாம். ரங்கம்மாவுக்கும் குழந்தை எதுவும் பிறக்கவில்லை. இனி பிறப்பதும் துர்லபம்! எனவே அருணகிரியின் ஆஸ்தியிலும் பிற்பாடு நிர்மலாவுக்குப் பங்கு கிடைக்கலாம் ஹரியின் எதிர்காலம் அமோகமாயிருக்கும்!

அப்பா, அம்மா, பிள்ளை மூவரும் ரகசியமாகக் கலந்தாலோசித்தார்கள். அண்ணாசாமியின் யோசனையை மற்ற இருவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஹரிக்கு வெகுநாட்களாகவே நிர்மலா மீது உள்ளூற அசாத்தியமான மையல் உண்டு. அவள் ஏழையாக இருந்தாலும் அவளை அவன் காதலித்திருப்பான். அவளுடைய பணத்தைஉத்தேசித்தது மாத்திரம் அவன் அவளை விரும்பவில்லை.

நிர்மலா தங்கள் சொல்லைத் தட்டமாட்டாள். அவள் சற்று ஆட்சேபித்தாலும் அவளை வற்புறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம் என்று கருதினார்கள் அண்ணாசாமியும் நாராயணியும். அவளிடம் அதைப் பிரஸ்தாபிக்கச் சந்தர்ப்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தார்கள். 'நிர்மலாவுக்கு வயசாயிடுத்து, கல்யாணம் செய்விக்கவேண்டும்'. 'நாம்தான் முயற்சி எடுக்கவேணும்' என்ற ரீதியில் நிர்மலாவின் காது பட அடிக்கடிப் பேசலானார்கள்.

இதற்கிடையேதான் ஒருநாள் மூர்த்தி அண்ணாசாமியைச் சந்தித்து நிர்மலாவைத் தனக்குக் கொடுக்கும்படிக்கேட்டான்.

அவன் சொன்னதைப் பார்த்தால் அவனுக்கும், நிர்மலாவுக்கும் ஏதோ உடன்படிக்கை இருக்கும்போல் அண்ணாசாமிக்குத் தோன்றியது! கவலைகொண்டார் அப்புறம் அவர் திட்டம் என்ன ஆவது! அன்று சாயங்காலம் தான் அவரும், நாராயணியும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு நிர்மலா எதிரில் விஷயத்தைப் பிரஸ்தாபித்துத் தங்கள் கோரிக்கைக்கு அவளை இணங்கவைக்கப் பெரு முயற்சி செய்தது.

★

ஹரி தகாத காரியம் செய்து வேலையைப் போக்கிக் கொண்டு விட்டானே என்பதனால் நிர்மலாவுக்கு அவன் மேல் வெறுப்பு ஏற்பட்டிருக்கவில்லை. அவன் நிலைமைக்கு அவள் மிகவும் அனுதாபப்பட்டாள். அவன்மேல் அவளுக்கு மிகுந்த பற்றுதல் உண்டு. எனினும் அவள் கூறியதுபோல் அது சகோதர பாசந்தான். அவன்மேல் அவளுக்கு வேறு விதமான அன்பு என்றும் ஏற்பட்டதில்லை.

என்னவோ அப்பாவுடைய அபிப்ராயத்தை எழுதிக் கேட்பதாகச் சொன்னபோது தடை சொல்லாமலிருந்து விட்டாளே தவிர, நாளாக ஆக, அப்பா தன் விருப்பத்தை ஆமோதிப்பாரா என்பதில் அவளுக்கு மிகுந்த ஐயம் ஏற்பட்டுவிட்டது. இத்தனை நாளாக இல்லாத சிரத்தை அவருக்கு அவள்மீதுதிடீரென்று இப்போது ஏற்பட்டுவிடப் போகிறதா? நாலு வருஷங்களாக அவள் இருக்கிறாளா, போய்விட்டாளா என்பதைக்கூடத்தெரிந்து கொள்ள அவர் முயற்சிக்கவில்லையே! அப்படிப்பட்டவர் மாமாவின் கருத்துக்கு விரோதமாக அவள் கோரிக்கையை ஆதரிக்கப் போகிறாரா! அவளுக்கு நம்பிக்கை வெகுவாகத் தளர்ந்து விட்டது. அப்பா ஹரியைக் கல்யாணம் செய்துகொள்வதற்குச் சம்மதம் கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. தவித்துத் துடிக்கும் உள்ளத்துடன், தன் அபிலாஷையை நிறைவேற்ற வேணும் என்று ஓயாமல் ஆண்டவனைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி எதுவும் அவளுக்குப் புலப்படவில்லை. எல்லாரையும் எதிர்த்து, வீட்டைவிட்டு வெளியேறித் தன் காதலனைக் கரம் பற்றுவதற்கும் அவளது மனப்பாண்பு இடங்கொடுக்கவில்லை.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலை 'அப்பா! நிர்மலாவின் அப்பா பதில் எழுதிவிட்டார்! பெண்ணின் கட்சியைத் தான் ஆதரித்திருக்கிறார்!' என்று வாடிய முகத்துடன் ஏற்கெனவே அவன் கவரைப் பிரித்து எடுத்திருந்த கடிதத்தை அண்ணாசாமியிடம் கொடுத்தான் ஹரி.

அருணகிரியின் பெயர், உத்தியோகம், விலாசம் முதலியவை அச்சடித்திருந்த லெட்டர் பேப்பரில்' டைப் அடித்து, அடியில் அவருடைய கையொப்பமிட்டு வந்திருந்த அக்கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தார் அண்ணாசாமி. தமது அபிப்பிராயத்துக்கு விரோதமாக அருணகிரி எழுதியிருப்பார் என்பதை அவரால் நம்பமுடியவில்லை. ஆனால் இத்தனை சான்றுகள் இருந்தனவே!

அருணகிரியின் கடிதத்தின் சாரம்:— 'நிர்மலா விரும்புபவனை அவளுக்கு மணம் செய்விப்பது தான் சிலாக்கியம். கல்யாணம் என்பது இன்றுசெய்து நாளைக்கு அழிக்கக் கூடியதல்ல. நிர்மலாவின் சந்தோஷந்தான் முக்கியம். நல்ல குலத்தில் வந்த, புத்திசாலிப் பெண்ணான நிர்மலா, தனக்குத்தகுதியற்ற கணவனை ஒரு நாளும் தேர்ந்தெடுக்கமாட்டாள். அவள் அறிவில் எனக்கு மிகவும் நம்பிக்கை உண்டு. எனவே அந்த மூர்த்தியையே அவளுக்குப் பண்ணிவைக்க ஏற்பாடு செய்யவும். வருகிற மாதம்

முதல் தேதி ஒரு முகூர்த்தம் இருக்கிறது. அன்றே கல்யாணத்தை நடத்திவிடுங்கள். மிகவும் சிக்கனமாக வடபழனி கோயிலில் நடத்தவும். அதற்குச் செலவாகும் சிறு தொகையை பிற்பாடு நான் கொடுத்து விடுகிறேன். கல்யாணத்தன்று நான் அங்கு வந்து சேருகிறேன். முன்னுல் வரமுடியாதபடி கடுமையான வேலைத் தொந்தரவு. **நான் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் கல்யாணத்தை அவசியம் நடத்திவிடவும்.**

ஹரிக்கு வேறிடத்தில் பெண் கிடைக்காமல் போய்விடப் போகிறதா என்ன?

அண்ணுசாமிக்கும், நாராயணிக்கும் இது எதிர்பாராத பேரிடியாக இருந்தது. 'வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்!' பிராப்தம்போல்தானே நடக்கும்? என்று ஹரி அவர்களுக்கு ஆறுதல் கூறினுன். நிர்மலாவோ நன்றியுடன் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கி ஆண்டவனை வாழ்த்தினுள். அண்ணுசாமி மூர்த்தியைத் தேடிப்போனுர் வேண்டாவெறுப்பாக.

சிக்கனக் கல்யாணத்துக்கு மூர்த்தி ஒப்புக்கொண்டான். தனக்குப் பைசாகூட அவர்கள் வரதட்சிணை கொடுக்க வேண்டாம் என்றும் கூறிவிட்டான்.

குறிப்பிட்ட நன்னுளில் வெளியார் யாருமே அழைக்கப்படாமல் வடபழனி யாண்டவர் சன்னிதியில் மூர்த்தி—நிர்மலா விவாகம் நடைபெற்றது.

அருணகிரி வரவில்லை! நிர்மலாவுக்கு அவ்விஷயத்தில் ரொம்பவும் குறைதான். என்ருலும் அவள் உள்ளங்கவர்ந்தவனைக் கைப்பிடித்துவிட்ட பெருமகிழ்ச்சியில் அந்தக் குறை மறைந்துவிட்டது!

நிர்மலா அன்றே கணவன் வீடு சென்றுவிட்டாள்.

ஒரு வாரம் கழித்து அருணகிரி வந்தார். 'வாருங்கள்; கல்யாணத்தன்று வந்து விடுவதாக எழுதியிருந்தீர்கள். ஆனல் வரவில்லையே! வேலை அவ்வளவு கடுமையா?' என்று அவர்மேல் தமக்கிருந்த கசப்பை மறைத்துக் கொண்டு வரவேற்ருர் அண்ணுசாமி.

"கடிதமா கல்யாணமா! என்ன புதிர் போடுகிறீர்கள்! ஆபீஸ் காரியமாக வல்லவோ வந்தேன் நான்" என்று விழித்தார் அருணகிரி.

திகைப்புடன் உள்ளே போய் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்த அண்ணுசாமி, விஷயங்களைச் சுருக்கமாகக் கூறி, கடிதத்தைக் கொடுத்து "உங்கள் கடிதம் இல்லையா இது!" என்ருர்.

அதைப் பார்த்தார் அருணகிரி; "நான் எழுதியது இல்லை. உங்கள் கடிதமும் எனக்கு வரவில்லை. இந்த மாதிரி 'லெட்டர் பேப்பரும்' என்னிடம் கிடையாது. இது 'ஃபோர்ஜெரி'க் கடிதம்!" என்ருர் ஆத்திரத்துடன்.

ஹரி குறுக்கிட்டான்:—"தயவு செய்து மன்னியுங்கள். நிர்மலாவுக்கு இன்ப வாழ்வை அளிக்க நான் செய்த ஃபோர்ஜெரி அது!" என்ருன்.

அனைவரும் திடுக்கிட்டார்கள். ஹரி அப்பாவை நோக்கித் தொடர்த்தான்:—"என்ன பாவம் செய்தேனே, வேலையிழந்து, மானமிழந்து, அசாத்திய துயரை அனுபவிக்கிறேன். இஷ்டமில்லாத நிர்மலாவை நிர்ப்பந்தப்படுத்தி மணந்து அவள் பாவத்தைவேறு கொட்டிக் கொண்டால் அதன் விளைவுகள் எப்படியிருக்குமோ என்ற பீதிக்குள்ளானேன். நிர்மலாவை மணக்க எனக்கிஷ்டமில்லை என்று சொன்னுல் நீங்கள் விட்டுவிடப் போவதில்லை. அவள் அந்த

மூர்த்தியைப் பண்ணிக் கொள்ள நீங்கள் அனுமதிப்பதும் ரொம்ப சந்தேகம். எனவே என் 'தனித் திறமை'யை உபயோகிக்கத் தீர்மானித்தேன். உங்கள் லெட்டரைத் தபாலில் சேர்க்கவே இல்லை நான்! நிர்மலாவின் அப்பாவின் பெயர், விலாசம் முதலியவைகளை அச்சடித்துக் கொடுக்கும்படி அச்சாபீஸ் ஒன்றில்—லெட்டர் பேப்பர் வாங்கிக் கொடுத்து—ஏற்பாடு செய்தேன். அதில் ஒரு பேப்பரை எடுத்து எனக்குத் தெரிந்தவன் ஒருவனுடைய மெஷினில் அக்கடிதத்தை டைப் செய்தேன். அவருடைய பழைய கடிதங்கள் சிலவற்றைத் தேடி எடுத்து அவர் கையெழுத்தைக் கவனித்து அந்த மாதிரியே போட்டுக் கடிதத்தை உள்ளூரிலேயே 'போஸ்ட்' பண்ணினேன். தபால் முத்திரையை நீங்கள் கவனித்து விட்டால் என்ன பண்ணுவதென்று, உறையை நானே பிரித்துக் கடிதத்தை மாத்திரம் உங்களிடம் கொடுத்தேன்...... நிர்மலாவின் அப்பா உங்கள் கட்சியையே ஆதரித்து எழுதி விட்டால் என்ன பண்ணுவது என்ற எண்ணத்தினால்தான் நானே கடிதத்தைத் தயார் பண்ணி விட்டேன். நான் செய்த இந்த ஃபோர்ஜரி மன்னிக்கக் கூடியது என்றே கருதுகிறேன். இல்லையென்றால் நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்!''

அண்ணாசாமியும் நாராயணியும் பிரமித்துப் பேச்சற்று நின்றார்கள்! அருணகிரி கண்களில் நீர் மல்க அவனை அணைத்துக் கொண்டு பாராட்டினார்!

∴ ∴ ∴

மகள் வீட்டில் நாலு நாள் தங்கிவிட்டு அருணகிரி மீண்டும் கல்கத்தாவுக்குச் சென்றபோது ஹரியையும் உடன் அழைத்துச் சென்றார், அவனுக்கு உத்தியோகம் பண்ணி வைப்பதற்காக!

★

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் ''பணம் பந்தியிலே'' என்ற படத்தில் டி. ஆர். ராமச்சந்திரனும், ராஜ்யஸ்ரீயும்

# கைக்கு எட்டியது

ஏ. ஸி. ஸ்ரீநிவாஸன்.

## காட்சி I

[ரகு ஒரு வாத்தியத்தை வாசித்துக் கொண்டிருக்கிருன்.]

சோமு : (சலிப்புடன்) அடடா.. இந்த வீட்டிலே கொஞ்ச நேரம் மனுஷன் நிம்மதியாக இருக்க முடியல்லியே...ரகு ஏய் ரகு...ம்... அவனைச் சொல்லி குத்தமில்லே அவனை செல்லமாக வளர்த்து குட்டிச்சுவராக்குகிருளே...... அவளைத்தான் கேட்கணும்... ராஜீ... ரா... ஜீ......

ராஜீ : என்னங்க?

சோமு : உன் ஆசை மகன் வாசிக்கிற வாத்தியத்தை ஒடிச்சு அடுப்பிலே போடு.

ராஜீ : (பெருமையுடன்) ஏங்க... நல்லாத்தானே வாசிக்கிருன்.

சோமு : சரிதான்போதும். அந்த சப்தத்தை உடனடியாக நிறுத்தச் சொல்லு.

ராஜீ ; கொழந்தைன்னு அப்படித் தானுங்க...

சோமு : நல்ல கொழந்தை...... நல்ல விளையாட்டுத்தான் போ.

ராஜீ : கோவிச்சுக்காதிங்க...

சோமு : எனக்கு ஆபீஸ் வேலை தலைக்குமேலே கிடக்குது. இந்த இரைச்சலிலே எனக்கு வேலையே ஓடல்லே...

ராஜீ : (போலிக் கோபத்துடன்) என்னங்கயிது ?...... வர வர லீவு நாட்களிலேகூட உங்க கண்டிப்பு அதிகமாக இருக்குதே.

சோமு : ......ம்... அதுக்கென்ன செய்யறது ? சொந்த வியாபாரம்னு வீட்டிலேகூட, கணக்குகளை பார்க்க வேண்டியது நெறைய இருக்குது.

ராஜீ : (பெருமூச்சுடன்) ம்...... நீங்க எவ்வளவுதான் ஓடி ஓடி சம்பாதிச்சாலும்......ம்... அதுக்கெல்லாம் கொடுத்து வைச்சிருக்கணுமுங்க.

சோமு : இப்போ உனக்கென்ன கொறை ?

ராஜீ : என்னவா ? எல்லாமே தான். நாலு வார்த்தை என்னிடத்திலே தனியா சந்தோஷமா உட்கார்ந்து பேசி யிருக்கீங்களா ? அதான் இல்லே நாலு இடங்களுக்குத்தான் கூட்டிக்கிட்டு போயிருக்கீங்களா...ம்... என் ராசி அப்படி.

சோமு : வீணுக எதை எதையோ நினைச்சுக்கிட்டு மனசை குழப்பிக்காதே...

(மீண்டும் ரகு பலமாக வாத்தியத்தை வாசிக்கிருன்)

சோமு : ராஜீ! ரகுவை கண்டிச்சு நல்லா படிக்கச் சொல்லு

ராஜீ : வளர்ற கொழந்தைங்களை சும்மா கண்டிக்கக் கூடாதுங்க.

சோமு : படிப்பிலே கண்டிப்பு இல்லாவிட்டா, அவன் ஒழுங்கா படிக்கமாட்டான் ராஜீ.

ராஜீ : நீங்க நினைக்கிறபடி அவன் ஒண்ணும் மக்கு இல்லீங்க.

சோமு ; பரிட்க்ஷையிலே மார்க்கு கொறைவாகத்தானே வாங்குகிருன்.

ராஜீ ; இல்லீங்க. இந்த தடவை நல்லா கஷ்டப்பட்டு படிச்சிருக்கிருன். அரை வருஷப் பரிட்சையிலே நல்ல மார்க்கு வாங்குவான்.

சோமு : சின்ன வயசிலேயே படிப்பிலே அதிகம் கவனம் செலுத்தணும்.

ராஜீ : அது சரிங்க...... ரகுவுக்கு பாட்டுன்னு ஆசையுங்க.

சோமு : பாட்டா ?

ராஜீ : ஆமாங்க. அதனுலேதான் அவனுக்கு ஒரு வாத்தியம் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். சினிமா பாட்டெல்லாம் அப்படியே வாசிக்கிருனுங்க.

சோமு : நோ... நோ... இப்படியெல்லாம் அவன் ஆசையை வளர்க்கக் கூடாது.

ராஜீ : என்னங்கயிது ? லீவு நாட்களிலேகூட பொழுதுபோக்கு இல்லேன்னு எப்படிங்க?

சோமு : அந்த நாளிலே எங்கப் பாரு என்னை எப்படி வளர்த்தாரு தெரியுமா ?

ராஜீ : எல்லாம் தெரியுமுங்க. உங்க குடும்பத்திலே பாட்டுன்னுலே யாருக்கும் பிடிக்காது உங்களுக்கும் சங்கீதம்ன்னு வேம்பா கசக்கும்.

சோமு : (வெறுப்புடன்) சரி... சரி... உன்னிஷ்டம்.

ராஜீ : இந்தக்காலத்து பிள்ளேங்களே அவுங்க போகிற போக்கிலே விட்டுத்தான் பிடிக்கணும்.

சோமு : போதும் உன் தத்துவம் வாயை மூடிக்கிட்டுப் போ.

ராஜீ : சரி... சரி... நான் போ றேன்.

## காட்சி 2

ரகு: (தயங்கியவாறு) அப்பா !

சோமு : என்னடா ரகு !

ரகு . வந்து......

சோமு : என்னடா வந்து ? பள்ளிக்கூடம் தொறந்து ஒரு வாரமாகிறது. பரிட்சை மார்க்கெல்லாம் கொடுத்துட்டாங்களா ?

ரகு : இல்லேப்பா...ம்...... இன்னும் ரெண்டு நாளேக்குள்ளே உங்க பேருக்கே தபால் மூலம் அனுப்பிச்சுடுவாங்க.

சோமு : சரி... சரி...... நல்லா ஒழுங்கா படி.

ரகு : அப்பா... அப்போவ்...

சோமு : என்னடா வேணும் ?

ரகு : ஒண்ணுமில்லேப்பா வந்து சைக்கிள் வேணும்ப்பா.

சோமு : சைகிளா ?

ரகு : ஆமாம்ப்பா.

சோமு : எதுக்கு ?

ரகு : பள்ளிக்கூடம் போவறதுக்குத்தான்ப்பா.

சோமு : ரெண்டு பர்லாங் தூரத்திலிருக்கிற பள்ளிக்கூடம் போக, உனக்கு ஒரு வாகனமா ?

ராஜீ : ஆமாங்க. கொழந்தை ரொம்ப நாளாக ஆசைபட்டுக்கிட்டிருக்கிருன்.

சோமு : ஓகோ... உன் சிபாரிசின் மேலேதான் என்னிடத்திலே வந்திருக்கிருனு.

ராஜீ : ஆமாங்க...

சோமு : ...ம்... இத்தனே நாள் வீட்டுக்குள்ளேயே விளேயாடிக்கிட்டிருந்தான். இனிமே வெளியே சுத்திக்கிட்டிருப்பான், படிப்புக்கு நேரமேது ?

ரகு : பள்ளிக்கூடம் நேரம் தவிர, மற்ற நேரத்திலே சைக்கிளே தொட மாட்டேன்ப்பா.

சோமு: சரி... சரி... பரிக்ஷை மார்க் வரட்டும். எல்லா பாடத்திலேயும், பாஸ் மார்க் வாங்கினு வாங்கித்தர்ரேன்.

ராஜீ : (முணு முணுத்தவாறு) நிபந்தனே என்ன வேண்டிக் கிடக்குது ? சரின்னு ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா ?

## காட்சி 3

சோமு : ராஜீ ! இப்படி வா... உன் மகன் வாங்கின மார்க்கை படிக்கிறேன் கேள்.

ராஜீ : எல்லாவற்றிலும் பாஸ் மார்க் தானே ?

சோமு : ஒவ்வொன்னு படிக்கிறேன். மொதல்லே தமிழ்... 42... ரொம்ப கொறைவுதான்.

ரகு : ...ம்... அதுவா... அம்மா ! சொல்லிக் கொடுக்காத செய்யுளை யெல்லாம் கேட்டுட்டாங்கம்மா !

சோமு : ...ம்... ஆங்கிலம்.

ரகு : பாஸ் மார்க் வாங்கியிருப் பேன்ப்பா,

சோமு : என்னடா பிரமாதம் ? 36 மார்க் வாங்கியிருக்கிறே.

ராஜீ : அதுபோதுமுங்க. இந்தக் காலத்திலே ஆங்கிலம் அதிகம் தேவையில்லேங்க.

சோமு : சமஸ்கிருதம்... 35

ரகு : ரெண்டு மாஸமா, அந்த வாத்தியார் லீவிலே யிருந்தாரப்பா பாடமே எடுக்கல்லே ஆனு கேள்வி களை மட்டும் கேட்டுட்டாங்க.

சோ : ஹிந்தி... 45...... பரவா யில்லே.

ராஜீ : அதுதானுங்களே இப்போ முக்கியம். நம்ம தேசிய மொழின்னு கொழந்தை கவனமா படிச்சிருக் கானுங்க.

சோமு : கணக்கு... பிரயோஜன மில்லே...

ரகு : எல்லா கணக்கும் போட் டேன்ப்பா.

சோமு : மார்க்கை காணுமே...

ரகு : ஆன்ஸர் எல்லாம் தப்பா போயிடுச்சுப்பா.

சோமு : என்னது?

ரகு : வழியெல்லாம் சரியாத் தான் போட்டேன். அதுக்கு மார்க் கொடுத்தாக்கூட பாஸ் மார்க் தேறுமே.

சோமு : போடா இடியட்... பயப் படாதே... 78 மார்க் வாங்கியிருக் கிறே...

ராஜீ : என்னது? எழுபத் தெட்டா ?

சோமு : என்னடீ ஆச்சர்யப் படறே... நம்ம மகன்கூட கணக் கிலே இவ்வளவு மார்க் வாங்கிட் டானேன்னு பார்க்கிறியா... எனக் தான் சந்தேகமாக இருக்குது.

ராஜீ : நீங்ககூடத்தான் சின்ன வயசிலே கணக்கிலே வீக்னு உங்கப்பாரு சொல்லுவாரு... ரகு எவ்வளவோ தேவலே.

ரகு : (தனக்குள்) எனக்கும் ஆச்சர்யமாகத்தானிருக்குது...அந்த கிளிமூக்கு வாத்தியாரு நல்லவரு தான்... தாராளமாக மார்க்கை அள்ளிப் போட்டிருக்காரு.

சோமு : ...ம் ...ராஜீ... மேலே படிக்கிறேன் கேளு. விஞ்ஞானம்.

ரகு : நாற்பது வாங்கியிருப் பேன்ப்பா.

சோமு : சரியா சொன்னே. ஏன் உன் திட்டம் அவ்வளவு தானே ?

ரகு : இல்லேப்பா. அந்தப் பரிட்சை தினத்தன்று எனக்கு லேசா ஜுரம் இருந்ததப்பா.

சோமு : அந்த நொண்டி சாக் கெல்லாம் எனக்கு வேண்டாம்.

ராஜீ : ஆமாங்க...... நான்கூட பரிட்ஷைக்குப் போக வேண்டா மின்னுதான் சொன்னேன். அவன் தான் பிடிவாதமாகப் போய் எழுதி னுனுங்க.

சோமு : அடுத்தது சமூக அறிவி யல்... பரவாயில்லே... 37 வாங்கி யிருக்கிருன்.

ராஜீ : என்னங்க... பிரமாதமாக பயமுறுத்தினீங்களே... ரகு நல்லாத் தானே மார்க் வாங்கியிருக்கிருன்.

சோமு : ......ம்......

ராஜீ : ஆமாம்னுதான் சந் தோஷமா ஒரு வார்த்தை சொல்லுங் களேன்.

சோமு : உன் பிள்ளை கெட்டிக் காரன்தான் சரி தானே ?

ரகு : அப்பா... கலையும் கைத் தொழிலும்...... அதிலே எவ்வளவு மார்க் அப்பா. படிக்கவேயில்லையே!

சோமு : பெயில் மார்க் வாங்கி யிருக்கிறே.

ரகு : என்னது?

ராஜீ : போனுப் போவுதுடா.

ரகு : அப்படி இல்லேம்மா...... நான் தான்ம்மா இதுவரைக்கும் அதிலே முதல். எழுபது மார்க்குக்கு கொறையாது.

உங்கள் அபிமான நட்சத்திரங்கள் அனைவரும்
தோன்றி ஒளிவீசும் சரித்திரப் பொன்னேவியம்

# மே 27உ முதல்

## சென்னை கெயிட்டி, பாரத், சயானி

மற்றும் தென்னுடெங்கும்



# ராஜ பக்தி

தயாரிப்பு P. ராஜமாணிக்கம்

டைரக்ஷன்: கே. வேம்பு

சோமு : இதோ கொறைஞ்சிருக்குதே. 27 தானே வாங்கியிருக்கிறே.

ரகு : இதிலே ஏதோ தவறு நடந்திருக்குதுப்பா...

ராஜீ : பரவாயில்லே போடா. இதுவரைக்கும் வாங்கின மார்க்கே போதும்......ம்...... என்னங்க... மொதல் காரியமாக, சாயந்திரமே அவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்துடுங்க...

சோமு : சரி...

(ராஜா என்ற சிறுவன் ஓடோடியும் வருகிறுன்.)

ரகு : என்னடா ராஜா?

ராஜா ; டேய் ரகு. உன் மார்க் லிஸ்ட் வந்ததாடா.

ரகு : ஓ...... இதோ வந்திருக்குதே...... நான் எல்லாவற்றிலும் பாஸ். அதுக்காக எனக்கு எங்கப்பா இன்னிக்கி சாயந்திரம் சைக்கிள் வாங்கித்தரேன்னு சொல்லியிருக்கார். ஆமா நீ எவ்வளவு வாங்கியிருக்கிறே...

ராஜா : இன்னும் தெரியல்லியேடா.

ரகு : ஏன்? உனக்கு இன்னிக்கி போஸ்ட்டிலே வரல்லியா?

ராஜா : வந்தது. ஆனு அது என் மார்க் அல்ல.

ரகு : என்னது?

ராஜா : இதோ இதுதான். உன்னுடைய மார்க் லிஸ்ட் எங்கப்பா பெயருக்கு தவறுவலாக வந்தது.

சோமு : உன்னுடையது என்ன ஆச்சு?

ராஜா : தவறுதலாக உங்களுடைய விலாசத்துக்கு வந்திருக்குதான்னு விசாரிக்க வந்தேன்.

ராஜீ : அதெப்படி வரும்?

ராஜா : நான் எல்லா பாடத்திலேயும் பாஸ் செய்வேன். ஆனு கலேயும் கைத்தொழிலும்ங்கிறதிலே கொறைவாக வாங்குவேன். ஆனு ரகு எனக்கு நேர் எதிர்.

சோமு : ...ம்... இரு... எனக்கு வந்த லிஸ்டைப் பார்க்கிறேன்...... ஆமாம்... ராஜீ! நானும் கவனிக்கவில்லே .. பெயர்: ராஜாராமன்னு எழுதியிருக்குது.

ராஜீ : அந்த லிஸ்டை வாங்கிப் பாருங்க...

ராஜா : இதோ ரகுவினுடைய லிஸ்ட்.

சோமு : பெயர்: ரகுராமன்.

ராஜீ : இதுதான் நம்ம கொழந்தையினுடையது......ம்...... மார்க் என்னென்ன சட்டுனு படியுங்க.

சோமு : ...ம்...... படிக்கிறதுக்கு என்ன இருக்குது?... எல்லாவற்றிலும் இருபதுக்கு கீழேதான்.

ராஜீ : அவ்வளவுதான் அவன் அதிருஷ்டம்.

சோமு : நான் அப்பவே நினைச்சேன். கணக்கிலே இவனுவது 78 மார்க் வாங்கிறதாவது.

ரகு : நானும்தான் சந்தேகப்பட்டேன். கலேயும் கைத்தொழிலும்ங்கிறதிலே, முதல் மார்க் கிடைக்காம பெயில் ஆகிட்டேனே எப்படியிருக்க முடியும்னு...?

ராஜீ : அப்படின்னு...

சோமு : முழு வருஷப் பரிட்சையில் பாஸ் செய்தாதான் சைக்கிள் கிடைக்கும்.

ரகு : இந்த ராஜா எப்பொழுதுமே அவசர குடுக்கை சைக்கிள் வாங்கிக் கொடுத்த பிறகுதான் இதைக் கொடுக்கக் கூடாதா?

ராஜீ : கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன கதையாயிற்றே.

(ராஜா யாருக்கும் தெரியாமல் ஓடி மறைகிருன்.)

∴ ∴

# நீறு விலகிறுல்

தலைப்பை இழுத்துப் போர்த்தியவாறு வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் செல்லம்மாள். சற்றைக்கெல்லாம் தெருவில் டாக்ஸி ஒன்று வந்து நின்றது. புது மணத்தம்பதி இறங்கியதும், அவர்களை கிழக்கு முகமாக நிற்கச் சொல்லி ஆரத்தியைச் சுற்றிவிட்டு நிமிர்ந்து அந்தப் பெண்ணைப் பார்த்தாள் அவள்.

நல்ல சிவப்பான நிறம் அந்தப் பெண்ணுக்கு. அகன்ற நெற்றியில் சிறிய குங்குமப்பொட்டு காணப்பட்டது. மூக்கில் ஆபரணம் ஒன்றும் இல்லை. காதுகளில் மட்டும் தோடுகள், கழுத்தில் முத்து அட்டிகை. ஆனால் கழுத்திலே செல்லம்மாள் எதிர்பார்த்த மாங்கல்யச்சரடு எங்கே!

டாக்ஸி சப்தம் கேட்டு வெளியே வந்தார் செல்லம்மாளின் கணவர் கணபதி அய்யர்.

"சுந்தரேசா! உன் மனைவியை அழைத்துக் கொண்டு உள்ளே வா அப்பா. செல்லம்! அந்தப் பெண்ணை உள்ளே கூப்பிடு" என்றார்.

சுந்தரேசனும், அவன் மனைவி வனஜாவும் வீட்டினுள் நுழைந்தார்கள். செல்லம்மாள் சமையற்காரருக்கு ஏதேதோ கூறிவிட்டு வனஜாவை அழைத்துக் கொண்டு அவள் குடியிருக்கப் போகும் 'போர்ஷனைத்' திறந்து காண்பிக்க ஆரம்பித்தாள்.

"சுந்தரேசன் நாகபுரிக்கு வேலையாக வந்ததிலிருந்து எங்கள் வீட்டில் இந்தப் 'போர்ஷனில்' தான் இருக்கிறான். முதலில் என்னிடமே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் வேலை ஒரு தினுசானது. வெளியில் போனால் இரவில் அகாலத்தில் வருவான். எனக்குத் தொந்திரவாக இருக்கும் என்று

**ஸரோஜா ராமமூர்த்தி**

ஒளப்பு சாப்பாடு ஏற்பாடு செய்து கொண்டான். 'சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள் அப்பா' என்று நானும் மாமாவும் அவனைத் தொந்திரவு செய்தோம். கல்யாணம் செய்துகொண்டு வந்து இருக்கிறான். நீங்கள் இரண்டு பேரும் நல்லபடியாக இருக்கவேண்டும். 'உன் மனைவியை அழைத்து வருகிற அன்று எங்கள் வீட்டில்தான் சாப்பாடு' என்று சொல்லி விட்டேன். 'அதற்கென்ன மாமி, அப்படியே செய்யுங்கள்' என்று ஊரிலிருந்து வருகிற தேதியையும் எழுதினான்." என்று பேசியவாறு ஒவ்வொரு அறையையும் காண்பித்துக் கொண்டே செல்லம்மாள் வனஜாவுடன் வீட்டைச் சுற்றி வந்தாள். இடை இடையே வனஜாவின் கழுத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள். வனஜா அதிகமாகப் பேசவில்லை. தலையை அசைத்துக் கொண்டே அவள் பின்னால் நடந்தாள்.

கொல்லைக் குழாய் அருகில் நின்றிருந்த இருவரையும் கணபதி பார்த்துவிட்டு "செல்லம் இரண்டு நாள் ரயிலில் பிரயாணம் செய்து களைத்து வந்திருப்பாள் அந்தப் பெண். அவளை உட்காரவிடாமல் இழுத்துக் கொண்டு வீட்டைச் சுற்றி வருகிறாயே. நீ உள்ளே வா. அம்மா, அவள் ஒரு கர்னாடகம்!" என்று சிரித்தவாறு கூறினார்.

செல்லம்மாள் தன் கணவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவளாக வனஜாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

"வென்னீர் தயாராக இருக்கிறது வனஜா. குளித்துவிட்டு வா. சாப்பிடலாம். இன்றையப் பொழுதுக்கு நம் வீட்டில் சாப்பிட்டுவிடு. நாளைக்கு வெள்ளிக்கிழமை. உன் போர்ஷனில் அடுப்பு மூட்டலாம்." என்றாள் அவள்.

வனஜா சந்தன சோப்பை எடுத்

துக்கொண்டு மற்றொரு கையில் புடவை. ரவிக்கையுடன் வென்னீர் அறைக்குள் நுழைந்தாள்.

சுந்தரேசன் தன் காரியாலயம் வரையில் போய்விட்டு வருவதாகக் கூறிச் சென்றிருந்தான். செல்லம்மாள் பரபரப்புடன் கூடத்துக்கு வந்து தன் கணவன் அருகில் நின்று "ஏன்னா! உங்களை ஒன்று கேட்கணும் இந்தப் பெண் நம்ம பக்கத்துப் பெண் தானே! கல்யாணப் பத்திரிகையில் ஊர் பெயரைச் சரியாகப் பார்த்தீர்களோ?" என்று கேட்டாள்.

"ஏன்? திடீரென்று அந்த சந்தேகம் என்ன வந்தது இப்போது?" என்று கேட்டார் கணபதி.

"கழுத்தில் திருமங்கல்யச் சரட்டையே காணோமே. புதிசாகக் கல்யாணம் ஆகி வந்த பெண் 'பளிச்' சென்று மாங்கல்யச்சரடு இருக்காதோ? முத்து நெக்லேசும் இன்னொன்றும் எனக்கு வேண்டியிருக்கவில்லை!"

"கர்னாடகம்! உன்னைப் போல தோர்வடம் மாதிரி கழுத்திலே கயிற்றைத் தொங்கவிட்டுக்கற காலமில்லே இது! தெரிஞ்சுதா? எல்லாம் இருக்கும். கவனித்துப்பார்" என்றார் கணபதி.

வனஜா வென்னீர் அறைக்குள்ளேயே அரைகுறையாகப் புடவையைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள். சரியாகப் பித்தான் பொருத்தப்படாமல் ரவிக்கையின் மேல் பக்கம் சற்றே திறந்திருந்தது. உள்ளே ஒரு மெல்லிய சரடு காணப்பட்டது. செல்லம்மாள் ஓரக்கண்ணால் அதை கவனித்தாள். நேரிடையாகப் பார்த்தால் அந்த நாகரீக யுவதி ஏதாவது நினைத்து விடுவாளோ என்று பயம். பரபரவென்று ரவிக்கையின் பித்தான்களைப் பொருத்திவிட்டு சரட்டை உள்ளே தள்ளினாள் வனஜா. பிறகு அரை மணி நேரம் கண்ணாடியின் முன்பு நின்று தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் முனைந்தாள். பளபளவென்று ஜ்வலிக்கும் தங்க அட்டிகையை எடுத்து உள்ளங் கழுத்தில் அணிந்து நெற்றியில் சிறு பொட்டு ஒன்றை வைத்துக் கொண்டு சமையலறைக்குள் வந்தாள்.

எந்த மாங்கல்யத்தினால் ஒரு பெண்ணின் வாழ்வு மலர்ச்சியும் பெருமையும் அடைகிறதோ அந்த மாங்கல்யத்தை ரவிக்கைக்குள் மறைத்துக் கொண்டு திரியும் நாகரீகத்தைக் கண்டு செல்லம்மாளின் மனம் துணுக்குற்றது.

வாசல் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த கணபதியின் அருகில் வந்து நின்ற செல்லம்மாள் "ஏன்னா! இப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது" என்றாள்.

"புரிந்ததோ இல்லையோ? நிம்மதியாக இனிமேல் தூக்கம் வரும் உனக்கு" என்று கூறி கணபதி சிரித்தார்.

"உங்களுக்கு எப்பொழுதுமே என்னையும், என் பேச்சையும் கேட்டு அலட்சியம் செய்கிற வழக்கம் உண்டு. மாங்கல்யத்தை நாலு பேருக்குத் தெரியாமல் மறைக்கிற நாகரீகம் எனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை." என்று கோபத்துடன் கூறிவிட்டு விருந்தினர்களுக்கு இலை போட விரைந்தாள் செல்லம்மாள்.

கணபதி மறுபடியும் சிரித்தார்.

## 2

வனஜாவும் சுந்தரேசனும் அடுத்த போர்ஷனில் தனிக் குடித்தனம் ஆரம்பித்தார்கள். புதிதாக மணம் புரிந்த தம்பதி உல்லாசமாகத்தான் இருந்தார்கள். ஒரு நாளாவது 'பச்' சென்று மஞ்சள் பூசி பசுமையாக அந்தப் பெண் இருப்பதில்லை. பலர் முன்னிலையில் பல விதிகளின்படி கட்டப்பட்ட அந்த மாங்கல்யம் அவள் ரவிக்கைக்குள் மறைந்து கிடந்தது. வர வர அந்தப் பெண் கழுத்துத் தெரியாத ரவிக்கைகளையே அணிய ஆரம்பித்தாள். விதம் விதமாகக் காலர்கள் வைத்துச் சங்கு போன்ற அவள் கழுத்தை மறைத்துக் கொள்வதில் அவளுக்கு என்ன ஆர்வம்தான் இருந்ததோ! பகவானுக்கு வெளிச்சம். முதன் முதல் அவர்கள் வீட்டுக்கு வந்த அன்று அந்த மாங்கல்யச் சரட்டை அரைகுறையாகப் பார்த்தாளே செல்லம்மாள், அதற்கப்புறம் ஒரு தினமாவது மறுபடியும் அதைப் பார்க்கவில்லை அவள்.

கணபதி மட்டும் இதிலெல்லாம் அக்கரை காட்டவில்லை. படித்த பெண்கள் பல தினுசாக இருப்பார்கள் என்பது அவர் கொள்கை. அதே சமயம் செல்லம்மாளின் பழமைக்கும் அவர் மதிப்புக் கொடுத்திருந்தார். அவள் அந்த மாங்கல்யச் சரட்டுக்கு வைத்திருக்கும் மதிப்புக்கு இணையாக உலகத்தில் எதையுமே அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஒரு வேளை குழந்தை குட்டிகள் இருந்திருந்தால் செல்லம்மாளுக்குக் கணவன் மீது ஏற்பட்டிருந்த அன்பு பகிர்ந்து காணப்பட்டிருக்குமோ என்னமோ, அவளுடைய உலகம் அவர்தான். அவருடைய அன்புச் சின்னமாக மங்களத்தைத்தரும் மகா சக்தியாக அந்த மாங்கல்யச் சரடு அவள் இதயத்தில் இடம் பெற்றிருந்தது. ஆகவே வனஜா மாங்கல்யத்துடன் விளங்கும் மாங்கல்யத்தை எடுத்து ரவிக்கைக்குள் போட்டு மூடி மறைத்துவிட்டு, விதவிதமாக கழுத்தணிகள் பூணுவதைப் பார்த்துச் செல்லம்மாள் வியப்பும் வருத்தமும் அடைந்தாள். கணவரிடம் கூறி ஆற்றிக் கொண்டபோதுதான் கண

பதி 'பைத்தியம்' என்று கூறி அவளுடைய தீவிரமான பக்தியைக் கண்டு அதிசயித்தார்.

## 3

பக்கத்துப் போர்ஷனிலிருந்து சிரிப்பின் ஒலி அலை அலையாகக் காற்றில் மிதந்து வந்தது. கணபதி கையில் இருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, செல்லம்! இங்கே வாயேன்...'' என்று மிகவும் மெதுவாக அழைத்தார். செல்லம்மாள் அங்கு வந்ததும் இருவரும் சேர்ந்து அடுத்த போர்ஷனில் எழுந்த சிரிப்பின் ஒலிக்குக் காரணம் கண்டு பிடிக்க முனைந்தனர்.

''வனஜா! இன்றைக்கு என்னடிபன் பிரமாதமாக இருக்கிறது? எனக்கு இன்று 'போனஸ்' வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்? நேற்றுவரை எங்கள் காரியாலயத்தில் யாருக்குமே தெரியாத பரம ரகசியமாக இருந்த விஷயமாச்சே!'' என்றான் சுந்தரேசன்.

''போனஸ் வந்ததா என்ன?' என்று கேட்டாள் வனஜா.

''ஆமாம்... திடீரென்று மானேஜர் காரியாலயத்தினுள் வந்ததும். அறிவிப்பு பலகையில் செய்தி ஒட்டப்பட்டது. ஒவ்வொருத்தருக்கும் இரண்டு மாதச் சம்பளம் இனமாகக் கிடைக்கிறதென்றால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்? அப்படியே தேனில் விழுந்த ஈக்களைப் போல தத்தளித்தார்கள்...'' சுந்தரேசன் இவ்விதம் கூறியவாறு நோட்டுக் கற்றைகளை எடுத்து மேஜைமீது வைத்தான்.

''இந்தா! இது உனக்காக! உன் இஷ்டம் போல எது வேண்டுமானாலும் செய்து கொள்...''

செல்லம்மாளும் கணபதியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டார்கள். இளம் தம்பதி இருவரும் இப்படி ஒற்றுமையாக இருப்பதில் அவர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

சிறிது நேரம் கழித்து வனஜாவும் சுந்தரேசனும் கதவைப் பூட்டிக் கொண்டு கடைத் தெருவுக்குக் கிளம்பினார்கள்.

மேற்கு வானத்தில் கதிரவன் மறையும் காக்ஷி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. சந்தனக் குழம்பை வாரி அப்பியது போல் மேற்குவானம் பசுமையாகக் காணப்பட்டது. சந்தனக்குழம்பில் தோய்ந்து எழுந்திருப்பவன் போல் சூரியன் பொன்னிறம் காட்டி மறைந்து கொண்டிருந்தான் செல்லம்மாள் பூஜை அறையில் குத்து விளக்கேற்றி, குங்குமம் இட்டு லலிதா தோத்திரங்களைப் பாடிக் கொண்டிருந்தாள்.

''செல்லம்! தென்னிந்திய சங்கத்தில் இன்று காலட்சேபம் வருகிறாயா போய்விட்டு வரலாம்......'' என்று அழைத்தார் அவர்.

''நீங்கள் மட்டும் போய் வாருங்கள். விடிந்தால் காரடை நோன்பு. வீட்டில் கொள்ளைக் காரியங்கள் கிடக்கின்றன...'' என்று பதிலளித்தாள் செல்லம்மாள்.

கணபதி தனியாகக் கிளம்பினார் அவர் தெருக்கோடியில் செல்லும் போது வனஜாவும் சுந்தரேசனும் எதிரே வந்தார்கள்.

''நகைக் கடைக்குப் போய்விட்டு வருகிறோம் மாமா'' என்று இருவரும் ஏகோபித்த குரலில் கூறினர்கள் அவரிடம்.

''அப்படியா! சந்தோஷம்......'' என்று சிரித்தவாறு சொல்லிக் கொண்டே கணபதி போய்விட்டார்

மறுநாள் உதயத்தில் செல்லம்மாள் தெருவில் கோலமிட்டு, விளக்கேற்றி பூஜைப் பொருள்களை அம்பிகையின் சன்னதியில் நிரப்பி வைத்துவிட்டு மஞ்சள் கயிற்றில் இரண்டு மல்லிகைப் பூவை வைத்துக் கட்டி பூஜைக்கு தயாராக இருந்தாள். 'பச்' சென்று மஞ்சள் பூசிய முகமும் கழுத்தில் பசுமையுடன்

ஒளிரும் மஞ்சள் கயிறும், மாங்கல்யமும் அந்த சுமங்கலிக்கு என்றுமில்லாத சோபையை அளித்தன. பூஜை அறையை எட்டிப் பார்த்த கணபதி தன் மனைவியின் தோற்றத்தைக் கண்டு சற்றே பயபக்தியுடன் ஒதுங்கி நின்றிருந்தார். செல்லம்மாள் அவரைத் திரும்பிப்பார்த்தாள்.

"வனஜாவை கூப்பிடுங்களேன். அவளும் என்னுடன் சேர்ந்து நோனபு செய்வதாகச் சொல்லி இருந்தாள். காரடை செய்யத் தெரியாதாம் அந்தப் பெண்ணுக்கு! வரச் சொல்லி இருந்தேனே" என்றாள்.

கணபதி அடுத்த போர்ஷனுக்கு விரைந்தார். காலை நேரத்தில் கதவு பூட்டி இருந்தது. அவர்கள் இல்லை என்கிற செய்தி தெரிந்ததும், "என்னவோ! இந்தக் காலத்துப் பெண்களின் போக்கே எனக்குப் புரியவில்லை" என்று கூறியவாறு தன் பூசையைச் செய்துவிட்டு நோன்புச் சரட்டை எடுத்துக் கழுத்தில் கட்டிக் கொண்டாள். அருகில் நின்றிருந்த கணவரின் பாதங்களில் வணங்கிய போது அவளையுமறியாமல் அவள் கண்களில் கண்ணீர் சுரந்திருந்தது.

## 4

வனஜாவும் சுந்தரேசனும் பெரிதாகச் சிரித்தபடி காலை ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வந்தனர். வாசவில் செம்மண் கரையிட்ட முத்துக் கோலங்களைப் பார்த்ததும் வனஜா, "அடாடா!" என்று கத்தினாள்.

"என்ன?" என்று கேட்டான் சுந்தரேசன்.

"இன்றைக்கு மாசி பங்குனி கூடுகிற நோன்பு இல்லையா? மாமி என்னை வரச் சொல்லி இருந்தாரே..." என்றாள்.

"அதனால் என்ன? இப்பொழுது தான் போயேன்..."

அவள் செல்லம்மாளின் வீட்டுக்குள் நுழைந்தாள். அந்த அம்மாள் தன் கணவரின் எதிரில் இருந்த நுனி வாழை இலையில் அடைகளை வைத்து, உருகாத வெண்ணெயை இலை நுனியில் எடுத்து வந்து போட்டாள். வாசற்படி அருகில் வந்து நின்ற வனஜாவைப் பார்த்து, "எங்கே போய் விட்டாய் அம்மா? இன்று நோன்பாச்சே? அதுவும் தாலி நோன்பு இல்லையா இது? பயபக்தியுடன் செய்ய வேண்டியதாச்சே!" என்று கேட்டவாறு செல்லம்மாள் அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

வனஜாவின் கழுத்தில் பளபளவென்று தங்கக்கொடி ஒன்று மின்னிக் கொண்டிருந்தது.

"இதோ பாருங்கள்! நேற்று என் கணவருக்குப் 'போனஸ்' வந்ததோ இல்லையோ? இந்தக் கொடி வாங்கிக் கொண்டேன், இத்தனை மாசமாய்க் கயிற்றில் போட்டுக் கொண்டிருந்த திருமாங்கல்யத்தை இதில் எடுத்து கோர்த்திருக்கிறேன். பத்து நாளைக்கொருதரம் எண்ணெய்ப் பிசுக்கேறி அந்தக் கயிற்றைப் பார்க்கச் சகிக்கவில்லை........." என்று கூறியவாறு வனஜா தன் கழுத்தில் இருந்த தங்கக்கொடியை வெளியே எடுத்துக் காட்டினாள்.

"என்னது?" என்றாள் செல்லம்மாள். அவள் விழிகள் இரண்டும் வியப்பினால் அசையாமல் இருந்தன.

"என்ன மாமி அப்படி விழித்துப் பார்க்கிறீர்கள்?"

"நாளும் கிழமையுமா மஞ்சள் கயிற்றை கழற்றிவிட்டுத் தங்கத்தில் கொடி வாங்கி போட்டுக் கொண்ட பெருமையா இது?"—— செல்லம்மாள் இரைந்து கத்தினாள்.

"இதிலே என்ன தப்பு? திருமாங்கல்யம் தானே முக்கியம்? அந்த சரட்டிலே என்ன இருக்கிறது?......"

"உன்னோடு எனக்குப் பேச வராது. நீ போ அம்மா......"

செல்லம்மாள் தனக்கு ஏதோ நேர்ந்து விட்டது போல் நினைத்து.

கழுத்தில் புரண்டு கொண்டிருந்த மஞ்சள் கயிற்றைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

## 5

செல்லம்மாளுடைய வீட்டில் இனிமேல் இருப்பது உசிதமில்லை என்று வனஜாவுக்குத் தோன்றியது. 'உன்னோடு பேச வராது' என்று அவள் சொல்லிய பிறகு அங்கு இருப்பானேன்? சுந்தரேசன் அவசரமாக வேறு வீடு தேடினான். நோன்பு கழித்த நான்கு நாளைக்கெல்லாம் வேறு ஜாகை மாற்றிக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.

''பங்குனி மாதம் அப்பா சித்திரை பிறந்ததும் போயேன்'' என்றுகூட கணபதி கூறிப் பார்த்தார்.

''மஞ்சள் கயிற்றிலேயே நம்பிக்கை இல்லாத எங்களுக்கு மாசங்களில் என்ன நம்பிக்கை வைத்திருக்கிறது?'' என்று 'வெடுக்' கென கூறினாள் வனஜா. புதுக் குடித்தனம் வந்த அன்று மலர்ந்த முகத்துடன் மஞ்சள் நீர் சுற்றி வரவேற்ற செல்லம்மாளிடம் ஒரு வார்த்தைகூட பேசாமல் வனஜா விடு விடு என்று வெளியே நடந்து வண்டியில் ஏறிக் கொண்டாள்.

உள்ளே கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த தன் மனைவியைப் பார்த்துக் கணபதி, ''பைத்தியமே! படித்த பெண்களோடு பழகவே உனக்குத் தெரியவில்லையே உன் பாட்டுக்கு உன் மஞ்சள் கயிற்றின் மேல் விசுவாசம் வைத்துக் கொண்டு பேசாமல் கிடப்பது தானே? அவளுக்குப் போதனை செய்யக் கிளம்பி விட்டாய் கிடக்கிறது போ. எழுந்திருந்து வேலையைப் பார்'' என்றார்.

''அப்படி அவளை நான் என்ன சொல்லி விட்டேன்? அந்த மஞ்சள் கயிற்றுக்காகத் தானே சாவித்திரி நோன்பு நூற்று கௌரியை வழிபட்டாள். ஆயிரம் இருந்தாலும் அதற்கு ஈடு ஆகுமா என்று தானே சொன்னேன்? நாளும், கிழமையுமாக மஞ்சள் கயிற்றைக் கழற்றி எறிந்துவிட்டுத் தங்கச் சங்கிலியில் தாலியைக் கோர்த்துக் கொண்டு வந்து நின்றால்?......''

செல்லம் நிஷ்டூரத்துடன் கணவனிடம் பொரிந்து தள்ளினாள்.

''சரி, சரி, போ......''

''அவளுக்கு அதனுடைய மதிப்பும், உயர்வும் தெரியவில்லை. ஏதோ விளையாட்டுச் சாமானாக நினைத்திருக்கிறாள். தெரிந்து கொள்கிற காலம் ஒன்று வரும்......''

செல்லம்மாள் கண்ணீர் வழிந்த கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

★

செல்லம்மாள் கூறியபடி மாங்கல்யத்தின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்கிற காலம் வனஜாவுக்குச் சட்டென்று வாய்க்கவில்லை. ஆனால் ஆரோக்கியமாக உலவி வந்த கணபதி அடிக்கடி நோயில் படுத்துக் கொண்டார். காலை எழுந்தவுடன் காப்பி சாப்பிடுவது, பத்து மணிக்கு நல்ல சாப்பாடு, மாலை சிற்றுண்டி இரவு சாப்பாடு என்று உடலைப் பாதுகாத்து வந்த அவருக்கு நோய் வந்தது வியப்புத்தான். வயிற்றில் ஓயாத வலியும் எரிச்சலும் ஏற்பட்டது. பரங்கிப் பழம் போல் தள தளவென்று இருந்தவரின் உடலில் வாட்டம் ஏற்பட்டது. ருசியாக சமைத்த உணவெல்லாம் சாப்பிடுவாரின்றி வீணாகிப் போயின. செல்லம்மாள் பதறினாள். பெரிய வைத்தியர்களை அழைத்து வைத்தியம் செய்தாள். நாளுக்கு நாள் வியாதி அதிகரித்தது. கணபதி வேலையிலிருந்து ஓய்வு பெற்ற போது கிடைத்த பணத்திலிருந்து வீட்டைக்கட்டி இருந்தார். அதன்மீதும் சிறிது கடன் இருந்தது. மாதம் வரும் பென்ஷனில் தம்பதி இருவரும் காலம் தள்ளி வந்தனர். குடலில் ஏற்பட்ட புண் சாதாரணமாகத் தீருவதாக இல்லை. செல்லம்மாள்

ஜுன் 3 உ முதல்

சென்னை

வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி

மற்றும் தென்னாடெங்கும்

ஜுபிலி பிலிம்ஸ்

கல்கியின்

# பார்த்திபன் கனவு

டைரக்ஷன் : யோகானந்த்

கழுத்தில் இருந்த கெம்பு அட்டிகையை விற்று வைத்தியம் செய்தாள். வியாதி பணத்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டது. ஒவ்வொரு நகையாக 'ஸேட்'டின் கடைக்குப் போயிற்று. கடைத் தெருவுக்குச் சாமான்கள் வாங்க வந்த சுந்தரேசனிடம் ஸேட் மெதுவாக விஷயத்தைக் கூறினார்.

"மூன்று மாதத்திற்குள் ஏகப்பட்ட நகைகளை விற்று விட்டார்கள் அந்த அம்மாள்......"

சுந்தரேசன் செல்லம்மாளின் வீட்டுக்கு வந்தான். கட்டிலின்மேல், உடல் வெளுத்து, களை இழந்த முகத்துடன் கணபதி படுத்திருந்தார்.

"என்ன மாமா இப்படி இருக்கிறீர்கள்? எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பக் கூடாதோ?" என்று பரிவுடன் கேட்டான் சுந்தரேசன்.

உள்ளே இருந்து வந்த செல்லம்மாளைப் பார்த்தான்.

கைகளில் புதையப் புதைய இருந்த வளையல்களை காணோம். ஒரு தங்க காப்பு மட்டும் இருந்தது. கழுத்தில் ஒரு ஒற்றைவடம் சங்கிலியும், மஞ்சள் கயிறும் 'பளிச்' சென்று காணப்பட்டன.

"சுந்தரேசா! மாமாவைப் பார்த்தாயா அப்பா!" என்று கதறினாள் செல்லம்மாள்.

சுந்தரேசனின் தொண்டையில் ஏதோ அடைத்துக்கொண்ட மாதிரி இருந்தது.

"மாமி! உங்களுக்கு ஒன்றும் குறைவு வராது. அந்த ஏழுமலையான் காப்பாற்றுவான். கவலைப்படாதீர்கள் அடிக்கடி நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்..."

"வனஜா ஊரில் இல்லையாமே?" என்று ஹீனஸ்வரத்தில் விசாரித்தார் கணபதி.

"ஆமாம் மாமா! அடுத்த மாசம் அவளுக்கு வளைகாப்பு பிரசவம் கழித்துத்தான் வருவாள்......"

சுந்தரேசன் அங்கிருந்து சென்ற பிறகு செல்லம்மாள் பூஜை அறையில் நுழைந்தாள். அங்கே மாட்டியிருந்த ஏழுமலையானின் திருஉருவப்படத்தின் முன்பு நின்று கண்ணீரை ஆறுகப் பெருக்கினாள்.

"அப்பனே! எனக்கு உலகில் ஒன்றுமே வேண்டாம். அவர் பிழைத்து எழுந்து இந்த மஞ்சள் கயிறு தக்கினால் போதும். உன் சன்னதிக்கு வருகிறேன், என் நகைகள் அனைத்தும் உனக்கு அர்ப்பணம் செய்து விடுகிறேன். தங்கத்தால் ஆன இந்தத் திருமாங்கல்யத்தைக் கூட உனக்குக் காணிக்கையாக்கி விடுகிறேன். எனக்கு நீ மட்டும் இந்த மஞ்சள் கயிற்றைக் கொடுத்து விடு, போதும்......"

"செல்லம்! அங்கே என்ன பண்ணுகிறாய்? கொஞ்சம் இப்படி வந்து உட்கார். ஏதாவது படி கேட்கிறேன்..." என்று கணபதி அழைத்தார் அவளை.

## 6

அன்று சென்னை சென்ட்ரலில் டில்லி ஜனதாவுக்கு ஏகப்பட்ட கூட்டம். செல்லம்மாளும் கணபதியும் எப்படியோ நெருக்கியடித்துக் கொண்டு வண்டியில் ஏறினார்கள். கணபதியின் உடம்பு முன்னைப் போல் இராவிட்டாலும், சற்றுத்தேறி நடமாடும் நிலைக்கு வந்திருந்தார். வண்டிக்குள் ஏறியதும் கணபதிக்கு ஜன்னல் ஓரமாக ஓர் இடத்தைப் பிடித்து அவரை உட்காரவைத்தாள் செல்லம்மாள். அருகில் இருந்த இடத்தில் ஒண்டிக் கொண்டு தன்னுடன் எடுத்து வந்திருந்த பிரம்பு பெட்டியைத் திறந்து பார்க்க ஆரம்பித்தாள் அவள். அதனுள் அலர் மேலு மங்கையுடன் கூடிய வெங்கடாஜலபதியின் படம் இருந்தது. பகவானின் திலகத்திலிருந்து கொடுத்த பிரசாதமான பச்சைக்

கற்பூரம் கமகமவென்று மணத்தது.

"என்ன பார்க்கிருய் ?" என்று கேட்டார் கணபதி

"ஒன்றுமில்லே. திருச்சானூரில் இரண்டு படங்கள் வாங்கினேன் எங்கே வைத்தேன் என்று பார்த்தேன்......"

ரயில் கிளம்ப பத்து நிமிஷங்களே இருந்தன. ஒரு பெரியவர் ஓர் இளம் பெண்ணுடன் ஒவ்வொரு பெட்டியாக பெயர் எழுதி ஒட்டியிருக்கும் சீட்டுக்களைப் பார்வையிட்டுக் கொண்டே வந்தார். இவர்கள் பெட்டியின் அருகில் வந்ததும் சீட்டை உற்றுப் பார்த்துவிட்டு, "மிஸஸ் வனஜா நாகபுரி......" என்று சொல்லிக் கொண்டே, "இங்கே வாம்மா குழந்தை ! உன் பெயர் இருக்கிறது. நீ முதலில் வண்டியில் ஏறிக்கொள்...... குழந்தையை என்னிடம் கொடு" என்ருர்.

அந்தப் பெண் வண்டியில் ஏறியதும் தன் இரு கரங்களையும் நீட்டிக் குழந்தையைப் பெற்றுக் கொண்டு, "அப்பா! நீங்கள் உள்ளே வராதீர்கள், எப்படியோ நான் இடம் பிடித்துக் கொள்வேன் கூட்டம் அதிகமாக இருக்கிறது." என்று சொல்லிக் கொண்டே கூலியாள் கொண்டு வந்த சாமான்களைப் பலகையின் மீது வைத்தாள்.

கிழவர் ஜன்னல் ஓரமாக இருந்த கணபதியைப் பார்த்தார்.

"சார், என் பெண் நாகபுரிக்குப் போகிருள் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்...... வனஜா !...... போய்ச் சேர்ந்ததும் மாப்பிள்ளேயின் உடம்புக்குத் தந்தி கொடு..."

செல்லம்மாள் கூட்டத்தின் ஊடே பார்வையைப் பெட்டிக்குள் செலுத்தினுள். பர பரவென்று எழுந்து, "வனஜா ! இப்படிக் குழந்தையை என்னிடம் கொடு. மாமாவின் பக்கத்தில் நீ உட்கார்ந்து கொள். உன் இடத்தில் குழந்தையைப் படுக்க வைக்கலாம் நான் இந்தப் பெட்டி மீது உட்காருகிறேன்..."

"யார் ? மாமியா ?" என்று வனஜா திகைத்து வியப்புடன் செல்லம்மாளேப் பார்த்தாள்.

"ஏன் மாமி இப்படி இருக்கிறீர்கள் ? மாமாவின் உடம்பு இளேத்து விட்டதே, எங்கே போய்விட்டு வருகிறீர்கள்"

"எப்படி இருக்கிறேன் வனஜா ! இப்படி இருக்க வேண்டும் என்று தான் அந்த ஏழுமலேயானிடம் வரம் கேட்டேன். அவன் கொடுத்த மாங்கல்யப் பிச்சை இந்த மஞ்சள் கயிறு."

செல்லம்மாள் நகரும் வண்டியில் தன் கழுத்தில் கிடந்த மஞ்சள் கோர்த்த மஞ்சள் கயிற்றை எடுத்து வனஜாவுக்குக் காட்டினுள். அதை பக்தியுடன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். வனஜாவின் கண்களில் கண்ணீர் திரண்டது.

"மாமி! நானும் மாறி விட்டேன். அவர்... என் கணவர் ஜீப் விபத்தில் அகப்பட்டுக் கொண்டு......" மேலே பேச முடியாமல், கூட்டம் நிறைந்த இடம் என்றுகூடப் பாராமல் வனஜா 'ஹோ' என்று அழுதாள்.

"அப்புறம் ? சுந்தரேசன் சௌக்கியமாக இருக்கிருனே இல்லேயோ ?" என்று செல்லம்மாளும், கணபதியும் பதட்டத்துடன் கேட்டனர்.

வனஜா ஒருவாறு துயரத்தை விழுங்கிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"பத்து தினங்களுக்கு முன்பு திடீரென்று தந்தி வந்தது மாமி. அவர் வேலே விஷயம்தான் உங்களுக்குத் தெரியுமே. எங்கோ வெளியில் போய்விட்டு வீடு திரும்பும் போது இரவு பதினென்னுக்கு மேல் ஆகிவிட்டதாம். ஜீப் டிரைவர் கண் மண் தெரியாத வேகத்துடன் வந்திருக்கிருன். எதிரில் வந்த காரில் மோதி வலது கால் மடங்கி முட்டியில் எலும்பு விரிந்து விட்டதாம். மூக்குக் கண்ணுடி கழண்டு

தூரப் போய் விழுந்து கிடந்த தாம்......''

"அப்படியா ? நல்ல காலம்தான் அம்மா கண்ணுடி நொறுங்கி இருந்தால் என்ன கதி ஆகி இருக்கும் ? இம்மாதிரி சந்தர்ப்பங்களில்தான் கடவுளின் கருணை நமக்குப் புலப்படுகிறது'' என்ருள் செல்லம்மாள்.

"தந்தி வந்ததும் நான் எண்ணுததை எண்ணினேன் மாமி ... அந்த காரடை நோம்பும், அதை நான் உதாசினம் செய்ததும், மங்களகரமான மஞ்சள் கயிற்றை மதியாமல் தங்கச் சங்கிலியில் மாங்கல்யத்தை கோர்த்துக் கொண்டதும் நினைவுக்கு வந்து என் மனத்தைக் கலங்க அடித்தன. கூடத்திலே மாட்டி இருந்த ஏழுமலையான் படத்தின் முன்பு நின்று எனக்கு மாங்கல்யப் பிச்சை தரவேண்டி மன்ருடினேன். தந்தி வந்த அடுத்த தினம் காலையில் கடிதம் வந்தது. அவரே எழுதி இருந்தார். தனக்கு ஒன்றும் உயிருக்கு அபாயமில்லை என்றும், சற்று சாவகாசமாகவரலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். நானும் திருப்பதி போய் எல்லாவற்றையும் காணிக்கை செலுத்திவிட்டு மஞ்சள் கயிற்றில் மஞ்சளைக் கோர்த்துக் கட்டிக் கொண்டுதான் வருகிறேன்......''

கணபதி பெருமையுடன் செல்லம்மாளைப் பார்த்து, "செல்லம் ! அன்று சொன்னுய் அல்லவா வனஜாவுக்கு மஞ்சள் கயிற்றின் மதிப்புத் தெரியவில்லை என்று. அதன் உயர்வைப் பற்றி அவளாகவே தெரிந்து கொண்டு விட்டாள் பார்த்தாயா ?'' என்று கேட்டார்.

"இந்த மட்டும் சுந்தரேசன் பிழைத்தானே அதுவும் இவளுடைய மஞ்சள் கயிற்றின் பலத்தினுல் தான்'' என்று கூறி அவள் வனஜாவின் கழுத்தில் மங்களகரமாகத் துலங்கும் அந்த மஞ்சள் கயிற்றைப் பார்த்துப் பூரித்துப் போனுள். நீறு விலகினல் தானே ஒளியின் தன்மை புலப்படும்.

---


நமது கணபதி ஜோஸியர் வெளியிட்டுள்ள புத்தகங்கள் சில காபிகளே கைவசமுள்ளன.

தேவையானவர்கள் :—

"பாலா"

13, ப்ருமணத் தெரு. : : சைதாப்பேட்டை

சென்னை 15லிருந்தும், ஹிகின் பாதம், சுதேசமித்திரன் புக்ஸ்டாலிலிருந்தும் பெறலாம் :

| | |
|---|---|
| ஜோதிடம் விஞ்ஞானமே முதல் பாகம் | Rs. 2/-00 |
| மணமும் மணவாழ்க்கையும் (விவாஹ பொருத்தம் பார்க்க) | Rs. 2/-50 |

தபால் சார்ஜ் ப்ரத்யேகம்

மாலா கூபன் வைத்தனுப்பினுல் தபால் சார்ஜ் இனும்.

**மாடர்ன் அட்ரலாஜிகல் ரிஸர்ச் இன்டிடியூட்**

(மைலாப்பூர் பிராஞ்சில்)

நூதன மாணவர்களுக்கு ப்ரத்யேகமாக போதிக்க ஏற்பாடாயிருக்கிறது. நூதனமாக சேரலாம்.

பிரதி ஞாயிறு மாலை 3மணி முதல் 5மணி

P. S. High Schoolல் நடைபெறும்

சேர விரும்புவர் அங்கேயே வரலாம்

வாசகர்களே !

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனாமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில்கூறுகிறார்கள். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது

—ஆசிரியர்.

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

**1960 ஜூன் மாதக் கூப்பன்**

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்.................................................

தற்போதைய விலாசம்.................................................

உத்தியோகம் .................................................

கேள்விகள் எழுதின தேதி.................................................

,, ,, நேரம்.................................................

நான் விரும்பும் புஷ்பம்.................................................

108-க்குள் நான் கூறும் எண்.................................................

(நக்ஷத்திரம் தெரிந்தால்).................................................

என் பிறந்த நக்ஷத்திரம்.................................................

என் தற்போதைய வயது.................................................

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம் :

**கணபதி ஜோயர், c/o "மாலா"**

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

சார்வரி
வருஷ

# ஆனி மாத ராசி பலன்

(கணபதி ஜோஸ்யர்: 18. ப்ராம்மணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15)

**மேஷ ராசி:** அஸ்வதி, பரணி, கார்த்திகை முதல் பாதம் தேகசுகம் மிக த்ருப்திகரமாக இருக்கும். சென்ற ஆண்டு அக்டோபருக்குமேல் வருஷம் முடிவதற்குள் ஆரம்பித்த ஸ்ரமங்கள், மனவேதனை யத்தன பலிதமின்றி தாமதத்தால் இருந்த வெறுப்பு எல்லாம் இம்மாதம் ஆரம்பத்தில் குறைந்து முடிவதற்குள் மறைந்து உற்சாகத்துடன் இருக்க முயற்சிகளில் வெற்றியும், விவகாரம் ஜெயத்துடன் முடியவும் கலகமின்றியும் கலக்கமின்றியும் இருக்க நேரும். முடங்கிய தனத்தைத் திரும்பப் பெறவும், அதிக தனவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் தொடங்கவும் நேரும். உத்யோகத்தில் உயர்வும், மேலதிகாரி நட்பும் பல காலமாய் temporay யாகவே இருந்தவர்களுக்கு permanent ஆகவும் நேரும். தொழில் செய்பவர்களுக்கு மாத முடிவில் நூதன கூட்டாளி சேருவர். தொழிலை முன்னிட்டு வெளிநாடு செல்ல ஜூலை நன்று. வியாபாரம், இனி சில ஆண்டுகள் நன்ருக நடைபெறவும், branch முதலியன வைக்கவும் நேரும். தனது அனுபவத்தில் இதுவரை எடுத்திராத அவ்வளவு பெரிய காண்ட்ராக்ட் எடுக்க நேரும். ஏஜன்சி எடுக்கவும் நன்று. அரசாங்கம் மூலம் அனுகூலம் உண்டு. சென்ற ஐந்து ஆண்டுகளாக பல முயற்சிகள் செய்தும் விவாஹம் நடைபெருது இருந்தவர்களுக்கெல்லாம் இம்மாதம் எவ்விதமும் நன்மை புரியும். ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் இனி முயற்சிக்கலாம்.

**ரிஷப ராசி:** கார்த்திகை 2, 3. 4 பாதங்கள், ரோஹிணி, மிருகசிரிஷம் 1, 2, 3 பாதங்கள். தேகசுகம் ஏற்பட்டுகொண்டு வந்தாலும், கண்நோய், தொண்டையில் புண் இருமல் முதலியன ஓரளவு ஸ்ரமத்தைக் கொடுக்கும். தனவசதி எவ்வளவு ஏற்பட்டாலும் அதற்கேற்ப செலவும் உடனுக்குடனே செய்ய நேரும். ஒரு சிலருக்கு உத்யோகத்தில் இடம் மாறும். கஷ்டங்கள் நிவர்த்தி ஆகவும் நேரும். சிலர் குடிமாற நேரும். மற்றும் சிலர் படிப்பு விஷயமாக தன்நாட்டையேவிட்டு வெளிநாடு செல்ல நேரும். தனது தொழில் அபிவிருத்தி செய்ய இனி எடுக்கும் முயற்சிகள் மாத முடிவில் லாபகரமாக பலிதமாகும். ஐந்தாண்டுகளாக வியாபாரத்தில் இருந்துவந்த நஷ்டங்கள் இனிஇராது. 1961 ஜனவரி முதலே மிக நன்று என்ருலும் இம்மாத முடிவிலிருந்து ஓரளவு திருப்திகரமான செய்திகள் கிடைக்கவும் முயற்சிகள் எடுக்கவும் நேரும். ஸ்பெகுலேஷன், பந்தயம், லாட்டரி முதலியவற்றில் அதிகமாக தனத்தை இழக்க வேண்டாம். விவாஹ விஷயங்கள் இனி நெருங்கிவரும். விவகாரங்களும் அனுவசிய செலவைத்தான் இம் மாதம் காட்டுகின்றன.

**மிதுன ராசி:** மிருகசிருஷம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள். வீண் அலைச்சலும், அதிக உழைப்பும், சிறு பிரயாணங்களும், தேக சுகதத்தை ஓரளவு பாதிக்கும். பண நெருக்கடி இருக்க மேல் வரும்படி குறையும். உற்ருர், உறவினர் சேர்க்கையாலும், தான தர்மங்கள் செய்யவேண்டிய நிர்பந்தத்தாலும் செலவு அதிகம். மேலதிகாரிகளின் நட்பு அதிகமாக விரோதம் மறையும். நண்பர்களின் உதவி உண்டு. தொழில் விருத்தி அடையும். வியாபாரம் ஓங்கும்.

அரசாங்கம்மூலம் நற்செய்தி கிடைக்கும். கூட்டாளி பிரயாணங்கள்செய்து முன்னேற்றத்திற்கு பாடுபடுவார். சுப சோபனங்களும், நூதன ஆடை ஆபரணங்களும் மாத இறுதியில் எதிர் பார்க்கலாம். ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம் மூலம் பலன்பெற மேலும் இரண்டு மாதங்கள் ஆகும். விவாஹ விஷயமாக ஏற்பாடு செய்ய ஆரம்பிக்கலாம். விவகாரங்கள் நூதனமாக ஏற்பட்டாலும் செப்டம்பர் மாதம் முதல் ஜெயமும், ஒற்றுமையும் மேன்மையும் உண்டு. தம்பி, தங்கைகளுக்கே மிக நல்ல மாதமாகும்.

**கடக ராசி :** புனர்பூசம் 4 பாதம், பூசம், ஆயில்யம், தேக சுகம் பாதிக்கப்படாவிட்டாலும் தான் எண்ணியபடி காரியங்கள் நடைபெறுத தாலும், எதிர்ப்பும், ஏமாற்றமும் இருக்கக் கூடுவதாலும் உற்சாகம்இராது. வரும்படியில் மாறுதல் இராது. ஆனுல் செலவு அளவுக்குமேல் செய்ய நேரும். மேலும் பல துறைகளில் பணம் முடங்கும். தனக்குக் கிடைக்கும் நண்பர்கள் உதவிக்கு மேல் தான் நண்பர்களுக்கு உதவ நேரும். உத்யோகத்தில் பலருக்கு இடப்பெயர்ச்சி இருக்கும். சிலருக்கு அனுகூல சத்ருக்கள் மூலம் மன கஷ்டமும் பண நஷ்டமும் இருக்கும். இம்மாதம் உத்யோக உயர்வு உண்டாவது துர்லபம். தொழிலும் மந்தமாயிருக்க சேவகர்கள் மூலம் ஸ்ரமமும் எதிர்ப்பார்க்கலாம். ஸ்பெகுலேஷன், பந்தயம். லாட்டரி மூலம் முயற்சிக்கும் அளவு தனநஷ்டமே. யாதொரு தனலாபம் இன்றி அனுவசிய அதிகாரமும் படாடோபமும் அதிகம். விவாஹ விஷயமாக செய்யும் முயற்சிகள் மிக தாமதத்தைக் காட்டும் விவகாரம் நீடிக்கும். மனே வாங்கவும், வீடு கட்டவும் முயற்சித்து வந்தால் தை பிறந்ததும் வழி பிறக்கும். தம்பி ரஸ்தாவில் ப்ரயாணம் செய்யும் போதும் எச்சரிக்கையுடன் போவது நன்று; ஆபத்து வராமல் தடுத்துக் கொள்ளவேண்டும்.

**சிம்ம ராசி :** மகம், பூரம், உத்ரம் 1ம் பாதம், தேகசுகம் மிக த்ருப்தி கரமாக இருக்கும். யாதொரு தடையுமின்றி எதிர்ப்பும் இன்றி, முயற்சிகளெல்லாம் உடனுக்குடனே பலிதமாகும். பரீட்சைத் தேற மேல் படிப்பிற்கு வசதி உண்டாகும். கஷ்டம் இன்றி கல்லூரியில் கற்கலாம், உத்யோகத்தில் இருந்த சிறு உபத்ரவங்கள் பூர்ணமாக மறைந்து மேன்மையும் உயர்வும் உண்டு. அரசாங்கம் மூலம் நற்செய்தியும், அதிகார பெருக்கும், உத்யோக உயர்வும், தொழிலில் முன்னேற்றமும், வ்யாபாரத்தில் அதிக தனலாபமும், நண்பர் உதவியால் கிளை ஸ்தாபனங்கள் புதிதாக வெளியூர்களில் ஆரம்பிக்கலாம். ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம் மூலம் லாபம் இருக்கக்கூடும். ஆனுலும் எவ்வளவுக்கெவ்வளவு வரும்படி அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு சுபவ்ரயமும் இருக்கும். நூதனமாக ஏஜன்ஸி, கான்ட்ராக்ட் முதலியன தனது சக்திக்கு மீறி எடுக்க நேரும் க்ஷேத்ராடனம் செய்யவும், தூர தேச ப்ரயாணம் செய்யவும் நேரும், தந்தைக்கு உத்யோகம் உயரும். தாய்க்கு இம்மாதம் சிறு விபத்துக்கள் இருக்கலாம். புத்ரர்கள் நூதன கிரகப் பிரவேசங்கள் செய்யநேரும். மிக திருப்திகரமாக விவாஹம் நடைபெறவும் வெற்றிகரமாக விவகாரம் தீரவும் எதிர்ப்பார்க்கலாம்.

**கன்னி ராசி :** உத்ரம் 2, 3, 4ம் பாதம், ஹஸ்தம். சித்திரை 1, 2ம் பாதம் தேக சுகத்தை எச்சரிக்கையுடன் கவனித்து வரவும் தன் கையினுலேயே சிறு விபத்துக்களை வரவழைத்துக்கொள்ள நேரலாம். உற்சாக மிகுதியால், வாஹனம் முதலியன அஜாக்ரதையாக ஓட்டுவதால் ஸ்ரமம் வரக்கூடும். தனவசதியும் ஏற்படும். அதிக லாபமும் பெறலாம்.

ஆனல் உதார செலவுகளும், உருப்படியில்லாச் செலவும் அதிகம். உத்யோகத்தில் தன்னுடன் வேலை செய்பவர்கள் மூலமோ, குடும்பத்தில் மனைவியிடமோ திடீர் என விரோதித்துக்கொள்ள நேரும். அதனுல் சில நாட்கள் நிம்மதியின்றிவிடும். தொழிலில் சேவகர்களின் ஒத்துழைப்பு குறையும் வியாபாரத்தில் அதிக சரக்குகள் வாங்கி சேர்க்க நேரும். ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம்மூலம் இம்மாதம்நஷ்டமே. ஏஜென்ஸி கான்ட்ராக்ட் கிடைப்பது கடினம். கூட்டாளி மூலம் அதிக தன வ்ரயம் விவாஹம் நிச்சயம் ஆகும்போல் தோன்றி நின்றுவிடும். விவகாரம் மூலம் அப்பீல் செய்ய நேரலாம். வீடு அல்லது மனை திடீரென வாங்க நேரும். வெளியூர் சென்ற உற்ருர் உறவினர் கூடி மகிழ நேரும். தம்பிக்கும் மாதாவிற்கும் ஸ்ரமங்கள் வரக்கூடும்.

**துலா ராசி:** சித்திரை 3, 4, பாதங்கள்--ஸ்வாதி விசாகம் 1. 2 3, பாதங்கள். ஒவ்வொன்ருக தீர்ந்து நோயும் விலகி ஒருவாறு உற்சாகத்தை இம்மாதத்தில்,அளிக்க ஆரம்பிக்கும். பண நெருக்கடி குறையும் நீண்ட காலமாய் உதவி புரிவதாய் உறுதி மொழி கொடுத்த உண்மை நண்பர் மூலம் நன்மை இனியே பெறலாம். உத்யோகத்தில் இருந்த பிடுங்கல்கள் குறையும், மேல் அதிகாரியுடன் இருந்த விரோதம் மறையும். தொழிலில் சேவகர்கள் ஒத்துழைப்பை இனி எதிர்ப்பார்க்கலாம். நூதனமாக தொழிற்சாலைகள் வைக்க முயற்சிக்கலாம். வ்யாபாரம் வலுவடைய ஆரம்பிக்கவும், நூதன கூட்டாளி சேர ஏற்பாடு துவக்கவும் நன்று. ஸ்பெகுஷேன். லாட்டரி, பந்தயம் முதலிய இனங்களில் கலந்த பலன் ஏஜன்ஸி, கான்ட்ராக்ட் எடுக்க முயற்சிக்கலாம். சிலருக்கு விவாஹ விஷயம் கைகூடிவர ஆவணியில் நடைபெறலாம். விவகாரம் மேலும் நீடிக்கும். மனைவிக்கு நூதன பொருள்கள் சேர்க்கையும். புத்ரர்களுக்கு மேல் படிப்பிற்காகவோ அல்லது உத்யோக உயர்விஞலேயோ இடர்ப் பெயர்ச்சி இருக்கும்.

**விருச்சிக ராசி:** விசாகம் 4ம் பாதம். அனுஷம், கேட்டை. கடைசி பக்க இம்மாதம் படும் கஷ்டத்துடன் கஷ்ட நஷ்டங்கள் மறைந்து இம்மாத முடிவிலிருந்து சுபபலன் நடைபெற ஆரம்பம் ஆகும். தனவசதி ஏற்பட முயற்சிக்கவும். இம்மாதத்தில் ஸ்ரமங்கள் இருந்தாலும் சீக்கிரம் நன்மையுண்டு என்பதை மனதில் கொண்டு தைரியமாக சமாளித்து வரவும். உத்யோக விஷயத்தில் மேலதிகாரியின் தொந்தரவு இருக்கக்கூடும். ரஜாவில் ஒருமாதம் இருப்பது நன்று. தொழில் வ்ருத்தி அடைய தாமதம் இருக்கும். ஆனல் தைரியத்தை விடாமல் மேலும் முயற்சி செய்யவும் வயாபாரம் செய்யலாமா அல்லது உத்யோகத்திற்கு போய்விடுவது மேலா என்று தோன்றும்படி வ்யாபாரத்தில் வெறுப்புண்டாகும், ஆனல் ஆண்டவன் அருள் அடுத்தமாதமே ஆரம்பிக்கும் என்பதை நம்பலாம். ஸ்பெகுலேஷன், லாட்டரி. பந்தயம் முதலிய இனங்களை இம்மாதம் மறப்பது உத்தமம். யத்தனங்களில் பலித குறையையும், தாமதத்தையும் சில இடையூறுகளையும் இம்மாதம் எதிர்ப் பார்க்கவும். ஏஜன்ஸி, கான்ட்ராக்ட் முதலியவற்றிற்கு ஆகஸ்டு முதல் முயற்சி செய்யவும் விவாஹ விஷயங்கள் கைகூடிவருவது ஸ்ரமம். விவகாரம் நூதனமாகவும் தொடங்கும். தம்பிக்கே சுகபலன் எதிர்ப்பார்க்கலாம். மற்ற உறவினர்களுக்கும் இம்மாதம் நல்லதல்ல.

**தனுர் ராசி:** மூலம் பூராடம் உத்ராடம் 1ம் பாதம் நீண்ட நோயால் வருந்துபவர்கள். சுகாதாரத்தை கவனித்து வரவும். இம்மாதம் தேக ஆரோக்யம் குன்றலாம். தனவசதி குறையும் நெருக்கடி அதிகமாகயிருக்

கவும் கடன் வாங்கவும், வாங்கின இடத்திலிருந்து பலமுறை ஞ்யாபகப் படுத்தி நிர்பந்தமும் இருக்கக்கூடும். உத்யோகத்தில் இடப்பெயர்ச்சியிருக்கலாம். மனதிற்கு பிடிக்காத இடத்திற்கு மாறநேரும். விரோதமும் உண்டாகும். ரஜாவில் செல்ல நேரலாம். தொழிலில் மந்தம் சேவகர்கள் ஒத்துழைப்பு குறைவு. வ்யாபாரம் லாபகரமாகயிராது. பணம் முடங்கும். கடனுக்கே வ்யாபாரம் நடைபெறும் ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி முதலிய இனங்களில் திடீரென லாபமும், எதிர்பாராத நஷ்டமும் மாறி மாறியிருக்க, கடைசியாக கணக்கிடின் ஓரளவு நஷ்டமென்றே அறியக்கூடும். விவாஹ விஷயங்கள் நெருங்கி வந்தவைகளும் ஏமாற்றத்தையளிக்கும். ஸெப்டம்பர் மாதமே நன்று. விவகாரம் நடத்தியே இஷ்டத்தை பூர்த்தி செய்யலாம். மனை வாங்கலாம், வீடு கட்ட தாமதிக்கும். தம்பிக்கு ஓரளவு நன்று புத்ரர்களுக்கு உத்தமபலன். பரீக்ஷை தேற, நூதன உத்யோகம் ஏற்பட எதிர்பார்க்கலாம்.

**மகர ராசி:** உத்ராடம் 2, 3, 4 பாதங்கள் திருவோணம் அவிட்டம் 1, 2, பாதங்கள். இனி தாமதமிராது, முயற்சிகள் வெற்றியளிக்க ஆரம்பிக்கும். ப்ரயாணம் செய்யவும் நேரும். நண்பர் உதவி பூர்ணமாக பெறலாம். தேககசுகமேற்பட்டுக்கொண்டு வரும். தனவசதியும் ஏற்படும் சிலவும் அறற்குமேல் செய்ய நேரும். உத்யோகம் உயர ஏற்பாடு செய்துவரின், இடப்பெயர்ச்சியும் மேன்மையும், உயர்வும் சீக்கிரம் உண்டு என கிரக நிலையிலிருந்து அறியலாம். நூதன தொழிலுக்கு அரசாங்க உதவி பெறவும், இடவசதி கிடைக்கவும் எதிர்பார்க்கலாம் வ்யாபாரத்தில் இருந்த கஷ்டமோ, வரிமூலம் ஏற்பட்ட ஸ்ரமமோ இனி இராது. வ்யாபாரமும் வலுவடையும் நண்பர் உதவியுண்டு. ஆண்டவன் அருளும் உண்டு தைரியமாக எதையும் செய்யத் துணியலாம். ஏழரையாண்டு சனியென ஏங்கவேண்டாம். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் இனி லாபமேற்படும். க்ஷேத்ராடனம் செய்யலாம் வீடு மாறவோ. நூதன கிரஹ ப்ரவேசம் செய்யவோ நேரும். ஆடுமாடுகள், வாஹனம் பெறவும் இம்மாதம் நன்று. ஏஜென்ஸி எடுத்துலாபம் பெறமுயற்சிக்கவும் விவாஹம் நடைபெற நன்று. விவகாரம் வெற்றிகரமாக முடிவடையும் போட்டியில் வெற்றியும். இஷ்டசித்தியுமிருக்கும் தாய்க்கு மிக நன்று. மற்ற உறவினர்களுக்கு மத்திம பலனே.

208034
600 008

**கும்ப ராசி:** அவிட்டம் 3, 4 பாதங்கள் சதயம் பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள். சீக்ரம் நன்மையுண்டு என நம்பும் அளவு இம்மாதம் தனது முயற்சியால் நற்பலனையடைய ஆரம்பிக்கும். கஷ்டங்கள் விலகும், பனி விலகி குளிர்நீங்கி சூர்யவெளிச்சம் புலப்படுவதுபோல் இம்மாதம் ஒவ்வொன்றாக விலகி, கடைசியில் சுபபலன் பூர்ணமாக ஆரம்பிக்கும். நீண்டகால நோயால் ஸ்ரமப்பட்டவர்கள் சில மாதங்கள் ஆரோக்யத்துடன் பணியாற்றமுடியும். உத்யோகத்தில் உயர்வு உண்டாகவும் மேலதிகாரியின் அன்பும் ஆதரவும் இருக்கும் தொழிலின் முன்னேற்றத்திற்கு இவ்வளவு காலமாய்பட்ட கஷ்டங்கள் நற்பலனையளிக்க ஆரம்பிக்கும். வ்யாபாரத்தில் நூதன கூட்டாளியும், க்ளையண்ட்ஸும் சேர்வர். வலுவடையும், லாபமதிகரிக்கும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் முயற்சியின்றியே கிடைக்கலாம். அரசாங்க ப்ரைஸ்பாண்ட் வாங்கவும் அதன் மூலம் ஸ்ரமமின்றி லாபமடைய நேரும். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபமேற்படும். தைர்யத்துடன் முயற்சிக்கவும். விவாஹம் சிலருக்கு நடைபெற, சிலருக்கு தீர்மானிக்கப்படலாம். விவகாரம் ஒருவிதமாய் வெற்றியுடன் முடிவடையும் தம்பிக்கு எதிர்பாராதலாபம் வெற்றி கார்ய சித்தியிருக்கும். மனைவிக்கு மிக சுபபலன் மற்றவர்களுக்கு மத்திபமே.

ம241, N57ML ம60:ம3

**மீன ராசி:** பூரட்டாதி 4ம் பாதம் உத்ரட்டாதி ரேவதி. தேகசுகம் சற்று பாதிக்கப்படலாம். எச்சரிக்கையுடன் சுகாதாரம் கவனித்துவரின் கஷ்டமின்றி யிருக்கக்கூடும் தனவசதி ஏற்படுவது குறைவு. தனஉதவி இதரர்களுக்கு அதிகமாக செய்யநேரும். பண நெருக்கடி வரலாம் ஆகவே சிக்கனமாக கவனித்து சிலவு செய்து வரவும் உத்யோகத்தில் பொறுப்பு அதிகமாகலாமேயன்றி வரும்படி மாருது. அதிகாரி நட்பும் ஆதரவும் இருக்கலாம். தொழிலில் அபிவிருத்தியிருக்க முயற்சித்து வரவும் தை மாதம் கைகூடும். மனை வாங்கினுலும் வீடு கட்டி நூதன கிரஹ பிரவேசம் செய்ய தை மிக நன்று. ஆவணி மத்திம சுபபலன். வ்யாபாரத்தில் அதிக லாபமிராது. மனந்தளராமல், தாமதத்தை பொருட்படுத்தாமல் நடத்தி வரவும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் இப்பொழுது சிலவு செய்தால் 1961ல் லாபம் பெறலாம். விவாஹம் கைகூடுவது ஸ்ரமம். முயற்சி செய்து வராமலிருக்கக்கூடுமா. விவகாரம் தீர்ந்திருந்தாலும். மேலும் அப்பீல் முதலியன எடுப்பதால் நீடிக்கும் வெளி நாடு செல்ல இது நல்ல காலமல்ல. வாஹனம் மூலம் கஷ்ட நஷ்டம் வராது தடுக்கவும், உறவினர்களுக்கும் இம்மாதம் சுபபலனையதிக மளிக்காது. தெய்வ வணக்கமே சாந்தியளிக்கும்.

---

★★★★★★★★★★★★★★★★★:★★★★★★★★★★★★★

அழகிய கலர் அச்சு வேலைகளுக்கு

சிறந்த இடம்

# ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

" காங்கிரஸ் பில்டிங்ஸ் "

111, மவுண்ட் ரோட், தேனும்பேட்டை

சென்னை-6

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★:★★★★★

# கேள்விகளுக்குப் பதில்

**கணபதி ஜோஸ்யர்**

**குருசாமி செட்டி குமாரபாளையம்**

உமது நோய் சார்வரி வருஷம் தை மாதம் முதல் குறையும் அடுத்த ஆண்டு ஆடியில் மறையும். 1961 ஆகஸ்டு முதல் தனப்பெருக்குண்டாகும்.

**துளசிதாஸ் கும்பகோணம்,**

1963ம் ஆண்டுமுதல் சுயார்ஜிதமும் தனவசதியுமுண்டு. மற்றவர்கள் ஜாதகம் முதலியன இருந்தால் தான் உண்மையான பதிலைப்பெற முடியும்.

**கந்தசாமி போத்தனூர், சேலம்**

பரணி ராகுதசை சுக்ரபுக்தி ராகு அந்த்ரம் முதல் யத்தன பலிதம், மனநிம்மதி, தனவசதியுண்டு. இனி நல்ல காலமே.

**உமாபதி தஞ்சை,**

கார்த்திகை 1963 மார்ச் மாதம் முதல் எதிர்பார்ப்பவையெல்லாம் கை கூடி வரும். அப்பொழுதே மணம் புரியநேரும். நண்பர் இல்லத்தில் ஜனித்திருக்கும் பெண், உறவல்ல. பரீக்ஷை தேற. மேலும் படிப்பீர்.

**சந்தானம் மயிலை,**

1961 மே முதல் நிம்மதி, சந்தோஷம், சுகம் உண்டு. உமக்கு வயது 21, இதற்குள் என் வாழ்வில் இதுவரையிலும் நான் ஒரு சுகத்தையும் காணவில்லை என்று எழுதியுள்ளீர்! இனியல்லவா சகல சுகமும் அனுபவிக்க வேண்டிய வயது; மேலும் ஜாதக ரீதியாக ஓராண்டில் நல்லகாலம் வருகிறது. கூட்டு வ்யாபாரம் நன்று.

**நாகசுப்ரமண்யம் நுங்கம்பாக்கம்**

புததசை சுக்ரபுக்தி செவ்வாய் அந்த்ரம் முதலே நன்று. 1960 நவம்பர் தீபாவளி முதல் இஷ்டசித்தி. மிகுந்த தனலாபமுண்டு. அருகேயிருக்க, நேரே கேட்டறிவது உமக்கு மேலும் தைர்யத்தையளிக்குமே.

**விஜயராகவன் ஆனைமலை**

உமக்கு இனி 4 மாதங்களிலேயே முயற்சியில் வெற்றியும் வ்யாபாரத்தில் லாபமும் விவசாயத்தில் நற்பலனும் கிடைக்கும். நல்லகாலம் வந்ததும் நான்கு வகைகளிலும் தனம் சேரும். இதுவரை கஷ்டகாலம் சென்ற நவராத்ரி முதல் தை மாதம் வரை ஸ்ரமம் இருந்திருக்க வேண்டும் ஸ்ரம காலத்தில் தொட்டதெல்லாம் நஷ்டம் மன கஷ்டம்.

**ராமானுஜம் மதராஸ்**

பூரம் இனி தாமதமில்லை அடுத்த மாதமே மகப்ராப்தி 10 மாதங்களில் இருக்குமென அறிவீர். குழந்தை ஜனனமும் தொழில் முன்னேற்றமும் சேர்ந்துவரும்.

**கோபாலு ஸ்ரீரங்கம்**

ஹஸ்தம் 1961 ஜூலையில் எதிர்பார்ப்பது கிடைக்கும். 1969 டிஸம்பர் வரை துணைவி ஆரோக்யத்துடனிருப்பார்.

**கமலா கடலூர்**

கடன் தொல்லை தீர மேலும் இரண்டு ஆண்டுகளாகும். அது முதலே சுபிக்ஷம். மகனுக்கு 1960 அக்டோபர் மாதக்கடைசியில் உத்யோகமேற்படும்.

**கருணைகரி**

நூற்றுக்கணக்கான நண்பர்கள் கேள்வி கேட்கின்றனர். உண்மையாக யாவரையும் திருப்தி செய்ய வேண்டுமானால் சுமார் 100 பக்கம் பதிலேயாகும். சிலருக்கே மாலா

வில் ப்ரசுரிக்கப்படும். ஒரு ரூபாய் அனுப்ப வசதியுள்ளவர், கணபதி ஜோஸ்யருக்கு நேராக அனுப்பி பதில் பெறலாம் காத்திருக்கவேண்டாம். நான்கு நாட்களிலும் சற்று விவரமாக நேரிட பதில் வரும். 1961 ஜூனில் உத்யோகம் மாறும் உமக்கு சந்திரனுக்கு இரண்டில் சனி வலுத்திருக்க, லக்னத் 7ம் வீட்டை சனி பார்க்க, தாமதம், குரு சனியை பார்ப்பதால் 1961 ஜூனில் விவாஹமும் நடைபெறும்.

ஸ்ரீனிவாசன் ஸ்ரீரங்கம்

மூலம் ராகுதசை புதபுக்தி முதல் நன்று. உமக்கு தனுர் ராசியை யெடுத்து பலாபலனறிய வேண்டும் லக்னத்தைவிட ராசியே வலுத்த தாகும்.

முத்துநாச்சியார் மானாமதுரை

உனக்கு டிஸம்பர் மாதம் வேலை கிடைக்கும் 1961 முதலே சுகப்படுவாய்.

ஷண்முகம் மன்னார்குடி

அசுவதி உமக்கு சகல ஸௌபாக்யங்களுமுண்டு என்றாலும், எல்லாம் தாமதித்தே நடைபெறும். ஆனால் புத்ரோத்பத்திக்கு மாத்ரம் தாமதமிராது. அடுத்த ஆண்டு இந்நாளில் ஒரு ஆண் குழந்தை பிறந்துவிடும் வேலை மாறுது.

கோகர்ணேசன் கோயம்புத்தூர்

திருவோணம், 6ல் பாபிஇருப்பின் குழந்தை பேசுவது மழலையாயிருக்கும். குரு சம்பந்தம்வரின் தாமதித்துப் பேசும். உமக்கு 6ல் சனி ராகு; ஆகவே பேச்சு மழலை: குரு சேர்க்கை தாமதித்து 1961 அக்டோபர் முதல் பேசும் வயதில் வாயாடியாகவும், மேடையேறி பேசும் பேச்சாளனாகவும் ஆவான் உமக்கு நவம்பரில் வேலை மாறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## வாசகர்களுக்கு விண்ணப்பம்.

ஜோஸ்ய கேள்விகள் நூற்றுக்கணக்கான வாசகர்களிடமிருந்து வருகின்றன. மிக மனவேதனையுடன் எழுதும் சிலருக்கு இதுவரை இலவசமாக நேரிலேயே பதிலளித்தோம். மற்றும் ஓர் சிலருக்கு மாத்திரம் அச்சிட முடிகிறது. இனி பதில் விவரமாக கேள்விகளுக்கு வேண்டுமானால் 1 ரூ மணியார்டர் 'கணபதி ஜோஸ்யர்'க்கு நேராக அனுப்பவும். கூப்பனை வைத்துக் கேள்வியுமனுப்பவும் சக்தியுள்ளவர்கள் மாலா மூலம் பதிலைப்பெற்று உண்மையையுடைய வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கணபதி ஜோஸ்யர்,**

*13, ப்ராமணத் தெரு, சென்னை-18.*

★★★★★★★★★★★★★★★★:★★★★★★★★★★★★★★★★

# திருவிளக்கு

விக்கிரமன்

## முன் கதைச் சுருக்கம்.

[பூம் பொழில் பங்களா நறுமணம் வீசும் மலர் வனமாக திகழ்ந்து வந்தது. ஒரு காலத்தில் அந்த வீட்டின் மகாலட்சுமியாக விளங்கியவள் கோதை. அவள் மறைவிற்குப் பின்பு வனப்பு இழக்க வாரம்பித்தது பூம் பொழில். பங்களா பாழடைந்து வரத்தொடங்கியது. பங்களாவின் எஜமானர் கண்ணபிரான் ஊதாரித்தனத்தில் இறங்கினார். தமையன் கந்தவேலனும், மகள் மான்விழியும் அவல நிலையில் உழல வாரம்பித்தனர். அவரது தந்தை கம்பெனி ஒன்றின் துபாஷாக விளங்கி ஏராளமான சொத்து சேர்த்த கண்ணபிரானுக்கு கோதையை மணம் புரிவித்தார். தந்தை கண் மூடிய பின் கண்ணபிரான் கண்டிராக்ட் தொழிலில் முனைந்தார். விதி சதி செய்தது. அவர் தன்னுடன் ஒன்றாகப் படித்தவளும் இளம் வயதிலே, கைம்பெண்ணானவளுமான மரகதத்தை சந்திக்க நேர்ந்தது. அவரது போக்கு மாறியது கோதை அவருடன் வாதாடினாள். ஆனால் அவளும் இறக்கவே அவரைத் தடுக்க யாருமில்லை. ஆகவே அவர் கண் மூடித்தனமாய் காரியங்களை நடத்த ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டது. ஆயினும் அவர் திருந்தவில்லை. வீட்டிலே அவர் தங்குவது மாதத்திலே நாலைந்து நாட்கள் தான்.

கதைத் தொடக்கத்திலே பூம்பொழிலுக்கு வந்த கண்ணபிரான் கனவில் மனைவி கோதை தோன்றி அவரை திருந்த வேண்டுகிறாள். அவர் உடலெல்லாம் வேர்த்து விட உறங்க முயலுகிறார். உறக்கத்தினின்றும் எழுந்த அவரிடம் எலக்டிரிக் கம்பெனிக்காரர்கள் வந்து பாக்கிக்காக கேட்க அவர் கடிந்து பேச அவர்கள் டிஸ்கனெக்ஷன் செய்து போகிறார்கள். • அவர்களிடம் அப்படிப் பேசியது தவறு என்று கூறிய கந்தவேலனை .அறைந்து விட்டு வீட்டை விட்டு வெளியேற்றுகிறார். அந்த சமயம்•பார்த்து கந்தவேலன் நண்பர்கள் அவனை ஏதோ பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் செல்ல வருகிறார்கள். அவன் தாயின் படத்தின் முன் விழுந்து கதறுகிறான். அந்த சமயம் அட்வகேட் பரமசிவமும் அவர் மனைவியும் அங்கு வருகின்றனர்.]

## அத்தியாயம் 2

கந்தவேலன் மெல்லத் திரும்பிப் பார்த்தான். அந்தப் போட்டோவிலிருக்கும் தன் தாய் மெல்ல அவனை அழைப்பது போன்ற உணர்வு

அவனுக்கு. அவன் முதுகின் மீது தொடப்பட்ட கரங்கள் ஒரு விதச் சிரிப்பை ஏற்படுத்தின. குடும்ப வக்கீல் பரமசிவமும் அவர் மனைவியும் நின்று கொண்டிருந்தார்கள்.

பரமசிவம் குடும்ப வக்கீலாக மட்டும் இல்லாமல் குடும்ப நண்பராக வும் விளங்கி வந்தார். கண்ணபிரானுக்கு அவ்வப்போது அவர் யோசனைகள் கூறுவார். ஆனால், அவர் யோசனையை கண்ணபிரான் கேட்டால் தானே. "இப்படியே கடன் வாங்கிக் கொண்டு செல்கிறீர். நாளைக்குத் திடீரென தொல்லை வரலாம்." என அவர் எச்சரித்ததுண்டு. புது வழக்குகள் வரும்போது, இந்த வழக்கில் நாம் முன் கூட்டியே வாதியோடு சமரசமாகிவிடுவோம். கோர்ட் செலவாவது குறையும்" என்று யோசனை கூறுபவர் கண்ணபிரான். மெல்ல நகைத்த வண்ணம், "பரமசிவம், நான் சொல்வதைச் செய்யுங்களேன். உங்களுக்கு வேண்டியது 'பீஸ்' தானே" என்பார்.

பரமசிவம் அதன் பிறகு யோசனை கூறுவதை நிறுத்திக் கொண்டு விட்டார். கண்ணபிரான் சொல்வதைத் தொழில் வக்கீல்கள் செய்வது போல் செய்வார்.

பூம்பொழில் பங்களாவை அடமானம் வைப்பதற்குக் கண்ணபிரான் முயல்கிறார் என்ற செய்தி கேட்டவுடன் பரமசிவம் அது குறித்து கண்ணபிரானிடம் நேரிடை பேசுவதற்காகப் 'பூம்பொழி'லுக்கு வரக்கிளம்பினார். பூம்பொழில் பங்களாவைப் பற்றி அவர் தன் மனைவியிடம் பலமுறை கூறியிருக்கிறார். தோட்டமும், கிணறும், நடுவே பழய மாதிரியில் கட்டப்பட்ட உறுதியான வீடும்; வீட்டினுள்ளே சலவைக்கற்களால் பதிக்கப்பட்ட கூடங்களும் திருமதி பரமசிவம் ஆவலைத் தூண்டிவிட்டன. அந்த மாதிரி வீடொன்றைக் காணவேண்டும் என்பது அவள் ஆசை. காண்பதோடு நிற்கக் கூடாது. அது போன்ற வீடு கட்டவேண்டும் என்பது அவள் அந்தரங்க ஆசையே. அது போன்ற வீடு கட்ட இப்போது ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படலாம்.

"கண்ணபிரானுக்கு அப்போது அவசரமாக இருபதாயிரம் ரூபாய் தேவை, அதற்காக அற்புதமான பங்களாவை அடகு வைக்கிறான்" என்றார்.

"அவருக்கு என்ன அவ்வளவு பணத்தேவை" என்று மிகக்கவலைப் படுபவள் போல் புருவத்தைச் சுளித்தவாறு கேட்டாள்.

"யாருக்குத் தெரியும். அவனுக்கு இவ்வளவு கடன் எப்படி வந்ததென்று எனக்கே தெரியவில்லை. ஒரு கட்டடக் காண்டிராக்டில் அவனுக்கு நஷ்டம் வந்தது உண்மை தான். நான் அது பற்றி விசாரிப்பதில்லை. ஆனால் பூம்பொழில் பங்களாவை அடமானம் வைப்பதென்று அவன் துணிந்து விட்டான். அது பற்றி நாம் எச்சரிக்க வேண்டும்."

திருமதி பரமசிவம் சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு "நீங்கள் பூம்பொழிலுக்குப் போகும் போது என்னையும் அழைத்துப் போகிறீர்களா ? அந்த வீட்டையும் பார்த்தது போலிருக்கும். கோதை இறந்ததற்குத் துக்கம் விசாரிக்க நான் போகவே இல்லை." என்றாள்.

"பேஷாக; நீ வருவதானல் நான் அழைத்துப் போகத் தயார்" ஆமாம் பூம்பொழில் மீது உனக்குத் திடீரெனக் கவனம் வருவானேன் என்று கேட்டார் பரமசிவம்.

"நீங்கள் அடிக்கடி வர்ணிப்பதை மனத்தில் கற்பனை செய்து கொள் வேன். அப்படி ஒரு பங்களா நாம் கட்டவேண்டும் என்று கனவு காண் பேன்" என்ருள் திருமதி பரமசிவமான தங்கம்மாள்.

தங்கம் கூறிய வார்த்தைகள் பரமசிவத்தின் மனத்தில் வேலை செய் தன அவர் கூறுவது உண்மை தான். பூம்பொழில் போன்ற பங்களா ஒன்றை வாங்குவது மிக அவசியம் தான் அதனுடன் —

அவர் தங்கத்திடம் கையிலுள்ள செய்தித் தாளை மூடாமல் பிரித்த படியே ஓடி வந்தார்.

"தங்கம்: உன் யோசனை பேஷான யோசனை. அதனுடன் நம் புஷ் பாவுக்கு அந்த இடத்துச் சம்பந்தத்தையும் முடிக்கலாம்" என்ருர்.

தங்கத்திற்கு ஒரு கணம் புரியவில்லை. அப்போது புஷ்பா அம்மா அம்மா நான் டென்னிஸ் ஆடப்போய் வருகிறேன்" என்று கூறி வந்த போது தான் அவருக்குப் புரிந்தது. புஷ்பா பூத்துக் குலுங்கும் புது மலர் போல் கையில் பூப்பந்தாட்ட மட்டையுடன் நின்று கொண்டிருந்தாள். காலேஜ் படிப்பை 'இண்டர்'ருடன் அவள் முடித்து விட்டாள். அவளுக்கு ஏனோ படிப்பிலே அதிக கவனம் செல்லவில்லை. பேச்சு, பேச்சு என்று சதா யாருடனுவது பேசிக் கொண்டிருக்க வேண்டும்; பூப்பந்தாட்டம் ஆடவேண்டும். நன்ருக உடையணிந்து அலங்காரம் செய்து கொள்ள வேண்டும். ஒரு புதுப்படம் தவருமல் சினிமா பார்க்கவேண்டும். இவை தான் புஷ்பா.

புஷ்பாவைக் கண்ட போதுதான் அவளுக்குத் தன் கணவர் கூறிய தன் பொருள் புரிந்தது ஆம்; புஷ்பாவுக்குக் கண்ணபிரானின் மகன் கந்தவேலன் ஏற்றவனே. ஒரு தடவை தான். தங்கம் கந்தவேலனைக் கண்டிருக்கிருள் பரமசிவத்தைத் தேடி அவன் ஒரு முறை வீட்டிற்கு வந்திருக்கிருன். இரண்டே நிமிடங்கள் தாம். அட்வகேட் பரமசிவம் இருக்கிருரா என்று கேட்டு, அவர் வெளியே சென்றிருக்கிருரே என்ற பதில் வந்தவுடன் அவன் குரல் வந்த திசையைக் கூட ஏறிட்டுப் பாராமல் போயிருக்கிருன்.

சந்தவேலனை மீண்டும் ஒரு முறை காண வேண்டும் போலிருந்தது தங்கத்திற்கு தன் மகள் புஷ்பாவுக்கும் தகுந்தவன் தானு கந்தவேலன் என்பதைக் கண்டு மனத்தில் திருப்திகொள்ள வேண்டும் என்று எண்ணி ஞள். அதனல் தன் கணவருடன் பூம்பொழிலைக் காணக் கிளம்பினுள்.

பரமசிவம் தம்பதிகள் பூம்பொழில் தோட்ட வாசலில் நுழையும் போது கண்ணபிரான் மிகக் கோபமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்ருர். பரமசிவமும் அவரது மனைவியும் வருவதை அவர் பார்த்தாரா என்று கூறமுடியாது. ஆனல் பரமசிவத்திற்கு மிகுந்த ஆச்சர்யமாக இருந்தது.

வெளிக் 'கேட்'டிலிருந்து பங்களாவுக்குச் செல்லும் பாதை செப்ப னிடப்படாததால் கற்கள் வெளியே தெரிய பள்ளமும், மேடுமாக இருந் தது. செதுக்கப்படாத புல் புதர்போல் இருபுறமும் வளர்ந்திருந்தது. தண்ணீர் ஊற்றப்படாததால் பல செடிகள் வாடி இலைகள் சருகுகள் போல் காணப்பட்டன. காவல் காரரும். புலி போன்ற நாயும், தங்க

ஏற்படுத்தப்பட்டிருந்த 'காபின்' பலலைககள் உடைந்து ஒரு புறம் செல் பிடித்திருந்தது. அதன் மூலேயில் பழைய உடைந்த ஹரிகேன் விளக் இருந்தது.

முன் 'போர்டிடகா'வை தங்கம் அண்ணுந்து பார்த்தாள். மேல் விதானத்தில் தாமரை மலர் போன்று வர்ணந்திட்டப்பட்ட சிற்பம். அதனிடையே கண்ணுடிக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தூணில் ஒரு பித்தளே தகடு அது தேய்த்துப் பளபளப்பாக்கப் படாததால் பெயர் மங்கிக் காணப்பட்டது. களிம்பு நிறைந்திரும்தது. பரமசிவத்திற்கு வருத்தம் தான். தன்னேக் கண்டும் காணுதவர் போல் அவர் சென்று விட்டது குறித்து அவர் வருந்திஞர். அப்படியே திரும்பிப் போய் விட லாமா என்று கூட ஒரு கணம் எண்ணிஞர். அவர் மனேவி சம்மதிக்க மாட்டாளே. சம்மதிப்பது இருக்கட்டும்; கண்ணபிரான் தன்னே மதிக்க வில்லே என்பதறிந்தால், அவள் என்ன நினேப்பாள்.

அதனுல், தங்கம் தவருக எண்ணுவதற்கு முன்பே பேச்சை மாற்ற விரும்பி, "இது அந்த காலத்து வீடு. எவ்வளவு சிரமப்பட்டு துபாஷ் கட்டியிருக்கிருர் தெரியுமா? இங்கு ஒரு ஊஞ்சல் பலகை இருந்ததே'' என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

அவர்கள் உள்ளே நுழையும் போது கந்தவேலன் கன்னத்தில் வீழ்ந்த அறை.

யையும், உள்ளத்தில் வீழ்ந்த அடியையும் தாங்காமல் தாயின் படமெதிரே சென்று விம்மி விம்மி அழுதான். ''நீ உதவமாட்டாயா?'' என்று அவன் குமுறும் இதயத்துடன் அலறுவதற்கும் பரமசிவம் அவன் தோளைத் தொட்டுத்'தம்பி' என்றழைப்பதற்கும் சரியாக இருந்தது.

வக்கீல் ஸாரைக் கண்டதும் கந்தவேலன் திடுக்கிட்டான். கண்ணில் ததும்பி நின்ற நீரைத் துடைத்துக் கொண்டான். அவரருகே அவர் மனைவி நிற்பதைப் பார்த்தபோதுதான் அழுது விம்மியதை அவளும் கண்டிருப்பாளோ என நினைத்த போது அவனுக்குக் குபீரென வெட்கம் சூழ்ந்தது.

''வாருங்கள் வாருங்கள்'' என்று கூறி வரவேற்ருன். வந்தவர் யார் என்று புரியாமல் மான்விழி திகைத்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். தங்கம் மான் விழியையே வைத்த கண் மாருது நோக்கியவாறிருந்தாள். பூம்பொழிலில் ஓர் அழகு மங்கையும் இருப்பது அவளுக்குத் தெரியாது. கந்தவேலனைத் தன் பெண்ணுக்கு மணம் புரிவிப்பதை விடத் தன் மகன் மாணிக்கத்திற்கு மான்விழியை மணம் புரிவித்து மருமகளாக்கிக் கொள்ளலாம் போலிருக்கிறதே...

மான்விழி தங்கத்தை உட்காருமாறு உபசாரம் செய்தாள். கந்தவேலன் பரமசிவத்தை உபசாரம் செய்தான். கந்தவேலனை அழைக்க வந்த அவனது சகத்தோழர்கள் நேரமாகிறது என்று கூக்குரல் எழுப்பினர். வெளியே செல்ல உடை இல்லை. ஆனல் அன்ரே அவன் சொற்பொழிவாற்றும் சிறப்புக் கூட்டம். அந்த நாள் கந்தவேலனுக்கு வேதனை தரும் நாளாக அமையுமோ ?



கந்தவேலன் முள்ளில் அமர்ந்திருப்பது போல் இருந்தான். பரமசிவம் என்றும் வராதவர் வந்திருக்கிருர்.

என்ன காரணமோ தெரியவில்லையே என்று பலவந்தமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு "ரொம்பவும் ஆச்சர்யமாயிருக்கிறதே! நீங்கள் எங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்வது" என்று ஆங்கிலத்தில் வினவினன். அவனுடைய பேச்சிலுள்ள இனிமையைப் பரமசிவம் ரசித்தார். துயரம் மறைந்திருந்தாலும் தூய்மையான வதனம் படைத்திருந்த அவன் தோற்றத்தை அவர் ரசித்தார்.

"இந்தப் பக்கம் ஒரு நண்பரைக் காணக் கிளம்பினேம். அப்படியே உன் தந்தையைக் காண விரும்பினேன் ஒரு பத்திரம் சம்பந்தமாக அவர் என்னைக் காண நேற்று வந்திருந்தார். நான் வீட்டிலில்லை...... அதனல் நானே நேரிடையாகக் காண வந்தேன்" என்று ஏதோ சம்பந்தமில்லாது பேசினர். அதைச் சொன்ன பிறகுதான் ஏன் சொன்னேம் என்றுகி விட்டது அவருக்கு.

"பத்திரம் சம்பந்தமாகத்தானே இருக்கும்; இந்த ஒரு வீட்டையும் விற்பதற்காக இருக்கும். நாங்கள் ஏன் இந்த வீட்டிலிருக்கிருேம் எங்களையும் துரத்திவிடுவோம் என்ற எண்ணமாயிருக்கும். அவருக்கு நீங்களும் தக்க யோசனை கூறுங்கள் என்று படபட வென்று பேசினன் கந்தவேலன்: ஏதேதோ சம்பந்தமில்லாது பேசியவாறு அவனுடைய அறையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்த நண்பர்கள் குழாத்திடையே கூட இப்போது அமைதி நிலவியது. தங்கங்கூடத் திடுக்கிட்டாள்.

பரமசிவம் நிலையை மாற்ற விரும்பி, "கந்தவேலா என்னை நீ தவருக எண்ண முடியாது. நான் அதுபற்றிப் பேசவே வந்தேன். உன் தந்தை எங்களைக் கண்டும் காணுதவர்போல் போகிருர். அதை அவமரியாதையாகக் கொண்டு நான் திரும்பியிருக்கலாம். ஆனல் அப்படிச் செய்யவில்லை, உன்னைப்பற்றியும், உன் தங்கைப்பற்றியும் எனக்கும் அக்கறையுண்டு இந்தப் பூம்பொழிலைப்பற்றியும் எனக்குச் சிரத்தையுண்டு. அதற்காகத்தான் நான் வந்தேன்; உன்னிடம் சில விஷயங்களைத் தனிமையாகப் பேச வேண்டும். உன்னல் இன்று மாலை என் வீட்டிற்கு வரமுடியுமா?" என்று அழைத்தார்:

அதே சமயம் தங்கமும் மான்விழியை நோக்கி "இப்படி வீட்டில் அடைபட்டுக்கிடந்தால் எப்படி குழந்தே! காற்று வாங்குவதுபோல் என் வீட்டுப்பக்கம்தான் வாயேன். இன்று சாயங்காலம் வாயேன்" என்று அழைத்தாள்.

"இன்று மாலையா? மன்னிக்கணும் அம்மா; எனக்குப் பரீட்சை நெருங்கிவிட்டது. படிக்க வேண்டும், டியூஷன் டீச்சர் வேறு வந்து விடுவார். மற்றெரு நாள் அவசியம் வருகிறேன" என்றுள்.

கந்தவேலன் பரமசிவத்தை நோக்கி, இன்று மாலைதானே, அவசியம் வருகிறேன். எனக்கும் கடைத்தெருவில் ஏழெட்டு ஹரிகேன் விளக்கு வாங்க வேண்டும். அப்படியே உங்கள் வீட்டிற்கு வருகிறேன்" என்ருன்.

'ஹரிகேன் விளக்கு எதற்கு?' என்பதற்கறிகுறியாக பரமசிவம் கூடத்துக் கூரையை அண்ணுந்து பார்த்தார். மின்சார விசிறியினின்றும், கூடத்துமேல் தளத்தினின்றும் ஒட்டடை சங்கிலிபோல் தொங்கி அசைந்தாடியது.

பரமசிவமும், தங்கமும் அங்கிருந்து எழுந்தனர். "கட்டாயம் உன்னை எதிர்பார்ப்பேன்" என்ருர் பரமசிவம். "அவசியம் வருவேன்" என்ருன் கந்தவேலன். மான் விழியோ குங்குமம் கொடுப்பதற்காகக் குங்குமச்

சிமிழை எடுத்துவரச் சென்ருள். அவள் தாயார் கற்றுக்கொடுத்த நல்ல பழக்கம் அது. அவள், தங்கத்திடம் குங்குமச் சிமிழை நீட்டியபோது அவள் பார்வை கந்தவேலன் அறைப்பக்கம் சென்றது. உள்ளே கூத் தடித்துக்கொண்டிருந்தவர்களில் சிலர் வெளியே எட்டிப் பார்த்தனர். அவர்களுள் பெருமாளும் ஒருவன். அவனைப் பார்த்தவுடன் மான்விழி நடுங்கிஞள். அவள் கரங்கள் நடுங்கின. தங்கம் குங்குமத்தை எடுப்ப தற்குள் சிமிழ் தவறிக் கீழே விழுந்துத் தரையில் சிதறியது.

"குங்குமம் சிந்திஞல் நல்ல சகுனம்" என்று தங்கம் கூறிஞள், ஆஞல் மான்விழியோ அவள் கூறுவதெதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை பெருமாள் தன் சகோதரனின் நண்பஞ? அவனுடஞ தன் சகோதரன் பழகுகிருன் என்றறிந்தபோது மான்விழிக்குப் பயமும், வியப்பும் கலந்து உடலெங்கும் பரவின. குங்குமத்தைத் திரட்டியவாறு அவள் தன் அண்ணனை நோக்கிஞள். அவன் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"உடை லாண்டரியிலிருந்து வரவில்லை."

"வரவில்லையென்ருல் புது உடை வாங்குவது."

"..................."

"ஏன் மௌனமாயிருக்கிருய் கந்தவேலா? உன் முகம் மிக வாட்ட முற்றிருக்கிறது. வந்த வக்கீல். பரமசிவத்துடன்கூட நீ சரியாகப் பேச வில்லையே... அவர் பெரிய வக்கீல் இப்படியெல்லாம் அவர் வரமாட் டாரே? உனக்கு என்ன வருத்தம் கந்தவேலா?', என்று ஓர் நண்பன் மிக ஆதரவோடு கேட்டான். அவன்தான் பெருமாள்!

அவனைக் கந்தவேலன் அணைத்துக்கொண்டு "பெருமாள் இருக்கும் போது எனக்கென்ன குறைவு?" என்று சொல்லி அவன் காதோடு காதாக ஏதோ கூறிஞன்.

பெருமாள் 'ஹோ, ஹோ' என நகைத்து 'இவ்வளவுதானே "ஸபாஸ்டியன் உடனே ஸைக்கிளில் விரைந்து ஓடிப்போய் ஒரு பாண் டும் ஷர்டும் வாங்கிவா" என்ருன். கந்தவேலன் வியப்புடன் பெருமாளை நோக்கிஞன். அதைவிடப் பெரும் வியப்பு மான்விழியின் விழிகளில் இருந்தது. அவள் தன் சகோதரனையும் பெருமாளையும் மாறி மாறிப் பார்த்தாள்.

தான் கண்டு பீதிகொள்ளும் பெருமாளா இங்குத் தன் சகோதர னுடன் வாஞ்சையுடன் பேசுகிருன். நம்ப முடியவில்லையே எனத் துடித் தாள் மான்விழி. கந்தவேலனை சைகை காட்டி உள்ளே அழைத்து, "அண்ணு உன் சிநேகிதனைக் கண்டால் எனக்குப் பயமாயிருக்கு அவனை வீட்டிற்கு வரச் சொல்லாமல் இருக்கமாட்டாயா?" என்று பயம் பொங்கக் கூறிஞள்.

கந்தவேலன் திடுக்கிட்டான். மான்விழியின் குணம் அவனுக்குத் தெரியும். யாரையும் அவள் குறைகூறமாட்டாள். எல்லோருடனும் வெள்ளை உள்ளத்துடன் பழகுவாள். சிரித்துச் சிரித்துப் பேசும் அவள் சீற்றங்கொண்டதை அவன் கண்டதில்லை. இப்போது அவள் பெருமாள் பேரில் குற்றஞ் சுமத்துகிருள்.

"மான்விழி, பெருமாள் என்ன செய்தான்? அவன் ரொம்ப தமா ஷான பேர்வழியாச்சே. அதனுடன் அவன்தான் இப்போது நண்பர் களுக்குள் எனக்கு ஆதரவு. நம் குடும்பச் செலவு எப்படி நடக்கிறது.

என நினைக்கிருய்? பிள்ளைப்பட்டு பெரிய மிராசுதாரின் மகன் அவன். ஒரே மகன். என்னுடன் காலேஜில் படிக்கிருன்......

"இருக்கலாம் அண்ணு எனக்கென்னவோ அவன் பார்வையும் பேச்சும் பிடிக்கவில்லை. நேற்று அவன் நடந்துகொண்ட முறை எனக்குப் பயத்தையே அளிக்கிறது..." என்ருள் மான்விழி. அவள் குரல் தழ தழத்தது.

கந்தவேலன் ஒருகணம் திகைத்தான். பெருமாளைக் குறித்து மான்விழி இப்படிக் குற்றஞ்சாட்டுகிருளே, மான்விழி பொய் சொல்லமாட்டாள். பெருமாளுடனே நூருண்டு பழகிய உணர்ச்சி இருக்கிறது. அவன் உதவியைப் பிரதிப் பலனின்றிச் செய்கிருன். நம்மால் எது நியாயம் என்று பகுத்தறிய முடியவில்லையே. பெருமாள் அப்படியென்ன தகாத முறையில் நடந்து கொண்டிருப்பான். "மான்விழி அவன் என்ன சொன்ஞன்? என்ன செய்தான் சொல்லேன். அவன் தமாஷ் பேர்வழி நண்பனின் சகோதரி யென்று உன்னிடம் ஏதாவது விளையாட்டாகப் பேசியிருப்பான்...... என்று மான்விழியைச் சமாதானப்படுத்த முயன்ருன்.

மான்விழி பளிச்சென்று கூறிவிட்டாள்: "அண்ணு, நான் இப்போது என்ன சொன்னுலும் உனக்கு ஏருது. அவன் உனது உயர் நண்பன். உங்கள் இருவர் நட்பையும் நான் பிளக்க விரும்பவில்லை. தயவுசெய்து அவனை வீட்டிற்கு வரமட்டும் சொல்லாதீர்கள்."

கந்தவேலன் உதட்டைக் கடித்துக் கொண்டான். அப்போது வெளியேயிருந்து, "கந்தவேலா டிரஸ் வந்துவிட்டது. உம், புறப்படு தங்கையுடன் அப்புறம் இரகசியம் பேசிக் கொள்ளலாம். வா, வா" என்று பெருமாள் கூவினுன்.

கந்தவேலனுக்கு ஒருவேலையும் செய்ய ஓடவில்லை. அவன் முகமெல் லாம் வியர்த்து விட்டது. "நான் ஒன்றும் வெளியே செல்லப்போவதில்லை என்று முணு முணுத்தவாறு சொல்ல முயன்ற கந்தவேலனை மான்விழி, தடுத்து "அண்ணு நான் சொன்னதற்கு நீங்கள் மனங்குழம்பி எங்கும் வெளியே போகாதிருப்பதற்கும் சம்பந்தம் இல்லை. நான் பெருமாளிடம் எச்சரிக்கையாய்த்தானே நடந்துகொள்ளுமாறு கூறினேன் என்னிடம் அவன் எப்படி நடந்து கொண்டான் என்பதைக்கூட நான் இன்னும் கூறவில்லையே. நீ எப்போதும்போல் பழகு. திடீரென அவனிடம் மனமாற்றங்கொள்ளாதே......" என்று மிகவும் கெஞ்சுங் குரலில் பேசி ஞள்.

கந்தவேலன் மெள்ள வெளியே வந்தான். இன்று அவன் பேசும் கூட்டம். காலையினின்று ஒன்றன் பின் ஒன்ருக ஏற்படும் மன நிலையில் அவன் என்ன பேசப் போகிருன். பெருமாள் கையில் பேண்டையும், ஷர்டையும் பிடித்தவண்ணம், "ஒரு நொடியில் இதை அணிந்து வர வேண்டும். திலிப்குமார் மாதிரி யிருக்கும் கிராப்பைச் சற்று வாரிக் கொள்ளேன்" என்ருன். அருகேயிருந்த நண்பர்கள் பெரும் நகைச்சுவை கேட்டதுபோல் நகைத்தனர்.

கந்தவேலன் உற்சாகம் அதிகமற்றவனுக இயந்திரம்போல் எல்லா வற்றையும் செய்து கொண்டு புறப்பட்டான். அப்போது பெருமாள் மலர்விழியின் பக்கம் திரும்பி, ஆனல் கந்தவேலனைப் பார்த்தவாறு 'உன் தங்கையும் சொற்பொழிவு கேட்க வரலாமே" என்ருன்.

"மன்னிக்க வேண்டும். அவளுக்குப் பரீட்சை இருக்கிறது." என்

ருன் கந்தவேலன். பெருமாள் அதிகம் வற்புறுத்தவில்லை. வெளியே நின்று கொண்டிருந்த புதிய பாண்டியாக் காரில் அனைவரும் ஏறினர்.

"ஒரு நிமிடம் இருங்கள். ஒரு சமாசாரம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்." என்று கந்தவேலன் காரினின்று இறங்கி உள்ளே நுழைந்தான்.

கந்தவேலன் நண்பர்களுடன் புறப்பட்டுச் சென்றவுடன் மான்விழியின் கண்கள் கலங்கின. இவ்வளவு துணிவுடன் அவள் கந்தவேலனிடம் ஏதும் புகார் செய்தது கிடையாது. தாய் இறந்து, தந்தையும் குடும்பத்தைச் சரிவரப் பராமரிக்காமல் போனவுடன் அண்ணன் கந்தவேலன் ஒருவனே தனக்காதரவு என்று அவள் நம்பியிருந்தாள். அவனுடைய நெருங்கிய நண்பனைப்பற்றி இப்படிக் குறைகூறினால் ஒருவேளை அவன் கோபித்துக்கொண்டு எங்காவது போய்விடுவானோ? காலை முதல் அண்ணா மிகக் குழப்பத்துடன் காணப்பட்டானே? தன் சொற்கள் வேறு சேர்ந்ததனால் அவன் இன்னும் குழம்பிப் போய்விடுவானோ? ஐயோ ஏன் திடீரெனப் பெருமாளைப்பற்றிச் சொன்னோம். பெருமாளைக் கண்டு நாம் ஏன் இப்படிப் பயந்து விட்டோம்...... பெருமாள் இந்தக் குடும்பத்திற்கு வேண்டியவற்றை உதவுவதாக அண்ணா சொன்னானே அண்ணன் அவனைக் கண்டித்தால் உதவி நின்றுவிடுமோ ?—

மலர்விழி பலவாறாக எண்ணினாள். எண்ணம் இதயத்தை வேதனைப் படுத்தியது. வேதனையின் வடிவமாகக் கண்ணீர் விட்டாள். முகத்தை மூடிக்கொண்டு விசும்பியபோது ஒரு குரல் கேட்டது.

'மலர்விழி ஏனம்மா அழுகிறாய்? உன் கண்ணில் நீர் வழிந்து நான் கண்டதில்லையே' என்று கனிவான குரலில் ஒரு பெண் குரல் எழுந்தது

ஸ்ரீமதி சௌந்தரவல்லி அம்மையாரின் குரல் அது. சௌந்தரவல்லி அம்மையார் அந்தக் குடும்ப நண்பர். வாரம் ஒருமுறை மான்விழிக்கு ஹிந்திப்பாடம் கற்பிக்க வருவார். கோதையும் சிறிது காலம் ஹிந்தி அவளிடம் கற்றுக் கொண்டிருக்கிறாள். தாய்க்குப் பின் மகள் அதைத் தொடர்ந்தாள். ஹிந்திப் பாடத்திற்கு முன் கொஞ்ச நேரம் ஊர் வம்பு நடக்கும். உலக விஷயம் பேசப்படும், பிறகு ஹிந்தி மான்விழி ஹிந்திப் பரீட்சை எதற்கும் போகப் போவதில்லை, இருந்தாலும் தாய் செய்ததைத் தான் தொடர்ந்து செய்யவேண்டும் என்பதற்காக ஹிந்தி வாத்தியாரம்மாவை தொடர்ந்துவரச் சொல்லியிருந்தாள்.

சௌந்தரவல்லி, மான்விழியின் அருகே அமர்ந்தாள், மான்விழி அவசர அவசரமாகத் தன் கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு, "வாங்க டீச்சர்" என்று வரவேற்றாள். குரலில் 'கொண கொணப்பு' காணப்பட்டது,

"என்னை டீச்சர் என்று கூப்பிடவேண்டாம் மான்விழி, நான் உன் சகோதரிபோல்: உன் மாமிபோல், மாமி என்று கூப்பிடலாமே... போகட்டும். ஏன் அழுகிறாய் மான்விழி, என்ன விஷயம்......?" மிகப் பரிவுடன் கேட்டாள் இந்தி வாத்தியாரம்மாள்:

"இல்லை டீச்சர், அழவில்லையே, கண்ணில் தூசி விழுந்துவிட்டது" என்று கூறி சிரிக்க முயன்றாள்.

"போக்கிரி, போக்கிரி பொய் சொல்றே." என்று செல்லமாக அவள் கன்னத்தைத்தட்டி, ஒரு வாரமாக எனக்கு வரமுடியவில்லை. அதனால் தான் நான் காலையிலேயே இன்று வந்தேன். மாதர் மகாநாடு ஒன்று நடத்தப் போகிறோம், அதற்கு வேறு ஏராளமான வேலை, அது

போகட்டும் நீ ஏன் ஒரு மாதிரியாக இருக்கிருய்?" என்று கேட்டும், மீண்டும் அவளிடமிருந்து உண்மையை வரவழைக்க முயன்ருள்.

சௌந்தரவல்லி குழைந்து குழைந்து பேசக் கூடியவள்: அவள் தூண்டித் துருவி கேட்கத் தொடங்கியதும் மான்விழி காலேயில் நடந்ததை அப்படியே கூறிவிட்டாள்.

"டீச்சர், இந்தப் பெரிய பங்களாவில் தனியே இருக்க எனக்கு இப்போதெல்லாம் ஏனே பயமாயிருக்கிறது அண்ணுவுக்குக் கஷ்டம் கொடுக்கிறேனே என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. குடும்பம் நடத்துவதற்குப் பணம் சேகரிக்க அண்ணு ரொம்பப் பாடுபடுகிருன். நான் அவனுக்கு ஒரு பாரமாக இருக்கிறேனே என்றுகூட எண்ணி வருகிறேன். எனக்குப் பரீட்சை அடுத்தவாரம் முடிந்து விடும். அதற்குப் பிறகு எனக்கு ஒருவேலே தேடித்தாருங்கோ டீச்சர். நான் இப்படிக் கேட்பதற்காகத் தவருக நினேக்காதீர்கள் டீச்சர்."— மான்விழி விம்மினுள்.

அவள் விம்மும் ஒலி காரினின்று இறங்கிய கந்தவேலன் செவிகள் வீழ்ந்தது.

அவள் கண்ணீர் வீட்டுக் கலங்குவது அவன் கண்ணில் பட்டது.

அவன் உடல் முழுமையும் ஒருவித வேகம்: மான்விழி கண்ணீர் விடுவதா?

"மான்விழி, மான்விழி" என்று கூவியவாறு கூடத்திற்குள் நுழைந்தான் கந்தவேலன்.

(தொடரும்)



திருவாரூர் திவ்விய க்ஷேத்திரமாகும். இத்தலத்தில் மகிமைகள் பல. இவ்வூரிலுள்ள தியாகேசர் கோயில் பிரம்மாண்டமானது. அதன் மேல் புறம் உள்ள கமலாலயம் என்ற திருக்குளமும் பிரம்மாண்டமானதுதான். அக்குளத்திலே சமீபத்தில் ஏராளமான பொருட்செலவில் புதிதாகச் செய்யப்பட்ட தெப்ப உற்சவம், நடைபெற்றது. கமலாலயத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம். —போட்டோ : டி. ஆர். ஆர்.




# அரங்கேற்றம்

ஸ்ரீமதி வைஜயந்திமாலா அவர்களைப் போஷகராகக் கொண்ட 'நாட்டியாலயா'வின் இரண்டாவது மாணவி குமாரி யு. இந்திராவின் அரங்கேற்றம் சமீபத்தில் ரஸிக ரஞ்சனி சபையில் நடைபெற்றபோது, நடனம் கண்டவர்கள் இது அரங்கேற்றமில்லை. ஒரு கச்சேரியே என்று பாராட்டும்படி அமைந்தது. குமாரியின் நடனம். மேற்படி விழாவிற்கு பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார்கள். சிறந்த ரஸிகர்கள், பொதுமக்கள் பத்திரிகையாளர்கள் நிரம்பியிருந்த சபையிலே குமாரி இந்திரா ஒருசில 'அயிட்டங்'களை கச்சிதமாக ஆடினார். ஃபரவி வர்ணத்தைக் குறிப்பிட வேண்டும். நல்ல லய ஞானமும் லாகவமும் கொண்டிருந்தது வர்ணம். 'யாரோ என்று எண்ணாமலே' என்ற பாடலிலும் 'எத்தனை சொன்னாலும்' என்ற பதத்திலும் கண்ட அபிநயச் சிறப்பு பிரமாதம். கேதார கௌள தில்லானா மிக விறுவிறுப்புடன் அமைந்தது.

பேராசிரியர் ஸ்ரீசாம்பமூர்த்தி பேசுகையில் பெரும்புகழும், பொருளும் படைத்த குமாரி வைஜயந்திமாலா அவர்கள் பரதநாட்டியத்தில் கொண்டுள்ள சிரத்தை பற்றியும் அவர் செய்துவரும் வித்யாதானச் சிறப்புபற்றியும் வெகுவாகப்பாராட்டினார். நாட்டியாலயா பள்ளி, தேர்ச்சிபெற்ற கலைஞர்களை அளிப்பது பற்றி பெரு மகிழ்ச்சி தெரிவித்தார். ஸ்ரீமதி வைஜயந்திமாலா சார்பிலே குமாரி இந்திராவிற்குக் குத்துவிளக்கொன்றைப் பரிசாக அளித்தார்.

விழாவிற்கு வந்தவர்களை மாலா துணை ஆசிரியர் த. ரா. ரா. வரவேற்றார். ஸ்ரீமதி வைஜயந்திமாலா அவர்கள் தன் அழைப்பிற்கிணங்கி வந்திருந்தவர்களுக்கும் தலைமை தாங்கிய பேராசிரியர் அவர்களுக்கும் நன்றிதெரிவித்துக்கொண்டார்.

# குமாரி இந்திராவின் அரங்கேற்றம்



சமீபத்தில் தொண்ணூற்றைந்து வயது பூர்த்தி பெற்ற சங்கீத கலாநிதி ஸ்ரீ வாஸுதேவாச்சாரியார் அவர்கள் மாலா போஷகர் இல்லத்திற்கு விஜயம் செய்தபோது எடுத்த படம். படத்திலே பெரியாருடன் போஷகரும், நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ எம். டி. ராமன் அவர்களும்

# பார்த்திபன் கனவு

கல்கி அவர்களின் மகோன்னத படைப்பான பார்த்திபன் கனவை சிறந்த திரை ஓவியமாக அமைத்தளித்துள்ளார்கள் ஜுபிலி பிலிம் ஸார். அமரர் கல்கியின் சரித்திரக் கதையின் உருவத்தை பாதிக்காமலும் அவரது வசனங்களையே பல விடங்களிலும் கையாண்டும், கதையின் சிறப்பைக் குலைக்காமல் எடுத்திருப்பதற்கு ஜுபிலி பிலிம்ஸாரை முதலில் பாராட்ட வேண்டும். அடுத்தபடியாக பிரமிக்கத்தக்க காட்சி ஜோடனைகளுக்காக அவர்களை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். ஏராளமான பொருட் செலவை பொருட்படுத்தாது காரிய சித்தியில் கண்ணாய் முனைந்ததற்கு தக்கபலன் அவர்களுக்கு கிட்டியுள்ளது. இவ்விஷயத்தில் ஓவியர் மணியம் பெரும் பாராட்டுக்குள்ளாகிறார். அவர் கைத்திறன் படமெங்கும் விளங்கி நிற்கிறது.

தமிழ் நாட்டு வாசக ரஸிக நேயர்களுக்கு பார்த்திபன் கனவுக் கதையை எழுதித் தெரிவிக்கவேண்டிய அவசியமேயில்லை.

சோழ அரசன் பார்த்திபனின் சுதந்திர சோழநாட்டு வேட்கையும் அதன் பலனாய்ப் பல்லவ சக்ரவர்த்தி மாமல்லருடன் பொருதலும், யுத்த களத்தில் வீரசுவர்க்கம் புகுமுன் மாமல்லரிடமே தன் கனவு நனவாகப் பெறும் வாக்குறுதி பெறுவதும் மாமல்லர் கொடுத்த வாக்குறுதிப்படி பார்த்திபன் மகன் விக்ரமன் விஷயத்தில் அக்கரை கொள்வதும் யதேச்சையாக சந்திக்கும் விக்ரமன், மாமல்லரின் அருமை மகள் குந்தவி இருவரிடை காதல் அரும்பி வளர்வதும். பூர்வாசிரமத்தில் சாளுக்கிய புலிகேசியின் சகோதரனாய் விளங்கிய நீலகேசி, காபாலபைரவனாய் விளங்கி மாமல்லர் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் செய்யும் சதிகளும் அவனுக்கு உடந்தையாய் விக்ரமனின் சிற்றப்பன் மாரப்பபூபதி சேர்தலும் மாமல்லரின் ராஜதந்திரம். ஆற்றலால் சூழ்ச்சிகள் பல உடைத்தெறியப்படுவதும் குந்தவி விக்கிரமன் காதல் வலுப்பெறுவதும் இறுதியில் கபால பைரவன், பூபதி இருவரும் முடிவு எய்துவதும் விக்ரமனுக்கு குந்தவியை அளித்து அவனுக்கு ஜன்ம தண்டனையையும், சுதந்திர சோழ நாட்டின் முடியையளித்து சிரதண்டனையையும் மாமல்லர் அளிப்பதும் இச்சரித்திரக் கதையின் சராம்சமாகும். கதையிலே படகோட்டி பொன்னனும், மனைவி வள்ளியும் விக்கிரமன், பார்த்திபனின் தேவி, சிவனடியார்க்கு உறுதுணையாக வருகிறார்கள். பரஞ்சோதி அடிகளும் இடம் பெறுகிறார்.

படத்திலே தோற்றப்பொலிவு கவர்ச்சிகரமான பேச்சு, மிகஉயரிய நடிப்பால் படம் பார்ப்பவர்களின் மனதிலே நிரந்தர இடம் பெற்று விடுபவர் வைஜயந்திமாலா அவர்கள்தான். இப்படம் அவருக்கு ஒரு தனிப் புகழை அளிக்கிறது. இதுவரை அவர் நடித்த தமிழ்ப் படங்களின் நடிப்பையெல்லாம் மிஞ்சி விடுகிறது இப்படத்திலே அவரது நடிப்பு. தகப்பனாரிடம் குழைந்து பேசும் போதும், குறும்பாகக் கேள்விகள் கேட்கையிலும், விக்கிரமனோடு காதல் காட்சிகளிலும், மாரப்பபூபதியைக் கடிந்து கொள்ளும் சமயங்களிலும் எந்த வித ரஸ பாவத்திலும் அவர் நடிப்பு பூர்ணமாய் சோபிக்கிறது.

அடுத்தபடியாக மாமல்லராக வரும். எஸ். வி. ரங்காராவ் அவர்

களது நடிப்பைக் குறிப்பிட வேண்டும். சிவனடியாராகவும், மாமல்லராகவும், வீரசேனன் என்ற ஒற்றர் படைத்தலைவனுகவும் நடிக்கும் இவரது நடிப்பு இயற்கையாகவேயுள்ளது. தோற்றமும் கம்பீரம் நிறைந்து சிறப்பாகவே உள்ளது. சிறந்த ராஜதந்திர நிபுணராகவும், வாத்ஸல்யம் மிகுந்த தந்தையாகவும் உதார குணபுருஷராகவும் குறையில்லாமல் செய்திருக்கிருர் இவர். பத உச்சரிப்புகள் விஷயத்தில் ஒரு சில இடங்களில் மட்டும் கொஞ்சம் என்னவோ போல் உள்ளது.

விக்கிரமனுக வரும் ஜெமினி கணேசன் வீரரஸக் கட்டங்களிலும், காதல் கட்டங்களிலும் சிறப்பாக பாத்திரத்தின் தன்மைக்கேற்றவாறு நடித்துள்ளார். காதல் கட்டங்களில் இவரது நடிப்பு அதிக சோபிதமாய் இருப்பதைக் குறிப்பிட வேண்டும். குந்தவி, மாமல்லர் இவர்களுடன் ஒப்பிடுகையிலே கதையில் இவரது பாகம் குறைவே. ஆயினும் படத்தின் சிறப்பிற்கு இவரும் பொறுப்பாளியாகிருர்.

மாரப்பபூபதியாக வரும் பாலய்யா விஷயத்தில் பூர்ணதிருப்தி என்று சொல்வதற்கில்லை. இதற்கு அவர்பொறுப்பு. அல்லது படத்தில் கோமாளிபோல் அவர் பாத்திரம் அமைக்கப்பட்டதுதான் மேலும் சோழ வம்சத் தொடர்பு பெற்ற அவர் சாதாரண வழக்குப் பாஷையில் சில, இடங்களில் பேசியிருப்பது பொருத்தமில்லை.

எஸ். வி. சுப்பய்யா படகோட்டி பொன்னனுக வந்து கொடுக்கப்பட்டுள்ள அளவில் திருப்திகரமாக நடித்துள்ளார். அவர் மனைவி வள்ளியாக வரும் ராகினி விஷயமும் அவ்விதமே. ஆயினும் மூலக்கதை அளவு முக்கியத்துவம் இவ்விரு பாத்திரங்களுக்கும் படத்தில் அளிக்கப்படவில்லையென்றே தோன்றுகிறது.

பார்த்திபனுகவரும் அசோகன் மரணத் தறுவாயில் மாமல்லருடன் சம்பாஷிக்கும் கட்டத்தில் சிறப்பாக நடித்துள்ளார்.

படத்திலே சிவகாமியாக வரும் கமலா லக்ஷ்மணனது நாட்டியம் படத்திற்கு சோபையளிக்கிறது. கடவுளிடம் தன்னை அர்ப்பணிக்கும் கட்டத்தில் மிக சிறப்பாக உள்ளது நடனம். மற்றபடி சில்லரைப் பாத்திரங்களில் வரும் சரோஜாதேவி, பாலாஜி, பட்டுஅய்யர், ஜாவர் சீதாராமன் முதலியவர்களும் திருப்திகரமாய் நடித்துள்ளனர். கபாலபைரவனுக வீரப்பா திறம்பட நடித்துள்ளார். விந்தன் வசனம் சோடையில்லாமல் உள்ளது.

பாடல்களை கண்ணதாசன், மருதகாசி முதலியவர்கள் இயற்றியுள்ளனர். ஓகோ என்று இல்லாவிடினும் செவிக்கின்பம் பயப்பவல்லவையா யுள்ளன. வேதாவின் சங்கீத டைரக்ஷன் திருப்தியாக உள்ளது. ஒளி, ஒலிப் பதிவுகள் சிறப்பாயுள்ளன. கதாபாத்திரங்கள், டைரக்டர், பல்துறை நிபுணர்களை தெரிவிக்கும் 'title' நூதனமுறையிலமைந்திருப்பது பாராட்டுக்குரிய விஷயம். மணியம் இவ்விஷயத்திலும் பாராட்டுக்குள்ளாகிருர்.

மொத்தத்தில் தயாரிப்பாளர்கள் பெருமைகொள்ளக்கூடிய படைப்பே இப்படம். மகோன்னதமான காட்சி ஜோடனைகள். நக்ஷத்திர நடிகர்களின் நக்ஷத்திர நடிப்புகள் கொண்ட தரமான இப்படத் தயாரிப்பாளர்கள் பாராட்டுக் குரியவர்களே.

த. ரா. ரா


# " மாலா "

கலை இலக்கிய மாத இதழ்.

தனிப்பிரதி அணு 0—4—0
வருட சந்தா ரூ 3—0—0

மானேஜர் 'மாலா'
சென்னை-18.

நமது அரிய
நண்பன்

**MODEL 0322**

- ஆறு வால்வ்
- எல்லா அலைகளும்
- மூன்று பாண்டு
- AC அல்லது AC/DC
(இரண்டு மாடல்கள்)
- ரூ. 375-00 நிகர விலை
விற்பனை வரி தனி




# murphy radio

இல்லத்தை மகிழ்விக்கிறது

MURPHY RADIO OF INDIA LTD., BOMBAY 12

## சங்கீதக் கச்சேரி

ராஜா அண்ணுமலேபுரம் சங்கத்தின் ஆதரவில், ராமநாதபுரம் கிருஷ்ணன், மேமாதம் 28ம் தேதி, ஓர் இன்னிசை விருந்து அளித்தார். கச்சேரிக்கு அனேக இளம் வித்வான்களும். ரஸிகர்களும் குழுமி இருந்தனர். ஸஹாஞ வர்ணத்துடன் தொடங்கிய கச்சேரி உடனே களேகட்டிவிட்டது. அடுத்து பூர்ண சந்திரிகா, ஐயமனேஹரி, பூர்விகல்யாணி, இவைகளில் கீர்த்தனேகள், பிரத்யேகமான முறையில் பாவ ஸ்பூரிதமாய் வழங்கப் பட்டது. அடாணுராகமும், அதில் அமைந்த "ஏபாபமு ஜேஸிதி", என்னும் தியாகராஜ கிருதியும், மிக உருக்கமாய் இருந்தது. வராளிராகமும், 'மரகதமணி' என்னும் தியாகராஜ கீர்த்தனேயும் வெகு நேர்த்தியாக இருந்தது. பிறகு, பதம் ஜாவளிகள் தில்லாஞ, எல்லாம் பிகு சுருவுடனும், ரஞ்சகத்துடனும் மிளிர்ந்தன. பூர்ணசந்திரிகா தில்லாஞவும் 'வானிபொந்து' 'ஸமயமிதே' இந்த உருப்படிகளும். மிக எழிலுடன் வழங்கப்பட்டன. ஸ்ரீ ராகத்தில் அமைந்த 'மாயனே', என்னும் திருப்பாவையுடன் கச்சேரி முடிவடைந்தது. கச்சேரிக்கு பக்க ஸஹாயமாய் பாப்பா வெங்கட் ராமையாவின் குமாரர் வி. தியாக ராஜன் வயலினும், ராமநாதபுரம் ராகவன் மிருதங்கமும் வாசித்துச் சிறப்பிக்கச் செய்தனர்.

மதங்கர்

---

## அட்டைப் படம்

கோடை கால வெப்பம் மறந்து இன்பம் பெற்று விளங்க விழையும் தம்பதிகள் கோடை வாசஸ்தலமொன்றிற்கு வருகிருர்கள். கவின்மிகுகாட்சிகள் அவர்களுக்கு பேரானந்தம் விளேவிக்கின்றன. தன் அழகிய மனேவியை இந்தக் காட்சியை பின்னணியாகக் கொண்டு படம் எடுக்க விழைகிருன் கணவன். மனேவியும் அவன் விருபத்திற்கேற்ப 'போஸ்' கொடுத்து அமர்ந்திருப்பதை சைத்ரீகர் சித்தரித்துள்ளார்.



# சங்கீதப் போட்டி

மதுரையை ஆண்டு வந்த பாண்டியனொருவன் சபையில் சங்கீதப் போட்டி ஒன்று நடந்தது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ள சங்கீதவான்கள் பலர் வத்திருந்தனர். வட நாட்டிலிருந்தும் ஒரு வித்வான் வந்தார்.

வழக்கப்படி அரச சபை கூடினது. வித்வான்கள் தங்கள் சங்கீத பாண்டித்யத்தையும், புகழையும் அரசர் முன் ஒவ்வொருவராகத் தெரிவித்து, வணங்கி ஆசனத்தில் அமர்ந்தனர்.

வட நாட்டிலிருந்து வந்த வித்வான் கடைசியாகத் தன் பாண்டியத்தையும், புகழையும் கூறி, தான் அரச சபை வித்வானிடம் போட்டியிட்டு வெற்றிபெற்றால், அவ்வித்வான் தனக்கு அடிமையாகவேண்டும் என்றும், தானே அன்று முதல் அரச சபை வித்வானாக விளங்க வேண்டுமென்னும் கேட்டான்.

அரசன் கலகலவெனச் சிரித்து "சங்கீத வல்லுனரே. எம் அவை சங்கீத வித்வான். சொக்கநாதரிடம் பயிற்சிப் பெற்றவர். மகா மேதை. அவரை வெல்ல உம்மால் முடியாது. எனவே, உமது போட்டியை சபையின்கண் வந்திருக்கும் வித்வான்களிடம் நடத்தி வெற்றி பெறும். பிறகு அவை வித்வானிடம் போட்டிப் போடலாம்!" என்று கூறினார்.

ஆனால், வட நாட்டு வித்வான் அரசரின் ஆணையை மறுத்து, முதலில் அவை வித்வானிடம் தான் போட்டி போடுவேனென வாதிட்டான்.

அவை வித்வான், பழுத்த சிவ பக்தர். அவர் ஆசனத்தைவிட்டு எழுந்து அரசரை வணங்கி "அரசே! போட்டியில் கலந்துகொள்ள என்குருநாதனை நாளைய தினம் சபைக்கு அழைத்து வருகிறேன். அவரைப் போட்டியில் இவ்வித்வான் வென்றால், நானும் இவருக்கு அடிமையாகி விடுகிறேன்!" என்றார்.

இதற்கு வட நாட்டுவித்வானும் சம்மதித்தார்.

மறு நாள் போட்டி நடப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அரச சபை வித்வான், சபையை விட்டு நேரே சொக்கநாதப் பெரு

20834

மான் ஆலயத்துக்குச் சென்று பெருமானிடம் சொல்லி, தொழுது, வாய்விட்டு கதறி. கண்ணீர் பெருக நின்றார்.

"அன்பரே, அஞ்சாதீர்!... நாமே நாளையதினம் உம்முடன் அரச சபைக்கு வந்து, உமது குருவாக நடித்து, அந்த வித்வானை உமக்கு அடிமையாக்குவோம்!" என அசரீரியாகப்பார்வதிநாதன் பகன்றார்.

மறுநாள் அரச சபை கூடியது. அரச சபை வித்வான் வாயிலிற் நின்று சொக்கேசனை எதிர்பார்த்து ஏங்கினார். திடீரென அவர் எதிரே ஒரு கிழவர் தோன்றி, "அஞ்சாதே! வா, சபைக்குள் போவோம்!' என்று வித்வானை கைப்பிடித்த வண்ணம் சபையில் சென்றார்.

சபை கூடியது. அரசர் ஆசனத்தில் அமர்ந்ததும், சபை வித்வான் தன் குருவை அரசருக்கு அறிமுகம் செய்தார். வடநாட்டு வித்வான் அப்பெரியாரைப் பார்த்து எள்ளி நகைத்தார். போட்டி ஆரம்பமானது. வடநாட்டு வித்வான் சொக்கநாதப் பெருமானின் சாமவேதப் பாடல்களின் பொருளறியாது, இசையறியாது தலைகுனிந்து, 'நான் தோற்றேன் !... நான் உங்கள் அடிமை!... என்னை ஆட்கொண்ட ஐயனே!...... மதுரையம்பதியே! தங்களையறியாது போட்டியிட்டதற்காக மன்னியுங்கள்!' என சிவபெருமானின் காலில் விழுந்தார். எங்கும் நிறைந்த எம்பெருமான் மறைந்தார். சபையே நடுங்கியது. அரசர் கண்ணீர் மல்கி, 'கருணாமூர்த்தி, உன்னையும் என் அவையில் பரிசோதித்தேனே!... மன்னியுங்கள் !...'' என்று வணங்கி கரங்கூப்பி நின்றார்.

பிறகு, வடநாட்டு வித்வான், அவைப் புலவருக்கு அடிமையானார்.

—சுப்பு

எம். ஏ. வி. பிச்சர்ஸார் கேவா கலரில் தயாரிக்கும் 'சிவலீலா' என்ற படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

Mg. Editor & Publisher: M. D. Raman, Southern Avenue, Alwarpet, Madras-18
Edited and Printed by S S. Sarma at Sri Sudarsan Press,
111/33, (Congress Bldgs) Teynampet, Mount Road, Madras-6.
Associate Editor: T. R. Rajagopalan (Tha. Ra Ra.)

பூவைப் போல...
உங்கள்
மேனியை
மலரச் செய்வது
ரெக்ஸோனா
ஆம், நாள்தோறும் தவறாமல் ரெக்ஸோனா உபயோகித்தால், உங்கள்
மேனி அதிக சோபையும். புதுமலர்ச்சியும் பெற்றுவரும்!
ஏனெனில், நறுமணமுள்ள ரெக்ஸோனா ஒன்றுதான் கேடில் கலந்த
சோப். சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்களின்
விசேஷக் கலவையே கேடில். ரெக்ஸோனாவின்
இணைபிரியா நறுமணமும், செழிப்புமிக்க,
மென்மையான நுரையும் உங்களுக்கு
இன்பமூட்டுபவை; அழகு தரும் இந்த
சோப்பை தினந்தோறும் உபயோகியுங்கள்.
ரெக்ஸோனா உங்கள் இயற்கை அழகை
வெளிக்கொணரத் துணைபுரியும்!
Rexona
BLENDED WITH CADYL
- கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.
RP. 146-50 TM

WE CLAIM

There has never been and there will never be a second

VYJAYANTHIMALA

so dynamically dramatic and so excitingly beautiful as she is i

RAWAL FILM'S

# College Girl

with College Boy **SHAMMI KAPOOR**

... A Film EVERY GIRL will be proud of

... A show EVERY BOY will run after

*Music :* **Shanker-Jaikishen.**

*Direction :* **T. Prakash Rao.**

*Screenplay, Dialogues — Ly* **Rajinder Krish**

SRI SUDARSAN PRESS, MADRAS 6